கலை இலக்கிய இதழ்

# காற்றுவெளி



ஐப்பசி - 2020

காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்

ஐப்பசி - 2020

ஆசிரியர் : சோபா

வடிவமைப்பு : நெகிழன், 7904748374

படைப்புகள் அனுப்ப : R.Mahendran,
34 Redriffe Road, Plaistow,
London, e13 0JX, UK

மின்னஞ்சல் : Mullaiamuthan16@gmail.com

நன்றி : இணையம்

படைப்புக்களின் கருத்துக்களுக்கு படைப்பாளர்களே பொறுப்பு.

# வணக்கம்,

ஐப்பசி மாத இதழுடன் சந்திக்கிறோம்.

மொழிபெயர்ப்புச் சிறப்பிதழை,அதனைத் தொடர்ந்து வந்த புரட்டாதி மாத இதழை படித்தவர்கள் அநேகர் என்றே அறியமுடிகிறது.பலரையும் சென்றடைந்திருக்கிறது என்ற ஆனந்தம் அதிகமும்தான். ஆனால் அச்சிதழ் எனும் பேச்சு வருகையில் பலரின் மௌனமே அச்சிதழ் பற்றிய ஆர்வத்தைச் சிதறடித்துவிடவே செய்கிறது.பலரும் இலவசங்களையே அதிகம் விரும்புகிறார்கள் போலும் என நினைக்கத்தோன்றுகிறது.நமது புலம்பெயர் சூழலில் பத்திரிகைகள்,சிற்றிதழ்கள் இலவசமாகவே விநியோக்கப்படுகிறது.அதனால் அவை விளம்பரங்களை கொஞ்சமாவது நம்பியிருக்கவேண்டிய நிலையில் சிற்றிதழ்களின் வாழ்வும் சுருங்கியே விடுகிறது.தமிழில் சிற்றிதழ்களின் வருகை அதிகமாகவேஉள்ளன.சிற்றிதழ்களின் மீதான நம்பிக்கை அல்லது கரிசனை சற்றே அதிகமாகவும் உள்ள சூழலில் புதியவர்களின் வருகையும் அதிகமாகவே உள்ளதை காண்கிறோம்.உத்வேகமான உணர்வும் உள்ளது.

நம்பிக்கையான எதிர்காலக் கனவுகளுடன் எழுதவரும் படைப்பாளர்களையும் வரவேற்போம். அவர்களுக்கான களம் அமைத்துத் தரும் சிற்றிதழ்களையும் தொடர்ந்து வெளிவர வாசகர்கள் உதவவேண்டும்.

காற்றுவெளியும் காத்திருக்கிறது.

நட்புடன்,

சோபா

● ஷர்ஜிலா யாகூப்



# ஹைக்கூ கவிதைகள்

தூங்கிய மரத்தடியில்
விட்டுச் செல்கின்றேன்
பூக்கள் வரைந்த தடம்

❒

புல்லாங்குழல் ஊத
பட்டிக்கு திரும்புகின்றன
இடையனின் ஆடுகள்

❒

உதயமாகும் நிலவை
வருடிய படி
கரையோர நாணல்கள்

❒

கூடு திரும்பாத பறவைகள்
புயலில் விழுந்து கிடக்கும்
பெருமரம்

❒

மூழ்கிய மரத்தின் உச்சி
வெயில் காய்ந்தபடி
கூடிழந்த பறவை

● கனகசபாபதி செல்வநேசன், அல்வாய்



# துளியும் கடலும்

கரை கடக்க முடியாமல்
மீண்டும் கடலுக்குள் முடங்கும்
அலைகளின் ஏமாற்றத்தை
ரசித்துக்கொண்டிருக்கின்றன
வளையிலிருந்து வெளிவந்த
கரையோரத்து நண்டுகள்.

ஆழியை ஆரத்தழுவிய தென்றலின்
சுதந்திர சுவாசத்தில்
தடம் பதித்த சுவடுகளை
யுத்தம் தின்ற சிதைவுகள் விலக்கித்
தேடிப் பார்த்தும் கிடைக்காமல்
கனத்துக் கிடக்கிறது மனசு.

வலைவீசி வறுமை போக்கி
மூழ்கிச் செழித்த வாழ்வியலின்
வசந்த காலங்கள்
வஞ்சக வக்கிரகங்களால்
களவாடப்பட்டு
பாலைவனமாய்ச் சுடுகின்றன.

அதோ
கரு மேகங்கள் சூழ்ந்து
இருண்டு கிடக்கும்
வானம் நோக்கி
மேலேழும்புகின்ற அலைகள் மீது
நந்தினியால் கொல்லப்பட்ட
ஆதித்திய கரிகாலனின் உடலம்
வான் பார்த்து திறந்த விழிகளோடு...?!
மின்னல் கிழித்த பாதைவழியே
மீண்டுமொரு வசந்தத்தை எதிர்பார்த்திருக்கும்
இதயத்தின் ஏக்கங்கள்
கண்களின் வழியே சிறு துளிகளாய்
கடலில் கலக்க;
உணர்வுகள் தூண்டிய
நரம்புகளில்
மீட்டப்படுகிறது பாடல்
"முந்தி எங்கள் பரம்பரையின் கடலம்மா - கரை
முற்றும் நாங்கள் குடியிருந்த மடியம்மா..

# பாரியன்பன் - கவிதைகள்



உதிர்ந்த பூக்கள்
காம்பில் சேராது
சிதறிய சொற்கள்
வார்த்தையில் ஒட்டாது
கழிந்த காலங்கள்
திரும்ப வராது
கறந்தபால் மீண்டும்
மடி புகாது
விலகிய தீபம்
திரியில் அமராது
சிதைந்த இதயம்
பழைமை அடையாது
விழுந்த அருவி
துள்ளி எழாது
வடிந்த குருதி
நாளம் சேராது
தாயின் கருவறை
திரும்ப சேர்க்காது
வானத்து நிலா
தரை இறங்காது
ஆதவன் நாளும்
திசைமாறி உதிக்காது
பார்வைக்கும் பிடிக்கும்
காற்று அகப்படாது
ஆழிக்கடல் கரை வரும்
அலைகளை நிறுத்தாது
சாது மிரண்டால்
காடு கொள்ளாது
இவை அத்தனையும்
சாத்தியப்படும் சத்தியப்படும்
அன்பே நீ
என்னுடன் இருக்கையில்..!

❐

இந்தப் பாதையை
நான் கடக்கின்ற தருணம்
ஒரு பேரிரைச்சல்
என் செவிப்பறைக்குள்
சூல் கொள்ளலாம்.
நிச்சயம்
ஒரு மௌனத்தை சுமந்து
என்னை கடக்க விடாது
இப்பிரபஞ்சம்.
எதையும்
தீர்மானிக்கும் பக்குவம்
என் சிற்றறிவுக்கு
எட்டி விட்டால்
என்னை சாட்சியமற்ற
கடவுளென்று பிதற்றுவேனென
நீங்கள் எண்ணிச் சரியாமல்
இருங்கள்
எனக்கது போதுமானது.



• யாழ் ராகவன்

ஒவ்வொரு விதத்திலும் ஆச்சரியம் கொட்டிக்கிடக்கும்
கடலில் ஆயிரம் உண்டு
ஆனாலும் அந்த ஒன்றில் மட்டுமே
நீ மையம் கொண்டிருக்கிறாய்

தீபத்தின் சுடரில்
அகலவிரியும் வெளிச்சத்தின்
கோலங்களை சட்டை செய்யாத நீ
அனைத்து விடவே ஆர்வம் கொள்கிறாய்

காதிருக்கும் நொடிகளில்
மனதில் பூக்கும்
கனவு மலர்களின் கிளர்ச்சியில்
சஞ்சாரம் செய்யும் பொழுதிலும்
கற்பனை சிறகுகளின் ஊர்வலம்
தரும் போதையில் தள்ளாடிய போதிலும்
நிஜத்தில் தேள் கொட்டியது போல் உனது இருத்தல்

எனது இருளில் மிளிரும்
நிலவானவன் நீ
எனது பன்மைகாணும் நாளை
இப்பிறவியில் காண்பேனா...

● வட்டக்கச்சி வினோத்

# மனக் கவலைகள் மறையுமா

மதுக் குவளைகளில் நிறையும் போதையில்
மனக் கவலைகள் மறையுமா
மாந்தர் நிலைமைகள் மாறுமா
மறுபடி துன்பம் சேருமா
சோகத்தின் போதை போதாதா
இந்த நரகம் விட்டு வாதோழா
கந்தகம் கலந்த தேசத்தில்
கஞ்சாவில் அழிவது சோகத்தில்
தேசியம் வாழ்ந்த இடத்தில்
காச்சிய சாராயம் போத்தலில்
மாற்றத்தை வேண்டி மாண்டவர் உடலில்
சத்தியம் செய்யுங்கள்
குற்றத்தை கூட்டும் போதையை அழிக்க
ஒன்றாய் சேருங்கள்
மதுவை உங்கள் கைகளில் தந்தால்
தூக்கி வீசுங்கள்
குடிக்கும் தாகம் அதிகம் இருந்தால்
நீரைப் பருகுங்கள்
தமிழர் தாகம் அடையும் வரை
ஒயாது போராடுங்கள்
இடையில் வந்த போதை வேண்டாம்
ஒதுக்கி வையுங்கள்
மதுக் குவளைகளில் நிறையும் போதையில்


மனக் கவலைகள் மறையுமா
மாந்தர் நிலைமைகள் மாறுமா
மறுபடி துன்பம் சேருமா
சோகத்தின் போதை போதாதா
இந்த நரகம் விட்டு வாதோழா
கந்தகம் கலந்த தேசத்தில்
கஞ்சாவில் அழிவது சோகத்தில்
தேசியம் வாழ்ந்த இடத்தில்
காச்சிய சாராயம் போத்தலில்
மாற்றத்தை வேண்டி மாண்டவர் உடலில்
சத்தியம் செய்யுங்கள்
குற்றத்தை கூட்டும் போதையை அழிக்க
ஒன்றாய் சேருங்கள்
மதுவை உங்கள் கைகளில் தந்தால்
தூக்கி வீசுங்கள்
குடிக்கும் தாகம் அதிகம் இருந்தால்
நீரைப் பருகுங்கள்
தமிழர் தாகம் அடையும் வரை
ஒயாது போராடுங்கள்
இடையில் வந்த போதை வேண்டாம்
ஒதுக்கி வையுங்கள்

# வலம்புரி லேனாவின் கவிதைகள்



அலைமோதும் அலையென
அலைந்தது திரிந்து
அதிகமாய் தேடப்பட்டது..
அருகிலேயே இருந்தது

❒

ஆதாரமில்லாமல்
வாழ்க்கையை ஆரம்பித்தான்

இப்போது
ஆதாரமாய்...

பெயர்கள் மட்டும்
மாறியுள்ளன

❒

அதே இடம்
அதே பேருந்து
அதே வாழ்க்கை

❒

விஷமென்றாலும்
துளி-யில்தான்
பிரவாகமெடுக்கிறது

❒

யாருக்கேனும்
பொருத்தமாய்
அமையுமென்றே
உருவாக்குகிறார்
காலணி செய்பவர்

❒

ஆரம்பித்த புள்ளிக்கே
புள்ளிக்கே அடைக்கலமானது
மனசு
மீண்டும் ஆரம்பிக்க

● சசிகலா திருமால், கும்பகோணம்.

# காக்கைகள்

விரத நாட்களுக்கென்றே
சிறப்பாய் படைக்கப்பட்ட
ஓர் உயிரினம்..
முக்திப் பெற்ற நம் முன்னோர்களை
காக்கையின் வடிவில்தான் காண்கிறோம்
அமாவாசையன்று..
அது ஏனோ தெரியவில்லை
உயிரோடிருக்கும் போது போடாத சோற்றை
மாதமொருமுறை மறவாமல் போட்டு விடுகின்றோம்..
பித்ருதோஷம் அண்டிவிடக் கூடாதென்ற
சுயநலம் தன்னில்..

கா..கா..வென.. மூச்சு முட்ட கத்தி
வாராத காக்கைதனை
வருந்தி வருந்தி அழைத்து
பசியாற படையல் வைக்கின்றோம்..
மற்ற நாட்களில் காகம் கரைகளில்
ச்சீ.. சனியனே.. ஏனிப்படி கத்துற என்று
வசவு சொற்களை வீசி விரட்டியடிக்கிறோம்..
அமாவாசையன்று நாம் அழைக்கையில்
காக்கையும் நம்மை
அப்படிதானே நினைத்திருக்கும்..
தேவைப்படும் போது தேவகானமாகவும்
தேவை தீர்ந்தப்பின் இரைச்சலாகவும் கேட்கும்
காக்கையின் ஒலிதனில் ஒளிந்திருக்கிறது
மனிதனின் சுயநலமொன்று..



**சிறுகதை** **● மயில் மகாலிங்கம் - வெர்ளின்**



# அரசுமரம்

மணியண்ணரின் வளவின் உள்ளே ஒருமூலையில்,வீதியின் ஓரமாக பசுமைப்பொலுவுடன் ஓங்கிவளர்ந்து கிளைகள் பரப்பி வாலைக்குமரிபோல் மதாளித்து நின்றது அந்த அரசுமரம். தென்றல் காற்று வீசும்போது,கட்டிளம் குமரியாய் சிலுசிலுத்து நளினம் காட்டும்.தன்னை யாருமே தொடமுடியாது என்ற தினாவெட்டு அதற்கு.பௌத்தத்தின் புனிதமரம் என்ற பெருமையாக இருக்கலாம்.

மணியண்ணர் இயற்கை நேயன்.தேவையில்லாமல் தாவரங்களின் கிளைகளைக்கூட தறிக்கமாட்டார்.வளவு நிறைந்த சகல கனிதருமரங்களும்,செடிகொடிகளும் அவரது வளவிலுண்டு. பயிர்பச்சையுடன் பாசமுடன் கதைத்துக்கொள்வார்.பார்ப்பவர்கள் பைத்தியக்கார மணியண்ணர் என சிரித்துக்கொள்வர். "இந்த மனிசனுக்கு அறள பெயர்ந்திற்றுது" என்று மனைவியே புறுபுறுத்துக்கொள்ளும்.மணியண்ணர் எவரது நையாண்டிநளினங்களையும் காதில்

வாங்கிக்கொள்வதில்லை.தானுண்டு தன்வேலையுண்டு என்றிருப்பார்.

சிறியவளவுதான்; ஆனால் ஒரு அங்குலத்தையும் வாழாவெட்டியாய் மலடாகவிட்டதில்லை: வெங்காயம்,மிளகாய்,கத்தரி,வெண்டி, பயற்றை, புடல், பாகல் என பலலினப் பயிர்கள் பயிரிட்டிருப்பார். காட்டுத்தும்பை,முல்லை,கானாந்தி போன்றனவும் வளவை அலங்கரிக்கும்.முசுட்டை,சிறுகுறிஞ்சான் கொடிகள் வேலியில்முக்காடிட்டு படர்ந்திருக்கும்.முருங்கை மூலைக்குமூலையுண்டு.கிணற்றைச்சுற்றி,இலச்சவெட்டை,எலுமிச்சை,தோடை,வாழை போன்றனவும் கிணற்றை அலங்கரிக்கும்.

அரசுமரம் கிளைவிட்டு வளரவளர மணியண்ணர் மனதிலும் அதன்மீது இனம்புரியாத வெறுப்பு தளிர்விட்டது.அதன் பரவலின் ஆதிக்கம்,பயிர்களுக்கு நிழல் கொடுத்ததால் பயிர்கள் பூக்க,காய்க அடம்பிடித்தன.அதன் பழுத்த இலைகள்சொரிந்து சருகாகி விசமம் செய்தன.

நீண்டநாட்களாக அவரது மனதில்டுசீடு என்ற அலுப்பான வெறுப்பு துளிர்விட்டது.பயிர்களுக்கு இடையூறுசெய்த கிளைகளை கழைந்தாலென்ன என்ற யோசனை எழுந்தபோது,உறவினன் யோகன் அவரை எச்சரித்தான். "அண்ணர்! இது லேசான காரியமில்ல;கோணேசர் கோயிலில கோபுரத்தை மறைத்த கிளையை வெட்டினதால,கோயில் நிருவாகத்தின்மேல வழக்கு பாய்ஞ்சிருக்கு தெரியும்தானே. அரசுமரம் சாதரண மரமல்ல; அதில கத்தி பட்டா அவ்வளவுதான்; சட்டம் சீறிப்பாயும்" என்று தன்மனதில் தோன்றியவற்றைச் சொன்னவுடன்;சிலிர்த்துப் விதுவிதிர்த்தார் மணியண்ணர்.

"நல்லவேளடா,நீ சொன்னது."

உண்மையும் அதுதானே.அரசுவின் அரசு. இந்தச்சிந்தனை மணியண்ணர் மனதை ஊழிக்காற்றாய் அலைக்கழித்தது.படிப்பறிவற்றவர். என்ன ஏது செய்வதென்று மனம் அல்லாடிக் கொதியுலையாயிற்று. அதனையும் பொலீசில் போய் நிலைமையை விளக்கமாய் எடுத்துச்சொல்லி அனுமதிகேட்டாலென்ன என்று யோகனிடம் கேட்டபோது,அதனையும் யோகன் மறுதலித்தான்.

" அண்ணன்! பொலீஸ் கடைசிவரையும் அனுமதிக்காது.சும்மாயிருக்கிற சங்கை ஊதிக்கெடுக்கிற கதையாப்போகும்.மணியண்ணருக்கும் அது சரியென்றேபட்டது

அடுத்தநாள்.. பயிர்களுக்கு நீர்பாய்ச்சலாமென்று வீட்டுக்குள்ளிருந்து வெளியேவந்த மணியண்ணருக்கு, வீசியகுளிர்காற்று ஒரு சாங்கமாயிருந்தது. சந்தேகத்துடன் வானத்தை அண்ணாந்து பார்த்தார்.இருள் கவ்வி கருமேகம் கவிந்து,பெறுமாத கர்ப்பிணி போல் கோலம்காட்டி தோன்றியது. தொடுவானத்தே தூரத்தில் மின்னல் ஒளிர்ந்து கட்டியம் கூறியது.

"மழை இறங்கப்போகுது போல" என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டார். அக்கணமே வானிலை அறிக்கையும் ஒலிபரப்பாயிற்று. இன்று,வானம் மழை மூட்டமாக இருக்கும்.சிறு சூறாவளியுடனான காற்று வீசக்கூடும்.இடி,மின்னலுடன் கூடிய மழையை எதிர்பார்க்கலாம். மீனவர்கள் கடலுக்கு செல்வதைத் தவிர்க்கவும்"என எச்சரித்தது.

அதே நேரம்பார்த்து யோகனிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. "மணியண்ணே; இன்றைய வானிலையறிக்கை கேட்டீங்களா? நான் இன்னும் கொஞ்சநேரத்தில அங்க வாறன். மண்வெட்டி கோடாலிகள எடுத்துவையுங்க வந்து சொல்லுறன்.

மணியண்ணருக்கு எதுவுமே புரியவில்லை. ஏனென்று கேட்க வாயெடுத்தபோது யோகன் போனை துண்டித்துவிட்டான். மணியண்ணர் எதுவும் புரியாமல், யோகன் கேட்டுக்கொண்டபடி தளபாடங்களை எடுத்து வாசலில் வைத்தார். திடுதிப்பென மின்னல் பளிச்சிட, செவிட்டில் அறைவதுபோல இடி முழங்கியது. கடுமையான குளிர்காற்று வீசத்தொடங்கிற்று. டுஇண்டைக்குத் தான் வானில அறிக்க மெய்ப்படப்போகுதுடு எனமனதுக்குள் நினைத்துச் சிரித்துக்கொண்டார்.

யோகன் சொன்னபடி, மழையில் சொட்டச்சொட்ட நனைந்தபடி வந்துநின்றான். தன்யோசனையைச் யோகன் சொன்னபோது, மணியண்ணர் விதுவிதிர்த் துப் போனாராயினும் புழுகப்பட்டார். முருகனை நேர்ந்துகொண்டார்:

"அண்ணர், அரசுமரத்து அடியை வளைச்சு தோண்டி, ஆணிவேரை தறிச்சுவிடுவம், மற்ற பெரிய கிளைவேர்களையும் முடிஞ்சளவுக்கு கொத்திவிடுவம்.

வீசப்போற சூறாவளியில மரம் தாக்குப்பிடிக்காம வேரோட சாயும்; ஆருமே உங்கள ஒண்டுமே புடுங்கேலாது"

யோகன் தன் யோசினையைச் சொன்னபோது மணியண்ணரின் காதில் வேணுகானம் ரீங்காரமிட்டது. நாடி நரம்பெல்லாம் புடைத்தன; சுழல்காற்றை விட வேகமாய் இரத்தம் பீறிட்டுப்பாய்ந்தது. இருவரும் உத்வேகத்துடன் செயலில் இறங்கினர். காற்றுமழை நிமிர்த்தம் வீட்டருகேயிருந்த வீதிகள் ஆளரவமின்றி வெறிச்சோடிக்கிடந்தன. மணியண்ணரின் மனைவிக்கு இருவரின் செயல் காரணம்புரியாததால், லூசுத்தனமாகத் தெரிந்தது. அவ கேட்டதுக் கும் பதில்கூறாமல் ''கொஞ்சம் பொறு புரியும், இப்ப சுடச்சுட நல்ல பிளேன் ரீ போட்டு கொண்டுவா" என்றுவிரட்டினார். டுவிசர் புடிச்சதுகள்டு என்று புறு புறுத்துக்கொண்டே தேனீர் போடச்சென்றா.

ஒரு மணித்தியாலம்வரை நேரமெடுத்தது. அவர்களின் அடியறுப்பு வேலை முடிவுறும்தருணம், காற்றும் கடும்வேகத்தில் சுழன்றடித்தது. வீறுகொண்டு சுற்றிச்சுழன்று அட்டகாசமிட்டது. இருவர் மனமும் எதிர்பார்ப்பில் காற்றுடன் போட்டிபோட்டு சுழன்றன. அவர்களின் ஆசை நிராசையாகவில்லை.

பரந்து படர்ந்து ஓங்கிவளர்ந்திருந்த அரசுமரம் வேர்ப்பிடிப்பற்று அடியோடு சரிந்து கவிழ்ந்தது. அதைப்பார்த்த மணியண்ணருக்கு புழுகம் பிடிபடவில்லை. யோகனை கட்டிப்பிடித்துக்கொண்டு கொண்டாடினார். கூே..."என்று கூவவேண்டும் போலிருந்தது. ஆனாலும் அடக்கிக்கொண்டார்.

"படிச்சவன் படிச்சவன்தான்டா தம்பி" எனக் கெக்களமிட்டார்.

மணியண்ணர் இன்றிரவு நித்திரைகொள்வாரோ என்வோ. யோகனுக்கு நாளைக்கு வெடக்கோழிக் குழம்புடன் விருந்து நிச்சயமுண்டு.

"அண்ணன்; நாளைக்கு பொலீஸில போய் மரம் விழுந்ததை சொல்லிற்று, வேட்டி கற்ற அனுமதியும் எடுத்துக் கொண்டுவரவேணும். நானும் கூடவே

வாறன். நேரத்துக்கே போவம்.

● கவிஞர். தக்ஷன், தஞ்சை

உரையாடலுக்குப் பிறகான மிச்சங்கள்
என் அண்மையின் கதகதப்பை
நீ உன் கைப்பையில் வைத்திருக்கிறாய்
ஒரு நாப்கின்னைப் போல்
அதை நீ பயன்படுத்துவதை
என் சிநேகிதி ஒரு முறை சொன்னாள்

ஆனால்
உதடுகளை மட்டுமே ஒற்றி எடுப்பாயாம்
எந்தவொரு உரையாடலுக்குப் பிறகும்
அதன் மிச்சங்களைத்
துடைத்தெடுக்க
அது உனக்கு உதவி புரிகிறது
என் அண்மையின் கதகதப்பை
முனைகள் மடங்காமல் இருக்க
அதிக சிரமங்களை நீ மேற்கொள்ளவேண்டியதில்லை அவை

எலாஸ்டிக் தன்மையாவன
கிழிபடும் இழைகளைக் கொண்டு
அவைகளை என் இதயம் பின்னுவதில்லை
விம்மி அடங்கும் மனக் கொந்தளிப்புகளை
குமிழ்களிட்டு உடைப்பதால்
வெப்ப இழைகளாய் நழுவுபவை அவை

நீ தூங்கிவிடும் இரவுகளில்
உன் கைப்பைக்குள்
உன் உரையாடலின் அத்தனை
மிச்சங்களையும்
மறுவாசிப்பு செய்தபடி தன் ஒவ்வொரு பகலி
முதல் எழுத்தையும்
நினைவில் வைத்துக் கொள்ளும்
வல்லமை படைத்தது
என் அண்மையின் கதகதப்பு..

அதை ஒரு நாப்கின்னைப் போல்
பயன்படுத்தும் ரகசியத்தை
ஏன் என் சிநேகிதியிடம் சொன்னாய்?



# பூனை

● ந.க. துறைவன், வேலூர்



என்னைப் புறந்தள்ளி
அம்மா மடியில் சொகுசாய்
புசுபுசுப் பூனைக்குட்டி.

❐

அம்மாவின் ரெண்டு பிள்ளைகள்
மூன்றாவது ஒரு செல்லப் பிள்ளை
குறும்புப் பூனை.

❐

மாடிப் படிக்கட்டின் கீழ்
ஒதுக்குப் புறமாய்
பூனை தனிமை வாசம்.

❐

தூங்குவது போன்று பாசாங்கு
யார் காலடி சத்தமோ கேட்டு?
சட்டென விழித்தது பூனை.

❐

டீ கொதிக்கும் நறுமணம்
மெல்ல உள்ளே நுழைந்தது
சமையல் அறைக்குள் பூனை.

❐

கருப்பு பூனை ஒன்றே
பாழடைந்த வீட்டின்
தற்போதைய உரிமையாளர்.

❐

நான் சிறுவனாக இருந்தபோது
அந்த பூனை தான்
என் விளையாட்டு பொம்மை.

❐

திருட்டுத்தனமாய் நுழைந்து
என் படுக்கை அறை ரகசியம்
வேவு பார்க்கிறது பூனை.

❒

இறந்தச் செல்ல குழந்தை
நடமாடுமாடுவதாயொரு பிரமை
பூனை உருவில் எனது அறையில்..

❒

விழிகளில் காந்தசக்தி
யாருக்கும் வியப்பூட்டும் பார்வை
பூனையின் நீலக்கண்கள்.

❒

சிலிர்ப்பில் அசைந்தது உடல்
மீசையால் மென்மையாய்
எனது கால்கள் வருடியது பூனை.

❒

பழைய சாமான்கள் குவிந்த அறை
எப்பொழுதும் எலிகள் தொல்லை
விரட்டும் பார்த்த நொடி பூனை.

❒

விருந்தாளிகள் வருகை
வரவேற்றது வாசல் வரைவந்து
மீசை அசைத்து அன்புடன் பூனை.

❒

அம்மாவை நெருங்காமல் தவிர்த்தது
ஒருநாள் முழுக்க கோபமாய் பூனை
அப்பாவோடு நடந்தச் சச்சரவு.

❒

கடும்கோடை வெப்பம்
செம்பருத்தி செடி நிழலின் கீழ்
ஓய்வெடுக்கிறது பூனை.

❒

எப்பொழுதாவது வேகமாய் வந்து
என் மடியில் கால் வைத்து ஏறி
கன்னம் வருடும் செல்லமாய் பூனை.

❒

எவரும் அறியாத நேரம் பார்த்து
அடுத்த வீட்டு நண்பியோடு
களவி முடித்து திரும்பியது பூனை.

❒

தம்பி காய்ச்சல் படுக்கையருகில்
எந்நேரமும் இணைபிரியாமல்
காவல் இருந்தது பூனை.

❒

சுவரில் மாட்டியிருந்தது படம்
பாஸ்கரன் வரைந்த பூனை ஓவியம்
உற்று கவனிக்கும் சிலநேரம்.

❒

இறப்பின் பிரிவினைத் துக்கம்
வெறுமையாய் இருக்கிறது மனம்
குட்டிப்பூனை இல்லாத வீடு

● எம். சேகர்



# சாடி தான பேத தண்டம்

கடவுள் நம் குற்றங்களை மன்னிக்கலாம் - ஆனால்,
மனிதர்கள் உருவாக்கிய சில நியதிகள்
அவ்வாறு மன்னிப்பதில்லை

• வில்லியம் ஜேம்ஸ் (1842 - 1910)

**சாவதற்கு அஞ்சேல்**

'குணா எங்கேடா இருக்க. அண்ணன போட்டுட்டாங்கடா'

மறுமுனையிலிருந்து பதட்டத்துடன் வந்தது கோபியின் குரல்.

'நீ வீட்டுக்குப் போகாத. வேற எங்காவது போயி தங்கிக்க. உன்னத்தா தேடிக்கிட்டு இருக்கானுங்க. அண்ணன என்யூஎச்ல சேத்திருக்கோம். அண்ணிக்கு தகவல் சொல்லிட்டோம். நீ இங்கயும் வந்துடாத. பாத்து இருடா'

கோபி சொன்னது நினைவில் நின்றது. அவனின் மார்போடு கைபோட்டு ஆடையில்லாமல் படுத்திருந்த சீனநாட்டுப் பெண் அவனை மழுங்க மழுங்கப் பார்த்தாள். அவளை விலக்கியவன் தன் ஆடைக்குள் புகுந்துகொண்டு இரண்டு ஐம்பது வெள்ளி நோட்டுகளை அருகேயிருந்த பழுப்பேறிய சின்ன மேசையின்மேல் வைத்துவிட்டு விறுவிறுவென்று கதவைத் திறந்தான். தலையை எட்டிப் பார்த்தான். ஏதோ நிழலாடுவதுபோல் தெரிந்தது. ஆமையைப்போல் உடனேயே தலையை உள்ளுக்குள் இழுத்துக்கொண்டான். அவனுக்குள் அவனையறியாமலேயே ஏதோ ஒன்று புகுந்துகொண்டது.

இத்தனை நாள் இல்லாத ஒரு பதட்டம். ஓர் உதறல். அவனுக்குள்.

அந்தச் சீனப்பெண்ணுக்கு மீண்டும் அவன் உள்ளே வந்து கதவைச் சாத்திக்கொண்டது அந்நியமாகப் பட்டது. யாருக்கோ செய்தியை அனுப்ப எழுத்துகளைத் தட்டிக்

கொண்டிருந்தவள் அவன் அறியாவண்ணம் தன் கைத்தொலைபேசியைத் தலையணைக்குக் கீழே சொருகி வைத்தாள். இடுப்புவரை நழுவியிருந்த போர்வையை இழுத்து தன் மார்போடு போர்த்திக்கொண்டு,

'யா டார்லிங், வாட் ஹெப்பன்', என்றாள்.

அவன் அவளிடம் எதுவும் பேசவில்லை. அவளின் கண்களை மட்டும் பார்த்தான். அந்தக் கண்கள்,

'அதா காசு கொடுத்துட்டல இன்னு ஏன்டா இங்கய இருக்க' என்று கேட்பதுபோல அவனுக்குப்பட்டது. தன் பார்வை அவனுக்கு எதையோ சொல்லிவிட்டது என்பதைத் தெரிந்துகொண்டவள் தன் தலையைத் தாழ்த்திக் கொண்டாள். அவன் தன் கைத்தொலைபேசியைப் பார்த்தான்.

மணி விடியற்காலை 2.10.

ஜன்னலைத் திறந்தான். ஜில்லென்ற குளிர்க் காற்று. முகத்தை அறைந்து சென்றது. மஞ்சள் விளக்குகளின் ஒளிச்சாரல். சாலை ஒரு மயக்க உணர்வைக் கொடுத்துக் கொண்டிருந்தது. ஒன்றிரண்டு கார்கள் சமிஞ்சை விளக்குகளின் பச்சை வண்ணத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தன. தன் சட்டைப் பாக்கெட்டிலிருந்து சிகரெட் ஒன்றை எடுத்தான். என்றுமில்லாமல் அவன் விரல்கள் இலேசாக நடுக்கம் கண்டன. விரல்களை அழுத்திப் பிடித்து உதட்டில் வைத்துக்கொண்டான். நெஞ்சம் படபடக்க தன் சிலுவாரின் முன் பாக்கெட்டில் விரல்களை விட்டு அலசினான். லைட்டர்.

அவனைச் சுற்றி வெள்ளை வெள்ளை வளையங்களாக அவன் உருவாக்கிய வெண்புகைகள் காற்றோடு கலந்துகொண்டு அவனைச் சுற்றி வேறொரு வண்ணத்தைத் தெளித்துக் கொண்டிருந்தன. அதே சமயத்தில் மெத்தையில் படுத்துக்கிடந்த அந்தச் சீனப்பெண் யாருக்கோ செய்தி ஒன்றை அனுப்புவதில் மும்முரமாக இருந்தாள்.

## சிதையா நெஞ்சு கொள்

என் யூ எச் அவசரப்பிரிவுக்கு ஓட்டமும் நடையுமாய் நுழைந்தாள் கீர்த்தி. ஒரு கணினியோடு அமர்ந்திருந்த ஒரு தாதியிடம் விக்னேஷ் பெயரைச்சொல்லி விசாரித்தாள்.

'நீங்கள் யார்?'

'மனைவி'

'மேடம், அவர் இன்னும் ஆப்பரேஷன் ரூமிலிருந்து வரல. கொஞ்சம் அங்க ஒக்காருங்க. வந்ததும் சொல்றோம்'

'நா அங்க போகலாமா'

'இல்ல மேடம். ஏற்கனவே அவர கொண்டுவந்த ரேண்டு பேரு கூட போயிருக்காங்க. உங்களயும் உள்ள விட்டா டாக்டர் திட்டுவாரு. வேணுன்னா நீங்க ஒன்னு பண்ணலாம். அங்க இருக்கறவங்கல்ல ஒருத்தர இங்க வரச்சொல்லிட்டு நீங்க அங்க போகலாம்.'

கைத்தொலைபேசியில் பதிவாயிருந்த அந்த எண்ணுடன் தொடர்பு கொண்டாள். சில விநாடிகளுக்குள் மறுமுனையிலிருந்து,

'சொல்லுங்க அண்ணி'

‘நா இங்கத்தான் அவசரப்பிரிவுல. அண்ண...’

‘டாக்டர் கிரிட்டிகல்னுதான் சொன்னாரு. ஆப்ரேஷன் ரூம்ல இருந்து யாரும் இன்னும் வெளிய வரல. அங்கேயே இருங்கண்ணி. இதோ வந்துடறேன்’

கீர்த்தி அங்கே வரிசைப்பிடித்து இருந்த நீல நிற நாற்காலியில் இடுப்பில் கை வைத்து அழுத்தி மிகக் கவனமாக உட்கார்ந்தாள். இது அவளுக்கு ஏழாவது மாதம். இவள் பிடிவாதமாக மறுத்தும் விக்னேஷின் வற்புறுத்தலால் சென்ற மாதம் ஸ்கேன் செய்து பார்த்தபோது ஆண் குழந்தை என உறுதியாகச் சொன்னார்கள். விக்கி ரொம்பவும் சந்தோஷப்பட்டான்.

‘எனக்கொரு மகன் பிறப்பான், அவன் என்னைப்போலவே இருப்பான்’ எனப் பாட்டுக்கூடப் பாடினான்.

தொடர் ரயிலைப்போல ஓடிக்கொண்டிருந்த அந்தப் பச்சை வண்ண ஸ்கிரீன் விடியற்காலை மணி **2.15** என்பதைச் சுமந்துகொண்டு இவ்வுலகில் எதுவுமே நடக்காததுபோல தன் கடமையைச் செய்துகொண்டிருந்தது.

அவசரப் பிரிவின் ரெஜிஸ்டர் கவுண்டரின் முன் ஒரு சக்கர நாற்காலியில் வடநாட்டுப் பெண்ணொருத்தி தன் இடுப்பைப் பிடித்துக் கொண்டு துடித்துக் கொண்டிருந்தாள். பிரவசவலி போல. கவுண்டரில் இருப்பவன் அவள் கணவனாகத்தான் இருக்கவேண்டும். அவன் முகத்தில் கலவரம் தெரிந்தது. அந்தப் பெண்ணைப் பார்த்தவாறே கவுண்டரில் இருக்கும் அந்தத் தடித்த பெண் ஆற அமர கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தான். கேள்விகளைக் கேட்டுக்கொண்டு கணினியில் எதை எதையோ பதிந்துகொண்டிருந்த அந்தப் பெண்ணிடம் சக்கர நாற்காலியின் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டிருந்த தாதி, ஏதோ சொல்ல,

‘எனக்குத் தெரியும். உன் வேலையை மட்டும் பார்’

என்றுச் சொல்லிவிட்டு மீண்டும் கணினியோடு ஐக்கியமானாள் கவுண்டரில் உள்ள அந்தப் பெண். அந்தத் தாதிப்பெண் என்ன செய்வதென்று தெரியாமல் வலியால் துடித்துக்கொண்டிருந்த வடநாட்டுப் பெண்ணிடம் கொஞ்சம் வலியைப் பொறுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டிருந்தாள். அச்சமயம் ஒரு மருத்துவர் அவ்வழியே வருவதைக் கவனித்துவிட்ட அந்தக் கவுண்டரில் உள்ள பெண்,

‘அவங்கல லேபர் வார்ட்டுக்குக் கொண்டு போகாமல் இன்னும் என்ன செஞ்சிகிட்டு இருக்க?’

என அதட்டுவதற்கும் கோபி அங்கே அவசர அவசரமாக வருவற்கும் சரியாக இருந்தது.

அவன் சட்டையெல்லாம் ரத்தக்கறை.

அந்த ரத்தத்தின் நெடி விக்கியினுடையதுதான். அதைக் கீர்த்தியால் உணரமுடிந்தது. அந்த ரத்த நெடியை முழுமையாக தனக்குள் இழுத்துக்கொண்டு அவனைத் தனக்குள் நிறைத்துக்கொண்டாள்.

விக்னேஷை அனைவரும் விக்கி என்றுதான் அழைப்பார்கள். அவளுக்கும் அவன் விக்கி என்றே அறிமுகமானான். இன்னும் சொல்லப்போனால் அவனின் பெயருக்கு முன் இருந்த விக்டர் விக்கி என்ற அடைமொழியோடு கூடிய பெயரே அவளைப் பெரிதும் கவர்ந்தது. ஐடிஈ செண்டரில் அவள் சேர்ந்த புதிதில் சில மலாய், சீன மாணவர்களை விக்கி விரட்டி விரட்டி திடலில் அடித்த அந்தக் காட்சியில் அவன் அவளுக்குள் ஹீரோவாகிப் போனான். ஐடிஈ முடிந்தபிறகு, பிடிவாதமாக இருந்து அவனையே கட்டிக்கொண்டாள். காதலிக்கும்போது அவளுக்குப் பிடித்திருந்த அவனின்

ஹீரோயிசம் கல்யாணம் ஆன பிறகு, பயத்தை மட்டுமே அவளுக்குக் கொடுக்கத் தொடங்கியது. ஒரு நகரத்தையே முழுமையாக விழுங்கிய நிலைக்கண்ணாடியைப்போல் அவனின் இந்த அடிதடிகள் அவனை எந்நேரத்திலும் விழுங்கிவிடத் தயாராகக் காத்திருப்பதை அவள் உணர்ந்துகொண்டாள். ஆனால், எல்லாமும் அவளால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்பட்டதால் அவள் குடும்பத்தின் பக்கம் அவளால் செல்ல இயலாத இதைப்பற்றி பேச இயலாத ஒரு சூழல் உருவாகிப்போனது. வாழ்வில் தனிமை அவளை ஒவ்வொரு நாளும் அழவைத்துக்கொண்டிருந்தது. தனக்காகத் தன் உணர்வுகளைப் புரிந்துகொள்ள யாரும் இல்லாத சூழலில் அன்புக்காகவும் பாசத்திற்காகவும் ஏங்கித் தவித்துக்கொண்டிருந்தாள்.

அவள் பயந்தபடியே இன்று அப்படியே நிகழ்ந்துவிட்டது.

**அச்சம் தவிர்**

உடல் முழுக்கப் பதினாறு இடங்களில் வெட்டுக் காயங்கள். தலையில் வெட்டுக்காயங்கள் ஆழமாகப் பாய்ந்திருந்ததால் தலைமுடி முழுவதும் முழுமையாக மழிக்கப்பட்டுத் தையல் போடப்பட்டிருந்தது. விக்டர் விக்கிக்குச் செயற்கைச் சுவாசக் குழாயின் மூலம் சுவாசம் மட்டும் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. விழிகள் மட்டும் இலேசாகத் திறந்திருந்த நிலையில் எதுவும் புலப்படாத ஒரு மயக்கத்தில் அவனிருந்தான்.

அப்போது விக்னேஷ் உயர்நிலை ஒன்றில் படித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் பள்ளி முடிந்து வீட்டிற்குச் சென்றுகொண்டிருந்தான். அப்போது வழியில் முத்தலீப் என்ற இந்தியர்களின் குண்டர் கும்பலைச் சேர்ந்த அறுவர் அவனை வழி மறித்தனர். அவனிடமிருந்த பணத்தைப் பறிக்க முயன்றனர். அவனிடம் பணம் இல்லாததைக் கண்டு அக்குழுவின் தலைவனாகச் செயல்பட்டவன் அவனை அறைந்து கீழே தள்ளினான். அதனைத் தொடர்ந்து மற்றவர்களும் அவனை இஷ்டத்துக்கு உதைத்தனர். இது அன்றோடு முடியவில்லை. ஒவ்வொரு நாளும் பள்ளிமுடிந்து வீட்டிற்குச் செல்லும்போதெல்லாம் அவர்களின் கேலிப் பேச்சு, கிண்டல், கெட்ட வார்த்தைகளில் திட்டல்கள், அறை, அடி, உதை, வதை என அந்த வேதனையைச் சுமந்துகொண்டே வீட்டைப் போய் சேர்வான். பல சமயங்களில் அவர்களின் அத்துமீறல்கள் எல்லையை மீறி அவனை நிர்வாணமாக்கி, அவனது ஆண்குறியை சீண்டவும் வைத்தது. பள்ளி என்றாலே வெறுப்பு, பயம், அவமானம் அவனைப் பிடித்துக்கொண்டது. பள்ளியிலும் வகுப்பறையிலும் அனைத்து மாணவர்களும் தன்னைப் பகடிவதைச் செய்வதுபோன்ற ஒரு மனநிலையில் ஆழ்ந்து கிடந்தான்.

இந்தத் தொடர் வன்செயல்களினால் ஒவ்வொரு நாளும் பள்ளி முடிந்து வீட்டிற்குச் செல்வதற்கே பயந்துகொண்டிருப்பான். எதேச்சையாக ஒருநாள் அவனைப் பக்கத்து புளோக்கில் இருக்கும் அவனுடன் லேக் சைட் தொடக்கப்பள்ளியில் படித்த சீனியர் புலேந்திரன் பார்த்துவிட்டான். அவன் சட்டைக் கசங்கி கண்கள் கலங்கியிருந்ததைப் பார்த்தவன், ‘ என்னடா?’ என்றான். விக்னேஷ், முத்தலீப் குண்டர் கும்பலால் தனக்கு ஏற்படும் இன்னல்களைச் சொன்னான்.

‘வீட்ல அப்பா அம்மா கிட்ட சொல்லலையா?’

‘இல்ல’

‘ஏன்’

‘சொன்னா அம்மா என்னதான் திட்டுவாங்க’

‘என்னடா சொல்ற?’

‘ஆமா, அப்பா கேங்ஷ்டரா இருந்து ஒரு கொல கேசுல ஜெயில்ல இருக்காரு. இப்பபோயி அம்மாகிட்ட சொன்னா, என்னதான் திட்டுவாங்க. அப்பா மாறிதான நீயும் இருப்ப, நீ ஒழுங்கா இருந்தா, மத்தவங்க ஏண்டா உன்ன அடிக்க வராங்கன்னுவாங்க?’

‘சரி நீ பாத்து வீட்டுக்கு போ’

வழக்கம்போலவே, அன்றும் விக்னேஷை வழிமறித்து அறைய வந்த முத்தலீப் சட்டென்று கையைக் கீழே இறக்கிக்கொண்டான். அவன் கைகளில் நடுக்கமும் கண்களில் ஒரு வித பயமும் தெரிந்தது. முத்தலீப் பார்த்த திசையில் அவனும் பார்த்தான். அங்கே ஏழெட்டுப் பேர் கையில் பேனாக்கத்தியுடன் நின்று கொண்டிருந்தனர். அவர்களின் மத்தியில் அக்கும்பலின் தலைவன் ஹோ தூன் ஹாய் நின்றுகொண்டிருந்தான். பள்ளியில் இரண்டாவது ஆண்டாக உயர்நிலை மூன்றில் படிக்கும் மாணவன். அவனுக்குப் பக்கத்தில் புலேந்திரன் நின்றுகொண்டிருந்தான்.

தூன் ஹாய் அவனை மூத்தலீப்பை அறையுமாறு கட்டளையிட்டான். இத்தனை நாள் பட்ட வேதனையும் வலியும் விக்னேஷுக்குள் விஸ்வரூபம் எடுத்தது. ஓங்கி அறைந்தான். ஓர் அறையிலேயே முத்தலீப் தடுமாறினான். அவன்கூட இருந்தவர்கள் ஆளுக்கொரு பக்கமாக ஓடினர். விக்னேஷூக்கு அன்றுதான் தன் வலிமை தெரிய வந்தது. தூன் ஹாய் அவன் தோளில் கையை வைத்துப் புலனேந்திரனிடம் சீன மொழியில் ஏதோ சொன்னான். புலேந்திரன் தொடக்கப்பள்ளியிலிருந்து தாய்மொழிப் பாடமாகச் சீன மொழியைக் கற்றுக்கொண்டிருப்பவன்.

புலேந்திரன் அவனை வீட்டிற்குப் போகச் சொன்னான். மறுநாள் காலை, தூன் ஹாய் பள்ளியின் ஓய்வு நேரத்தின்போது சிற்றுண்டிச்சாலையில் அவனைப் பார்க்க வந்தான். அவன் கையில் ஒரு பென்சில் பொக்ஸ் இருந்தது.

‘இதை வைத்துக்கொள்’

விக்னேஷ் விழித்தான்.

‘தெரிந்தோ தெரியாமலோ எனது வட்டத்திற்குள் வந்துவிட்டாய், எந்நேரமும் உனக்கு ஆபத்து வரலாம். வராமலும் போகலாம். இனி, நீ மிகவும் கவனமாக இருக்கவேண்டும். தைரியமாக இரு. எதையும் எதிர்த்துப் போராட துணிவுடன் இரு, ஏதும் பிரச்சனனா புலேந்திரனிடம் கூறு’

வீட்டிற்கு வந்துதான் அந்தப் பென்சில் பொக்ஸைத் திறந்து பார்த்தான். அதனுள் ஹீரோ ஃபௌன்டன் பேனாவும் அதனுடன் தினசரி பேப்பரால் சுற்றப்பட்ட ஒரு பேனா கத்தியும் இருந்தது. கூடவே ஒரு வாசகமும் இருந்தது. இதில் எது உனக்கு முதலில் பயன்படுகிறதோ அதில்தான் உனது வாழ்க்கை அடங்கியிருக்கிறது.

**ரௌத்திரம் பழகு**

ஒரு மாலை சாயும் பொழுதில் சிங்க நடன இணைப்பாட வகுப்பு முடிந்து வரும்பொழுது புளோக் கீழே கூட்டமாக இருந்தது. அருகே ஆம்புலன்ஸ் வண்டியும் போலீஸ் ரோந்து வண்டியும் சைரன்ஸ் ஒளியைச் சுழலவிட்ட வண்ணம் நின்றுகொண்டிருந்தன. விக்னேஷ் அருகில் சென்று பார்த்தான். அதிர்ச்சியில் உறைந்துபோனான். புளோக்கின் அருகில் இருந்த கால்வாயில் புலேந்திரனின் உடல் பல வெட்டுக்காயங்களுடன் கிடந்தது.

‘இப்பத்தான் யாரோ ஒரு நாலைந்து பேர் அவனைக் கீழே தள்ளி, பாராங்கத்தியால தாக்கிட்டு,

இதுல தள்ளிட்டு ஓடிட்டானுங்க'

'உயிரிருக்கா'

'ஆம்புலன்ஸ் வந்தவுடனேயே செக் பண்ணிட்டாங்க. உடம்புல உயிர் இல்லனு சொல்லிட்டாங்க. அப்புறந்தான் அவங்க தகவல் சொல்லி போலீஸ் வந்திருக்கு. போலீஸோட ஃபோமலட்டிலா முடிஞ்ச பிறகுதான் எடுப்பாங்க போலிருக்கு'

அதற்குள் அருகில் இருந்தவர்கள் கொடுத்த பழைய பேப்பர்களால் புலேந்திரனின் உடலை ஒரு போலீஸ்காரர் மூடிக்கொண்டிருந்தார். சற்றுத் தள்ளி புலேந்திரனின் அப்பா கதறியழும் அவனின் அம்மாவைச் சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார். பிள்ளையை இழந்த ஒரு தாயின் வலி அங்குள்ளவர்களைக் கலங்க வைத்தது. வலியின் கடத்தல் சொற்களின் வாயிலாகச் சொல்லப்படாமல் கதறலால் காற்று வெளியெங்கும் வியாபித்து அனைவருக்குள்ளும் இறங்கிக்கொண்டிருக்கவேண்டும். அனைவரின் முகத்திலும் ஒரே சாயலாய் அது ஒட்டிக்கொண்டிருந்தது. அண்டை வீட்டுக்காரர்களான மாலீக்கின் குடும்பத்தினரும் சானின் குடும்பத்தினரும் அவர்களுக்கு ஆதரவாக ஆறுதலாக நின்றுகொண்டிருந்தனர். அவர்களுக்குப் பக்கத்தில் தூன் ஹாய் நின்றுகொண்டிருந்தான். அவன் கண்கள் நீர்த்திட்டுகளுடன் சிவந்திருந்தன. அதனுள் ஒரு வெறியின் ஒளிப்படலம் ஒளிர்ந்துகொண்டிருந்ததை விக்னேஷ் கவனிக்கத் தவறவில்லை. இதற்குக் காரணமானவர்களைப் போட்டு விட வேண்டும் என்ற ஒரு தீர்க்கமான வெறி அவன் கண்களிலிருந்து தெறித்துச் சிதறி விழுந்துகொண்டிருந்தது. அவன் அருகில் போய் நின்றுகொண்டான். தூன் ஹாய் அவன் தோளில் கை வைத்து அவனைச் சமாதானப்படுத்தினான்.

'என்னாலயா'

'இல்ல, இது ரொம்ப நாளா இருந்தது'

'அப்ப எப்படி இப்படி தனியா விட்ட'

'இப்பத்தான் என்கிட்ட பேசிட்டு வந்தான்'

'அப்புறம் எப்படி இப்படி'

'ஒளிஞ்சிருந்து பாத்து பின்னாலேயே வந்து, நா இல்லாதப்ப போட்டுட்டானுங்க'

'என்ன செய்ய போற'

'நா பாத்துக்கறேன்'

'நானும் இருப்பேன்'

'வேண்டாம். நீ நல்லா படிக்கிறவன். படிக்கற வேலய மட்டும் பாரு'

'அவன் என்னோட நண்பன். எனக்கு கஷ்டம்னவுடன் உதவி செஞ்சவன், நா அவனுக்காக ஏதாவது செஞ்சாகனும்'

தூன் ஹாய் கொஞ்ச நேரம் அமைதி காத்தான்.

'சரி. கொஞ்ச நாள் ஆவட்டும். பாத்துக்கலாம்'

அந்தக் கொஞ்ச காலத்திற்குப் பிறகு, தூன் ஹாயிற்கு நிகராக வளர்ந்து விட்டான் விக்னேஷ் 'விக்டர் விக்கி'யாக. பள்ளி, கல்லூரி என முத்தலீப் குண்டர் கும்பலுக்கு நிகராக தூன் ஹாயின் கும்பலின்

சாம்ராஜ்யத்தை உருவாக்கினான். முத்தலீப் கும்பல் மாணவர்களிடையே போதைப்பொருட்களை விநியோகிக்கவும் பாலியல் சேவைக்காகவும் மாணவிகளைப் பயன்படுத்திய வேளையில், விக்டர் விக்கி தூன் ஹாயின் துணையோடு அவர்களை எதிர்க்கத் துணிந்தான். மாணவர்களை முத்தலீப் குழுவின் பிடியிலிருந்து மீட்டு அவர்களுக்குப் பாதுகாப்பு அரணாக நின்றான். முத்தலீப் கும்பலின் பின்புறத் தாக்குதலால் தூன் ஹாயின் இறப்பிற்குப் பிறகு, அக்கும்பலின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டான் விக்டர் விக்கி. புலேந்திரனின் மறைவுக்குப் பிறகு அவர்களுடன் இணைந்த அவனின் தம்பி குணா, விக்டர் விக்கிக்கு வலதுகரமானான் 'டேரிங் குணாவாக'.

குண்டர் கும்பலில் ஈடுபடுத்திக்கொண்ட பல மாணவர்களை அவர்களின் வழக்கமான வாழ்க்கைக்குக் கொண்டு செல்ல அதிக நேரத்தையும் உழைப்பையும் கொடுத்தான். 'சிண்டா' என்ற இந்தியர் அமைப்பின் உதவியோடு அப்படித் தனிக்கவனம் செலுத்தும் மாணவர்களிடம் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டதையும் அவன் கண்டான். பலர் குண்டர் கும்பல்களிலிருந்து மீண்டு பள்ளிப்பாடங்களிலும் இணைப்பாட நடவடிக்கைகளிலும் நல்ல மதிப்பெண்களைப் பெற்றனர். கடவுள் இவ்வுலகிற்குத் தன்னைத் தந்ததற்கான காரணத்தை அவன் தெளிவாகத் தெரிந்துகொண்டு அதற்கேற்பத் தன் செயல்நடவடிக்கைகளை மாற்றிக்கொண்டு வாழத் தொடங்கினான்.

### சேர்க்கை அழியேல்

ஜூரோங் நகராண்மைக் கழகம் உருவாக்கிய முதல் வீடமைப்புப் பேட்டைதான் தாமான் ஜூரோங். இதற்குப் பிறகே, பூன்லே கார்டன், தேபான் கார்டன், பாண்டான் கார்டன் என அடுத்தடுத்த வீடமைப்புப் பேட்டைகள் உருவாக்கப்பட்டன. தாமான் ஜூரோங்கில் உள்ள யூங் ஷெங் சாலை, கோர்பரேஷன் சாலை சந்திப்பில் பழைய தாமான் ஜூரோங் திரையரங்கு இருந்தது. மேற்குப் பகுதிகளின் முதல் திரையங்கம் எனக் கூறப்பட்டாலும், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, ஜோ டேவிட் என்பவர் திறந்தவெளி சினிமாவை இப்பகுதியில் உள்ள யுவான் சிங் சாலையில் நடத்தியுள்ளார். இந்தத் தாமான் ஜூரோங் திரையரங்கம் இருந்த இடத்தைத்தான் இப்போது எஸ்-11 என்ற உணவகம் வாடகைக்கு எடுத்து நடத்தி வருகிறது.

இத்தகைய சரித்திரம் வாய்ந்த அந்த இடத்தில்தான் ஒரு நாள் இரவு அந்தச் சந்திப்பு நடத்தப்பட்டது. பெரும்பாலும் 'டேபள் டோக்' எனச் சொல்லப்படும் ஒருவகை பேச்சு வார்த்தை நடக்கக்கூடிய சந்திப்பு அது. சில சமயங்களில் நட்பார்ந்ததாகவும் அடிதடிகளிலும் இதுபோன்ற சந்திப்புகள் முடிவடைவதுண்டு. டேரிங் குணா சொன்னபடியே அங்கு வந்து சேர்ந்துவிட்டான். அவன் வந்த சிறிது நேரத்திற்குப் பிறகு, பயங்கரமான சத்தத்துடன் நாலைந்து பெரிய பெரிய மோட்டார் சைக்கிள்கள் வந்து நின்றன. முத்தலீப்பைத் தொடர்ந்து மற்றவரும் டேரிங் குணாவை நெருங்கி வந்தனர். சமரச அறிமுகத்திற்குப் பிறகு, அனைவரும் ஏற்கனவே அவர்களுக்காக முன்பதிவு செய்யப்பட்ட ஒரு பெரிய மேசையில் உட்கார்ந்துகொண்டனர். மேசையின்மேல் சின்ன சின்ன வாளிகளில் ஐஸ்கட்டிகள் நிரப்பப்பட்டு மதுப்பாட்டில்கள் வைக்கப்பட்டிருந்தன. சிகரெட் துகள்களைத் தட்டுவதற்காகப் பழைய பால்டின்களினால் வடிவமைக்கப்பட்டுப் பாதி தண்ணீர் நிரப்பப்பட்ட இரண்டு எஸ்திரேய்களும் அங்கு இருந்தன. அதற்குள் எப்பவோ எரிந்துபோன சிகரெட்டுகளின் துகள்கள் மிதந்துகொண்டிருந்தன.

'மைக், இன்னும் எவ்வளவு நாளைக்குதான் அவனுக்கு கீழ இருக்கப்போற, நாம இருக்கோம். துணிஞ்சி இறங்கு. தூரூன் கொடுத்துருவோம்'

'ஆமா, மைக். உன்னோட அண்ணனுக்கு அப்புறம் உன்னதான மைக் தலயா ஆக்கியிரிருக்கனும்.

எங்கள பாத்து பயந்து ஓடுனவ கிட்ட நீ இருக்கக்கூடாதுலா மைக்'

'என்ன மைக், டியாமா இருக்கீங்க. மக்கள்ஸ் நம்பள நம்பல போல'

'ஆமா அவங்க அண்ணன நம்பதான போட்டோம்னு நம்ப மேல கோவம் இருக்காதா'

'மைக், அது பழசு. அதுக்குத்தாலா இப்ப கூப்புட்டு பேசுறோம்'

'இந்த லைன்ல நிரந்தர நண்பனும் இல்ல. நிரந்தர எதிரியும் இல்ல'

'நாங்க சொல்றபடி செய் மைக். அதுக்கப்புறம் நீதான் தல. ஸ்கூல்லயும் ஐடியில்லயும் பொட்டலத்த நீ ஓட்டு மைக்'

'எவ்வளவு நாளைக்குதான் மைக் அவனுக்கு கீழய இருப்ப. நீயும் வாழ்க்கயில செட்டல் ஆவனும் மைக். லோபாங் கிடைக்கிறப்ப சம்பாதிச்சரனும் மைக்'

'இப்பவே சொல்லனும்னு இல்ல மைக். யோசிச்சிட்டு சொல்லு.'

முதல் ஷியஸுடன் கிளாஸ்கள் ஒன்றோடு ஒன்று உரசிக்கொண்டன நட்பாக. இரண்டு நாட்களுக்குப் பிறகு, டேரிங் குணா முத்தலீப்பை அழைத்துப் பேசினான். அவன் சொன்னபடியே டேரீங் குணா,

'அண்ண, ஒரு ஸ்கூல் புள்ளய கடத்திட்டாங்கண்ண. லிம் சூ காங் சீன சுடுகாட்டு பக்கமா ஒரு வேன்ல வச்சி கைமாத்தப்போறாங்க. உடனே வந்தா காப்பாத்திடலாம்ணா'

லிம் சூ காங் சீன சுடுகாட்டுக்கு விரைந்த விக்டர் விக்கி அங்கே நின்றுகொண்டிருந்த ஒரு வேன் அருகே செல்லவும் திமுதிமுவென்று அந்த வேனிலிருந்து இறங்கிய நாலைந்து பேர் பாராங்கத்தியால் அவனைத் தாக்கினர். எதிர்பாராத தாக்குதலில் நிலைகுலைந்து சிதைந்து3பானான்.

**வெளவுதல் நீக்கு**

விடியற்காலை மணி 2.20.

கேலாங்கின் லோரோங் பத்தில் உள்ள ஸேர்ரி லோப்ட் மூன்று நட்சத்திரத் தங்கும் விடுதியில் இருந்த சீனப் பெண் அதிர்வு நிலையில் துடித்த தன் கைப்பேசியை எடுத்துப் பார்த்தாள்.

'இரண்டு கத்தி முத்திரையிட்டு, கதவைத் திற' என்றிருந்தது.

டேரீங் குணா இன்னமும் புகை வெளிகளில் விரல்களில் சிகரெட்டோடு ஜன்னலோரம் நின்று, மஞ்சள் ஒளி வீச்சில் மயங்கிக் கிடந்த சாலையைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

**பின் குறிப்புகள் :**

தூரூன் (மலாய்) கொடுத்துருவோம் - கூட இருக்கிறோம்

டியாமா (மலாய்) - அமைதியாக

ஐடிஈ - தொழில்நுட்பக் கல்லூரி

பொட்டலத்த ஓட்டு - போதைப்பொருள் விநியோகித்தல்

லோபாங் (மலாய்) - வாய்ப்பு

● பூ.விவேக், திருப்பூர்

# யாருக்காக

ஒவ்வொரு முறையும் கவிதை எழுத எத்தனிக்கையில்
யாருக்காக என்ற வினா எழுகிறது?
மனைவியின் கவிதையை முத்தத்தில் சொல்லியாயிற்று
மகனிற்கான கவிதையை சுட்டித் தனங்களில் நிறைத்தாயிற்று
அப்பா அம்மாவின் கவிதைகள் இன்னும் உழைத்துக் கொண்டிருக்கிறது
தாத்தா பாட்டியின் கவிதைகள் சுவரில் புன்னகைக்கிறது
நிலவிற்கான கவிதை மாடிப்படிகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறது
மழையின் கவிதை ஜன்னலோரம் காத்திருக்கிறது
பூனைக்கான கவிதை மியாவ்களில் ஒளிந்திருக்கிறது
சமூகத்திற்கான கவிதை போதுமென்றளவுக்கு எழுதியாயிற்று
சொல்லுங்கள் யாருக்காக எழுதுவது?
இம்முறை எழுதிப் பார்க்கிறேன் எனக்காக
ஒரு கவிதையை!



● கா.ந.கல்யாணசுந்தரம்



# ஹைக்கூ கவிதைகள்

பின்பனிக்காலம்
மெல்ல எழும் காளைகள்
உழவனின் எதிர்காலம்

❒

குதித்து ஓடுகின்றன
குளத்துத் தவளைகள்
வயலெங்கும் நீர்ப்பரப்பு

❒

மகத்தான நன்றியுடன்
மலைச்சரிவு வனங்கள்
விதைப்பந்து வீச்சு

❒

மேய்ச்சல் நிலங்களின்
முகவரிகள் வேண்டும்
மேய்ப்பனின் வேண்டுகோள்

❒

துளிர்த்தலில் தெரிகிறது
ஒரு மெல்லிய பயணம்..
இலைகளின் உதிர்தல்

❒

ஆற்றின் கரங்களை
முத்தமிட நினைக்கின்றன
அலைவருடிய கூழாங்கற்கள்

❒

பனிபொழியும் காலை
துல்லியமாய் கேட்கிறது
பறவைகளின் கீச்சொலி

● ச.ராச்



# தீட்டு

வீட்டுக்கு தூரமென்று
விளக்கேற்ற என்னை
அழைத்தால் மனைவி

பூஜையறையில்
தீப்பெட்டியைத் தேடும்போது

இரண்டு நாள் முன்பு
பின்னிரவு சம்போகத்தின்போது
அவிழ்த்தெறிந்து
காணாமல்போன
எனது உள்ளாடையை

பூஜையறையின் ஒரு மூளையில்
பிசுபிசுத்த எண்ணைத் திரியோடு
எலி இழுத்துவந்து கிடத்தியிருந்தது

எனக்கு முன்பாகவே
எல்லா தீட்டையும் அறிந்தபடி
எலிவாகனத்தில் வீற்றிருந்தார்
கடவுள்.

● நௌஷாத் கான்.லி



# முத்தத்தின் வாசனை..

மிஸ்டர் விக்னேஷ் உங்களுக்கு என்ன பிரச்சனைன்னு தெரியும்..நீங்க நல்ல உணவை சாப்பிட்டு,மருந்து மாத்திரை ஒழுங்கா சாப்பிட்டாலும் கொஞ்ச காலத்துக்கு தான் உங்களாலே நல்லா வாழ முடியும்,இப்படி இருக்கிற சூழ்நிலையில தினமும் மருந்து,மாத்திரை ஒழுங்கா சாப்பிடாம அளவுக்கதிகமா ஒரு நாளைக்கு இருபதுக்கு மேல காபி குடிக்குறீங்களே??

உங்களுக்கே நல்லா இருக்கா??

உங்களுக்கு வயிற்றுப்புற்றுநோய் இருக்குன்னு ஏற்கனவே தெரிந்தும் கூட நீங்க செய்யுற காரியத்தால அதனோட விளைவுகள் உங்க உடலுக்கு அதிக வேதனையை தரலாம்..உங்களோட மரண நாளை நீங்களே விரைவா தேடிக்கிடுறீங்க??

நீங்க என்ன சின்ன குழந்தையா??

உங்க நிலைமையை புரிஞ்சு அதுக்கேத்தமாதிரி நடந்துக்கோங்க..எந்த நோயாளிக்கிட்டயும் மருத்துவர் நாங்க இதுமாதிரி பேசியது கிடையாது நோயாளி கூட வர்றவங்ககிட்ட தான் இதுமாதிரியான விஷயங்களை எல்லாம் பக்குவமா சொல்வோம்..

இப்போதைக்கு உங்களுக்கு யாருமே இல்லை,நீங்க தனியா வந்த காரணத்தால தான் உங்ககிட்ட ஒரு பேமிலி டாக்டர் என்ற முறையில் ஒரு அக்கறையில சொல்லுறேன்..

மிஸ்டர் விக்னேஷ் உங்க உடல் நிலைமை நாளுக்கு நாள் மோசமா போய்க்கிட்டே இருக்கு,எப்படி தான் இவ்வளவு வலியை பொறுத்துக்கிட்டு மருந்து,மாத்திரை எடுத்துக்காம வாழுறீங்கன்னு எனக்கே ஆச்சர்யமா இருக்கு..

ப்ளீஸ் எவ்வளவு சீக்கிரம் ஆஸ்பிட்டல் சேர முடியுமோ சேர்ந்திடுங்க,ஏன்னா எந்த நிமிசத்துலயும் உங்களுக்கு எது வேணும்னாலும் நடக்கலாம்..

மருத்துவர் குணசேகரன் பேசிக்கொண்டிருக்கும் போதே விக்னேஷ் சேரில் இருந்து தரையை நோக்கி மயங்கி விழுந்தான்..

விக்னேஷ்..விக்னேஷ்..என்னாச்சு??

கண்ணு முழிச்சு பாருங்க..

அவன் கண் விழிப்பதற்கு பதிலாக கடந்த காலத்தில் மூழ்கத் தொடங்கினான்

டே...ச்சி...காலங்காத்தால குளிச்சிட்டு வந்தவள இன்னொரு தடவ குளிக்க வச்சிட்டியே..

குளிக்கிறதுக்கு ஏண்டி பொண்டாட்டி அலுத்துகிற??

உனக்கு குளிக்க அலுப்பா இருந்தா,இந்த மாமன் குளிக்க வக்கிறேண்டி..

ஏன் என்னை குளிக்க வைக்கிறேன் என்கிற பேர்ல திரும்ப,திரும்ப குளிக்க வைக்கிறதுக்கா???

இந்த புருஷனோட ஆசையை ஏண்டி நிராசையாக்கப் பார்க்கிற??

ஆசையை நிறைவேத்தலாம் மாமு,ஆனா உன் பேராசையை நிறைவேத்த நினைச்சா நான் வருஷா,வருஷம் முழுகாம தான் ஆவணும்..

அடி கள்ளி,மாமனோட மைண்ட் திங்கிங்-கை அப்படியே கேட்ச் புடிச்சிட்டியே..

சரி..சரி...அதெல்லாம் விடு,முதல்ல மாமனுக்கு ஒரு கிளாஸ் பில்டர் காபி போட்டு எடுத்திட்டு வா..

ச்சி...இப்ப தானே குடிச்ச,உனக்கு இன்னொரு தடவ கேட்குதா...

அட... ச்சீ..அந்த பில்டர் காபி கேட்கலைடி..உண்மையிலேயே ஒரு கிளாஸ் பில்டர் காபி

போட்டு எடுத்திட்டு வா

பூங்கொடி...என்..பூவு..மாமனுக்கு சக்கரை தூக்கலா ரொம்ப ஸ்ட்ராங்கா காபி போட்டு சீக்கிரம் கொண்டு வா..

சரிய்யா..சரிய்யா..கொண்டு வர்றேன்

சில நிமிடங்களுக்கு பிறகு..

என்னடி சக்கரை தூக்கலா கேட்டேன்...ஆனா காபியில சக்கரை ஒரு பேருக்கு கூட இல்லை..

உளறாதய்யா,உனக்காக மூணு ஸ்பூன் சக்கரை போட்டேன், நீ பொய் சொன்னாலும் சொல்லுவ இரு ஒரு வாய் குடிச்சு பார்த்திட்டு சொல்லுறேன்

அவள் ஒரு சிப் குடித்த அடுத்த வினாடி பில்டர் காபி வாசம் வீசும் பூங்கொடியின் இதழ் சுவைத்தான் விக்கி என்னும் விக்னேஷ்..

ச்சீ..நீ ரொம்ப மோசம்-ய்யா என்று உச்ச முத்தம் பெற்ற அடுத்த நொடி அவனை தள்ளி விட்டு சென்றாள்..

விக்னேஷுக்கு பில்டர் காபியை பிடிப்பதற்கு இன்னொரு காரணம் காபி முழுதும் பூங்கொடியின் வாசம் வீசி கொண்டே இருக்கும்..

ஊரில் காதலை பற்றி ஒரு பழமொழி உண்டு ஆண் சரியா இருந்தா பொண்ணு சரியா இருக்க மாட்டா,பொண்ணு சரியா இருந்தா ஆண் சரியா இருக்க மாட்டான்,ரெண்டு பேரும் சரியா இருந்தா அபூர்வம்,அந்த அபூர்வங்கள் எல்லாம் நடக்கும் போது சில நேரம் அந்த இரக்கம் இல்லாத கடவுளுக்கு பிடிக்காமல் போகும்..

ஊர் கண்பட்ட விக்கியின் காதல் திருமணத்தில் அந்த கடவுளும் கண் வைத்து விட்டார்.. பிரசவத்துக்காக தன் அம்மா வீடு சென்ற பூங்கொடி பிரசவத்தின் போது ஜன்னி வந்து இறந்து விட்டாள்..

அன்று உடைந்து போன விக்கி இதுவரை மனதளவிலும்,உடலளவிலும் இருந்து மீளவே இல்லை..

விக்னேஷ்...விக்னேஷ்...

ஒரு பெரு மூச்சுக்கு பிறகு தனது கடந்த கால நினைவுகளிலிருந்து திரும்ப வந்தான்..

வாழ்க்கையில் பட்ட வலிகளுக்கு உள்ளுக்குள் அழுதாலும் வெளியே அதை காட்டாமல் இருந்தவன்,முதன் முதலாய் வயிற்றை பிடித்து கொண்டு அழுதான்..

ஐயோ..அம்மா..வலிக்குதே...

டே கடவுளே...என்னை இப்படி கத்த வச்சு,கதற வச்சு,அழ வச்சு,துடிக்க வச்சு சித்திரவதை செய்யுறதுக்கு பதிலா ஒரேயடியா கொன்னுடுடா...

அவன் வலியால் துடிப்பதை பார்த்து சிகிச்சை அளிக்க வந்த மருத்துவருக்கும் கண் கலங்கியது..வேறுவழியின்றி அவனுக்கு மயக்கமருந்து கொடுக்கப்பட்டது..

ஒரு வார காலம் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும் அவனது உடல்நிலையில் எந்த முன்னேற்றமும்

இல்லை அவன் மரண தினங்களை விரல் விட்டு எண்ணத் தொடங்கியிருந்தான்..

அவன் மரண தினம் குறிக்கப் பட்டு விட்டது ஆனால் என்று தான் அவன் மரணம் என்பது அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம்..

மிஸ்டர்..விக்னேஷ்..உங்க டிரீட்மெண்ட்க்கு ஆக கூடிய செலவு உங்க இன்சூரன்ஸ் கம்பெனிக்கிட்ட இருந்து வந்திரும்..நீங்க இன்னும் எத்தனை நாள் வேணும்னாலும் டிரீட்மென்ட் செஞ்சுக்கலாம்,மருந்து,மாத்திரை ஒழுங்கா எடுக்கிறதா இருந்தா உங்க வீட்டுக்கு கூட போகலாம்..

கொஞ்ச நாளைக்கு பழச்சாறு,கஞ்சி மட்டும் சாப்பிடுங்க..

சரிங்க டாக்டர்..

நான்வீட்டுக்கேபோறேன்டாக்டர்..ஒழுங்கா மருந்து மாத்திரை எடுத்துக்கிட்டு நீங்க சொன்ன உணவையே சாப்பிடுறேன்..

அப்ப சரி..நீங்க இன்னைக்கே டிஸ்டார்ஜ் ஆகிக்கோங்க..

அன்று மாலை

மருத்துவமனை விட்டு வெளியே வந்தவன் கண்ணில் கும்பகோணத்து ஒரிஜினல் டிகிரி காபி கடை கண்ணில் பட்டது..

நேரே கடைக்கு சென்றவன் ஒரு பில்டர் காபி ஆர்டர் செய்தான்,கையில் காபி வந்தவுடன் ஒரு சிப் அருந்தினான்.. பூங்கொடியின் இதழ் வாசனை அந்த காபியின் ஒவ்வொரு மிடறு,மிடறாய் துளியிலும் நிறைந்து இருந்தது..இன்னும்..இன்னும் என்று கடைசி துளி மிடறுவையும் சுவைக்க எண்ணினான்..

அப்போது இதுவரை சிலுவைகளை சுமந்து கொண்டிருந்த அவனது உயிர் பூங்கொடியிடம் சென்றிருந்தது..அவன் கண்கள் மட்டும் மூடாமல் பில்டர் காபியையே பார்த்து கொண்டிருந்தது..

● த. ரவீந்திரன்

# உந்தன் நினைவுகள்..!

இரவுகள் தெளிவாக
விடிந்தும் விடியாதது போலாகிறது.!

விழிகள் மூடிய நிலையில்
முகவரி தேடுவது போலாகிறது.!

விழிகள் மூடாது
ரசித்தவாறே ரகசியமாக
காட்சிகளுக்கு
வண்ணம் தீட்டுகிறது..!

பிழையில்லா கவிதையும்
பிழையாக தெரிகிறது..!

கவிதையே நீ அருகிலில்லா
பொழுதினில் காவியமாகிறது..!

நொடிகள் தவறாது
துடித்து காற்றில் கலந்த
இசையென பதங்கமாகிறது..!

என்னை நானே ரசித்தேன்
உன்னுள் தொலைந்து.!

என்னுள் தேடுகிறேன்
என்னை மீளாது.!

உயிரின் உலக நியதியாக
உந்தன் நினைவுகள்..!

● ஹிந்தியில் : தூமில்
● தமிழில் : வசந்ததீபன்

# இரு மொழிபெயர்ப்பு கவிதைகள்



### இருபது வருடங்களுக்குப் பிறகு

இருபது வருடங்களுக்குப் பிறகு
என்னுடைய முகத்தில்
அந்தக் கண்கள்
திரும்பி வந்து இருக்கின்றன
அவற்றால் நான்
முதன் முறையாக
காட்டைப் பார்த்து இருக்கிறேன்
பச்சை வண்ண
ஒரு பெரு வெள்ளத்தில்
எல்லா மரங்களும் மூழ்கிப் போய் இருக்கின்றன.

மேலும் எங்கே
ஒவ்வொரு எச்சரிக்கையும்
ஆபத்தை விலக்கிய பிறகு
ஒரு பச்சைக் கண்ணாகி
வாழ்ந்தபடி இருக்கிறது.

இருபது வருடங்களுக்குப் பிறகு
நான் எனக்குள்ளாகவே
ஒரு கேள்வி எழுப்புகிறேன்
மிருகமாவதற்கு எவ்வளவு பொறுமை அவசியமாகிறது
மேலும்
எந்த பதிலுமற்று மௌனமாக
முன்னோக்கி செல்கிறேன்
ஏனென்றால்
ரத்தத்தில் எழுகின்ற இலைகளை பின் தொடர்வது மொத்தத்தில்
பொருளற்றதாக இருக்கிறது என்று தற்சமயம் பருவங்களின்
இயல்பு இவ்வாறாக இருக்கிறது.

மத்தியானம் முடிந்து போயிருக்கிறது
ஒவ்வொரு பக்கமும் பூட்டுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன..
சுவர்களில் ஒட்டியிருக்கிற சிறு துப்பாக்கி ரவைகளின் கூழாங்கற்களும்..
சாலைகளில் சிதறியிருக்கிறது பூட்ஸின் மொழியில்
ஒரு கெட்ட நிகழ்வு எழுதப்பட்டு இருக்கிறது..
காற்றால் படபடக்கும்
இந்திய வரைபடத்தின் மேல்
பசு சாணமிட்டு இருக்கிறது.

ஆனால்
இந்த நேரம் பயப்படுகிற
மக்களின் வெட்கம்
மதிப்பிடக்கூடியாதவும் இல்லை
தேசத்தினுடைய மிகப்பெரிய துரதிருஷ்டம்
யாராக இருக்கிறார்களென புனிதர்கள் மற்றும்
சிப்பாய்களிடத்தில் விசாரிக்கப்படவும்வில்லை.

ஐய்யோ! திரும்பி வந்து
விட்டுச் சென்ற பூட்ஸுகளில்
விரல்கள் நுழைப்பதற்கான நேரம்
இது இல்லை.

இருபது வருடங்களுக்குப் பிறகு
இந்த மத்தியானத்தில்
வெறுமையான தெருக்களோடு திருடனைப் போல கழித்து..
நான் எனக்குள்ளாக கேள்வி எழுப்புகிறேன்
என்ன சுதந்திரம்
மூன்று களைப்படைந்த நிறங்களின் பெயராக மட்டுமா இருக்கிறது?

அவைகள் ஒரு சக்கரத்தை சுமக்கிறது
அல்லது
இதற்கு விசேசமான அர்த்தம் இருக்கிறதா?

எந்தவித பதில் இல்லாதற்கு முன்பாக
முன்னோக்கிச் செல்கிறேன்
மௌனமாக.

❐

## இன்று நான் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறேன்

*பூக்களின் சிரிப்பிற்கு விரோதமாக*
*சங்கிலிகள் ஒலித்துக் கொண்டிருக்கின்றன*
*மேலும் உறவுகள்*
*பழக்கத்தை மாற்றுவது தேடுதலில் இருக்கின்றன.*

*இன்று இருக்கிறது*
*மற்றும் ரத்தம் படிந்திருக்கிறது*
*கைகளில்*
*அதை நாங்கள் பெற்றிருக்கிறோம்*
*அவன் தொட்டிலில் இல்லை*
*ரத்தம் நனைந்த வலியால் முனகும் சப்தம் அருகில் இருக்கிறது.*

*குழந்தைகள் பசித்து இருக்கின்றனர் :*
*அம்மாவின் முகம் கல்லாக..*
*அப்பா மரக்கட்டை போல*
*தன்னுடைய நெருப்பில் எரிந்து இருக்கிறது*
*அந்த வீடு முழுவதும்.*

*தொழில் ரோஜாக்களின் சிரிப்பால்*
*வெளியேற்றப்பட்டிருக்கிறது வசந்தம்*
*மற்றும் கவிதையின் நரம்புகளில்.*

*பாய்ந்த ரத்தம்*
*தேவையின் இடத்தில்*
*தொந்தரவை உண்டாக்கியிருக்கிறது.*

*அடிக்கடி கேள்விகள் எழுகிறது*
*எங்கேயிருக்கிறார்கள் இளைஞர்கள்?*
*மாற்றத்தின் சக்கரம்?*
*பசித்த வரலாறு?*

*மஞ்சள் இலைகள்*
*இலையுதிர் காலத்தின் பக்கம்*
*போய் இருக்கின்றனவா?*
*நகைச்சுவைத் துணுக்குகள் போல*

*சுற்றியலையும் பெண்களின் முலைகள்*
*பொய்யாய் இருக்கின்றனவா?*
*பொய்யாய் இருக்கின்றனவா இளைஞர்களின் பற்கள்?*

*அவரின் தாடைகள் ஏன் கிண்ணமாக இருக்கின்றன?*
*அவர்களின் ரத்தம் வழுக்கிச் செல்லத்தக்கதாய் இருக்கிறதா?*

*நான் கேட்கிறேன்*
*பதில் மெதுவாக என்னுள் மேலெழுகிறது*
*சிறைக்ககூடத்தின் இருண்ட சிறைச்சுவர் மேலெழுவதைப் போல*
*வார்த்தை :*
*நாளை கேட்கும் என்னை*
*அப்போது பால்ச்செடிகள்*
*உதிர்த்து கொண்டிருக்கின்றன*
*வெள்ளைப் பூக்கள்.*

*நிசப்தம் கழிந்தது*
*குழந்தைகளின் சத்தத்திலும்*
*முற்றத்தில் மாமிசத்தோடு ரொட்டி சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாய்*
*அப்போது*
*உடனடி (சம்பாதித்து) சாப்பிடும் குஷி*
*குடும்பம் மற்றும் சகோதரன் வழியில்*
*மாறிப் போய்க் கொண்டிருக்கிறதோ*
*நாளை கேட்கும் என்னை.*

*இன்று நான்*
*சண்டை போட்டுக் கொண்டிருக்கிறேன்.*

**தூமிலின் வாழ்க்கைக் குறிப்பு :**

*தூமில் ( ஸுதாமா மாட்டேன்)*
*பிறப்பு : 09, நவம்பர், 1936, இறப்பு : 10, பிப்ரவரி, 1975, பிறந்த இடம் : கேகலி, வாரணாசி ( உ.பி. மாநிலம், இந்தியா ), படிப்பு : மெட்ரிக் ( முதல் தரம்),டிப்ளமோ இன் எலக்ட்ரிக்கல். தொழில் : 1964 வரை உத்தரபிரதேசத்தில் மாநில அரசு தொழிற்பயிற்சி பயிற்சி நிலையத்தில் வேலை. அடிப்படையாக விவசாயம், வெளிவந்த நூல்கள் : ஸம்ஸத் ஸே ஸ்டிக் தக் (1972) கல் சுன்னா முஜே (1977), பெற்ற பரிசு : முக்திபோத் புரஸ்கார்*

● தே.கோகிலவாணி




# ஓநாய் குலச்சின்னம் - நூலறிமுகமும், நயப்பும்

சீனமொழியில் எழுதப்பட்ட மேற்படி நாவல் ஜியாங் ரோங் அவர்களது முதலாவது படைப் பாக 2004 ல் எழுதி வெளியிடப்பட்டது. இந்நாவலின் தமிழாக்கம் சி.மோகன் அவர்களினாற் செய்யப்பட்டுள்ளது. ஓநாய் குலச்சின்னம், என்னும் இந்நாவல் மிகத் தொன்மையான மேய்ச்சல் நில வாழ்க்கை பற்றிய ஒரு வரலாற்றுப்புனைவு. கலாசாரப் புரட்சியைத் தொடர்ந்து சீனாவில் மேற்கொள்ளப் பட்ட புரட்சிகர நடவடிக்கைகள் மூலம், ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நிலவிவந்த மிகவும் தொன்மையானதும் மகத்தானதுமான மேய்ச்சல்நில நாகரிகம் அதற்கடுத்த முப்பது ஆண்டுகளுக்குள்ளாக அழித்தொழிக்கப்பட்ட வன்முறையின் வரலாற்றுப் புனைவு இந்நாவல். இளைஞர்களும் மாணவர்களும் மலைப்பகுதிகளுக்கும் கிராமப்புறங்களுக்கும் சென்று அங்குள்ள மக்களோடு இணைந்து வாழ்ந்து உழைக்க வேண்டுமென மாவோ விடுத்த அழைப்புக்கேற்ப, நூறு இளம் மாணவர்கள் வட - மத்திய உள்மங்கோலியாவின் மிகவும் தொன்மையான மேய்ச்சல் நிலத்துக்குச் சென்றனர்.

பழங்குடியினரிடமும் கிராமப்புற மக்களிடமும் நிலவிவரும் 'நான்கு பழமை'களான பழைய சிந்தனை, பழைய கலாசாரம், பழைய சடங்குகள், பழைய பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை அகற்றிப் புரட்சியைப் பூரணமாக்கும் நடவடிக்கையின் ஓர்

அங்கமிது. ஆனால் ஒத்த சிந்தனையும் மனோபாவமும் கொண்ட நான்கு மாணவர்கள் அங்கு ஒரு குடிலில் சேர்ந்து வாழ்ந்து - இருவர் ஆடுமேய்ப்பர்களாகவும், ஒருவன் மாடு மேய்ப்பனாகவும், ஒருவன் குதிரை மேய்ப்பனாகவும் - மேய்ச்சல் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது, தொன்மையான மேய்ச்சல் நில தார்மீகங்களால் வசீகரிக்கப்படுகிறார்கள். தொன்மங்களால் ஈர்க்கப்படுகிறார்கள். மேய்ச்சல் நிலத்தின் ஆன்மாவிடம் தங்களை ஒப்படைக்கிறார்கள்.

இந்நால்வரில் ஒருவனான ஜென் சென் மேய்ச்சல்நில ஓநாய்களின் வசியத்துக்கு ஆட்படுகிறான். ஓநாய்கள் குறித்து நேரடி அனுபவமும் ஞானமும் பெறுவதற்காக ஒரு ஓநாய்க்குட்டியை எடுத்து வளர்க்கிறான். அந்தச் சீன இளைஞனின் பார்வையில், சுய வாழ்க்கை அனுபவங்களின் ஊடுபாவலோடு உருவாகியிருக்கும் மகத்தான படைப்பு இந்நாவல். ஓநாய் குலச்சின்னமானது மேய்ச்சல் நிலத்தின் ஆன்மா. மங்கோலிய மேய்ச்சல்நில நாடோடி மக்களின் ஞானகுருவாகவும், போர்க் கடவுளாகவும், மேய்ச்சல்நிலக் காவலனாகவும், குலச்சின்னமாகவும் விளங்கிய ஓநாய்கள் அழித்தொழிக்கப்பட்டு மேய்ச்சல்நில ஆன்மா சிதைவுற்ற கதை. மேய்ச்சல் நிலமானது பெரிய உயிர். அங்கு வாழும் பிற உயிரினங்கள், மனிதர்கள் உட்பட, சிறிய உயிர்கள், பெரிய உயிரைச் சார்ந்தே வாழ்கின்றன.

மேய்ச்சல் நிலமெனும் பெரிய உயிரைப் பேணிப் பராமரித்துப் பாதுகாப்பவர்கள் மங்கோலிய நாடோடி மக்களும் ஓநாய்களுமே. பெரிய உயிர் - சிறிய உயிர்கள் என்ற எளிய மேய்ச்சல்நில தர்க்கமுறை அங்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஓர் இசைமையுடன் நிலவிவருகிறது. ஆனால் 'மனிதனே பிரதானமானவன்' என்ற மாவோவின் சிந்தனை அங்கு அதிகாரம் செலுத்தத் தொடங்கியதும் மேய்ச்சல் நிலத்தின் பாதுகாவலர்களான ஓநாய்கள் குரூரமான வழிமுறைகளில் அழித்தொழிக்கப்படுகின்றன. மேய்ச்சல் நிலத்தின் இருப்புக்கு ஆதாரமாக இருந்த ஓநாய்கள் மறைந்ததும் அது தன் ஆன்மாவை இழக்கிறது. மேய்ச்சல் நிலம் பாலை நிலமாகிறது. மேய்ச்சல்நில நாடோடி மக்களின் ஓநாய் அரசனான முதியவர் பில்ஜி பயந்ததெல்லாமே, அவர் இறந்து இருபது ஆண்டுகளுக்குள்ளாக நடந்து முடிகின்றன. மேய்ச்சல் நிலம் பாலைநிலமாகி பீஜிங்கைப் புழுதிப்புயல் தாக்குகின்றது." இது நாவலின் சுருக்கம்பற்றிய மொழி பெயர்ப்பாளரின் குறிப்பு இது.

ஓநாய் என்பது மிகக் கொடூரமான காட்டுமிருகம், எப்படி ஒரு குலச்சின்னமாக முடியும், என்ற எண்ணமே இந்நாவலை வாசிக்கத் தூண்டிற்று. வாசித்து முடித்ததும் அந்த மங்கோலிய ஓநாய்களைவிட்டு மீள முடியாதபடி வியப்பு மட்டுமல்ல, அவற்றின் மீது மதிப்பும் உண்டானது. "ஆண் தலைமை முன்னிற்க, மிகவும் மூர்க்கமான ஓநாய்கள் முன்னின்று செயல்படுபவையாகவும், கூட்டத்தின் பெரிய ஓநாய்கள் அவற்றுக்குப் பின் நிற்பவையாகவும் அணி வகுக்கிற ஒழுங்கமைவு; பறக்கும் பறவைகளிடமோ, பிற காட்டு விலங்குகளிடமோ பொதுவாகக் காணப்படுகிற குழப்பங்கள் ஒருபோதும் இவற்றிடம் காணப்படுவதில்லை. அக்காட்சியைக் கண்டு ஜென் எக்களிப்படைந்தான்.". "யுத்தத்தில் ஓநாய்கள், மனிதர்களை விடவும் விவேகமிக்கவை" என்றார் முதியவர். "எப்படி வேட்டையாடுவது, எப்படி சுற்றி வளைப்பது, ஒரு யுத்தத்தை எப்படி நடத்துவது என்பதையெல்லாம் மங்கோலியர்களாகிய நாங்கள் அவற்றிடமிருந்து கற்றுக் கொண்டோம் "என்றார். மனிதர்கள், எதிரியைத் தாக்குகையில் அடி, கொல் எனப் பலத்த குரலெழுப்புவர். நாய்களும் தாக்குதல்களை நிகழ்த்தும்போது, கட்டுக்கடங்கா வெறியோடு அச்சுறுத்தும் வகையில் குரைக்கும். ஆனால் ஓநாய்கள் தாக்கும்போது, அமைதியாக, கத்தலோ ஓநாய்த்தனமான ஊளைகளோ இன்றி அதை நிகழ்த்தும். ஓநாய்களின் அறிவுத்திறனையும் பொறுமையையும், அவற்றின் கட்டமைப்பினையும் கட்டுப்பாட்டினையும் ஜென் நேரடியாகக் கண்டறிந்தான். "ஓநாய்கள் வலுவான கூட்டுணர்வு

கொண்டவை. அவை எப்போதும் இணைந்திருப்பவை. தங்களில் ஒன்றைப் புறக்கணிக்கும் இயல்பு அவற்றிடம் இல்லை."

"ஓநாய்களின் ஆயுதங்களில் ஒன்றான தற்கொலை முறைகளை கொஞ்சமும் நினைத்துப் பார்க்க முடியாத வகையில் மேற்கொண்டன. " "ஒரு மனிதன் அல்லது இனம் சரணடைவதற்கு முன் மரணத்தைத் தேர்வு செய்யக்கூடிய ஆன்மபலத்தைக் கொண்டிராவிடில் அடிமையாவதுதான் தவிர்க்கமுடியாத விளைவாக இருக்கும்". " இயல்பாய் அமைந்திருக்கும் உள்ளுணர்வுகள் சார்ந்த பார்வையில், ஓநாயை விடவும் மனிதன் குரூரமானவன்." இவ்வாறு, கதையின் நாயகன் ஜென் மேய்ச்சல் நிலத்தலைவரிடமிருந்தும், நேரடியாகவும் ஓநாய்களின்ஆச்சரியமூட்டும் குணாம்சங்களையும் வாழ்க்கை முறைகளையும் கேட்டும் கண்டுணர்ந்தும் படிப்படியாக அவற்றால் வசீகரிக்கப்படுகிறான். அவன் ஆன்மா அதன் வசப்படுகிறது. சீனர்களால் மிக இழிவாகவும் கொடூரமாகவும் கருதப்படும் ஓநாய் எவ்வாறு இவர்களது குலச்சின்னமானது, என்பதும் புரிகின்றது.

இதன் காரணமாக, ஜென், ஓநாய்களின் நடத்தைகளை மிக அருகில் இருந்து அவதானிக்க வேண்டுமென்ற உந்துதலில், உயிரைப் பணயம் வைத்து ஓநாய்க் குகை ஒன்றிலிருந்து ஓநாய்க்குட்டி ஒன்றைப் பிடித்துவந்து வளர்க்கத் தொடங்குகிறான். ஓநாய்மீது மிகுந்த நேசம் கொள்கிறான். அதுவும் அவனோடு இணங்கி வளர்கிறது. ஆனால் ஓநாய்களுக்கேயுரிய தனித்துவமான நடத்தைப்பண்புகளினால் ஜென் பல சவால்களை எதிர்கொள்கிறான். முடிவில், இயலாத ஒரு கட்டத்தில் அவனே அதைக் கொலை செய்கிறான். " ஜென் துள்ளி எழுந்து, குடிலின் ஒரு பக்கமாக ஓடிச் சென்று, அங்கு கிடந்த கைப்பிடி உடைந்த மண்வெட்டியை எடுத்தான். மண்வெட்டியை அவனுக்குப் பின்னால் பிடித்துக்கொண்டு, திரும்பி, ஓநாய்க்குட்டியை நோக்கி ஓடிச் சென்றான். அது அங்கேயே கடுமையான மூச்சுத் திணறலோடு உட்கார்ந்திருந்தது; ஆனால் அது மீண்டும் குப்புற விழுந்துவிடும் என்பதுபோலக் காணப்பட்டது. ஜென் அதற்குப் பின்னால் சென்று, மண்வெட்டியை உயரத் தூக்கி, தன்னுடைய முழு பலத்தையும் திரட்டி, ஓநாய்க் குட்டியின் தலையில் அதைக் கனமாகப் போட்டான். ஓநாய்க்குட்டி எவ்வித சத்தமும் எழுப்பாமல் தரையில் விழுந்தது. கடைசிவரை, அது ஒரு அசலான மங்கோலிய மேய்ச்சல்நில ஓநாயாகவே இருந்தது. அச்சமயத்தில், அவனுடைய ஆன்மா அவனிடமிருந்து அழுத்தியெடுக்கப்பட்டு விட்டதுபோல ஜென் உணர்ந்தான். அவனுடைய தலைக்கு மேலாக, அவனுடைய ஆன்மா வெளியேறிச் செல்லும் சத்தத்தை அவன் மீண்டும் கேட்டுக்கொண்டிருப்பது போலத் தோன்றியது. ஒரு வெண்பனிப் பேயைப்போல, அவன் ஓநாய்ப் பட்டியில் உறைந்துபோய் நின்றிருந்தான்."என மிகுந்த சோகத்தோடு ஓநாய்க்குட்டியின இறப்பு விபரிக்ககப்படுகிறது.

தொடர்ந்து பீஜிங் திரும்பும் ஜென் பல வருடங்களின் பின் அங்கு மீண்டும் வருகிறான். ஓநாயைக் கண்டெடுத்த அதே குகைக்குச் சென்று ஓநாயையும் மேய்ச்சல் நிலத்தலைவரைய்ம் நினைவு கூருகிறான் "குட்டி ஓநாய், குட்டி ஓநாய்.. அப்பா, அப்பா.. உங்களைப் பார்ப்பதற்காக நான் இங்கு வந்திருக்கிறேன்" என்று கூக்குரலிட ஜென் விரும்பினான். ஆனால் அவனால் அப்படிச் செய்ய முடியவில்லை. அதற்கான அருகதை அவனுக்கில்லை. அவர்களுடைய ஆன்மாக்களைத் தொந்தரவு செய்ய அவனுக்குத் துணிவில்லை;" மேய்ச்சல் நிலத்துமக்களுடனும், உன்னதமானவையாக விபரிக்கப்படும் ஓநாய்களுடனும் கூடி வாழ்ந்தது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்திச் சோகசங்கீதமாய் முடிகிறது நாவல். மிகச்சிறந்த ஒரு நாவலை வாசித்த திருப்தியையும் தருகிறது. ஒரு மொழிபெயர்ப்பு நாவலென்ற உணர்வைச் சற்றும் ஏற்படுத்தாது பிசிறற்ற, ஆற்றொழுக்கான தமிழ்மொழிபெயர்ப்பு, நாவலின் சிறப்பென்பதையும் குறிப்பிடவேண்டும்.

● சதீஷ் குமரன்



# கைது

உரக்கச் சொன்னேன்
நடுத்தெருவில்நின்று
சாதி இல்லையென்று..
திரண்டு வந்தார்கள்
மக்கள்
பெரும்படையாய்
என் பின்னேயும்
முன்னேயும்
சாதிக்கொருவராய்
ஒவ்வொருவரின் கைகளில்
இறுகித் தடித்த அடிமை தடிகளுடன்.
தக்க சமயம் பார்த்து காத்திருந்தக் கடவுள்
எல்லைத்தாண்டி ஓடிக்கொண்டிருந்தார்
ஊரைவிட்டு தப்பி உயிர் பிழைக்க.
பிடித்து கைது செய்தார்கள்
என்னை
கடவுள் தப்பிக்க உடந்தையென்று.



# நாகா (துபாய்) கவிதைகள்

பொழுது விடிந்ததில் இருந்து கோகுலமாகிக் கொண்டிருந்தது என் வீடு
பிஞ்சு பாதங்களால் மூச்சு திணறிய அறைக்குள் இருந்து
விழிக்கிறேன் நான்..
பொம்மைகள் உடைந்த சத்தங்கள் கேட்டதில்லை இதுவரை
அறைமுழுதும் பொம்மைகளோடு பொம்மைகளாக நாங்கள்..
எதிர்வீடு பக்கத்துவீடு கீழ்வீடு என எல்லா வீட்டு கதவுகளும்
என் வீட்டு கதவு திறந்து உள் நுழைந்துகொண்டிருந்தது..
சப்தங்களின் களிறு புகுந்ததில் கொஞ்சம் ஆடித்தான் போகிறோம்
சிதறிய மயில் தோகையாக அவளும் ஒற்றை புல்லாங்குழலாக நானும்..
கண்ணன்களும் மீராக்களும் ராதைகளுமாக
அவள் ஒப்பனைகளில் வந்து வந்து போனார்கள்..
ஒரு கண்ணனுக்காக காத்திருந்தவள் தற்போது

நூறு கண்ணன்கள் ராதைகளுக்கு மத்தியில் சத்தமில்லாமல்...
யசோதைகளின் விரல் பிடித்து அழைத்து போகும்
எதிரெதிர் வீட்டு கண்ணன்களுக்கு
டாட்டா காட்டிக்கொண்டிருக்கிறாள் வெகுநேரமாக
கண்களில் கசியும் கண்ணீரை துடைத்தப்படி..

❒

உள்ளங்கை மடக்கி நிலா பொத்தி வைத்திருப்பதாக
சொல்லி சிரிக்கிறாள் பிஞ்சு மைனா அஃகிரா...
“பாவம் மூச்சுத் திணரப்போகுது விட்டிடு “
அவள் உள்ளங்கை பிரித்து நிலா விடுவிக்கிறேன் நான்..
தாத்தாவின் கிணற்றடியில் மூச்சிரைக்க ஓடி
தடுக்கி விழுந்த நிலவை பார்வை பரிசலில் கரையேற்றுகிறாள்..
கை அகல விரித்து விரல்களில் காற்றைக் கிழிக்கிறாள்
அவள் பறவையாகிக் கொண்டிருப்பதாக சொல்லிச்செல்கிறது வானம்...
வானின் கூட்டைத் திறந்து உள்நுழையும் இரவுக்கு
மின்மினி பூச்சிகளை பரிசளிக்கிறாள் ஒரு தேவதையாக அவள்..
தன்னை எப்படி அழைக்கப்போகிறாளோ
நெடுநேரம் காத்திருக்கிறது வீட்டுவாசலில் ஒரு மழைக்குருவி..
தோப்பாகிக்கொண்டிருக்கும் எங்கள் வீட்டுக்குள்
தன் சொப்பு உதடுகளில் இல்லாத குயிலை கூட்டிவருகிறாள்..
அவள் பிஞ்சுவிரல்கள் பதியனிட்டடத்தில் பூப் பூக்கிறது
றெக்கைவிரிக்கும் அவள் நடைவண்டியின் சக்கரங்கள்..
உங்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள வேண்டும் நான்
எல்லா பறவைகளுக்கும் அஃகிரா என்று பெயரில்லை...

❒

அடிக்கடி அப்பாவின் சட்டையை போட்டுக்கொள்வாள்
எப்போதாவது என் டி-சர்ட்டுக்குள்ளும் நுழைந்துகொள்வாள்..
என் தட்டுக்குள் இருந்து அவள் தட்டுக்கும்
அவள் அலமாரிக்குள்ளிருந்து என் அலமாரிக்கும்
அடிக்கடி இடமாறிக்கொண்டே இருக்கும் எதுவும்..
அம்மாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது பெண்ணாக
கர்வத்துடன் வீட்டிற்குள் வலம் வந்தவள் அவள்

இரண்டாவது ஆணாக அப்பாவிற்கு பதிலாக என்னை வைத்துக்கொண்டே..
என் பார்வையில் அவள் டாம் அவள் பார்வையில் நான் ஜெர்ரி
அம்மா பார்வையில் நாங்கள் எப்போதும் கீரியும் பாம்பும்..
அதிசயமாக என் வீட்டுப்பாடத்தை அவள் எழுதிக்கொடுப்பாள்
அவள் ரெக்கார்ட் நோட்டுக்கு நான் படம் வரைவேன்...
அவளுக்கு பாடவரும் அபிநயமும் அத்துப்படியாகும்
மறைந்திருந்து நான் பார்ப்பதை கவனிக்காமல் கவனிப்பாள்..
அப்பா வீட்டை விற்க ஏற்பாடு செய்ததும்
அம்மா காதுமூக்கு துழாவி தங்கம் திரட்டியதும்
தோட்டத்தில் பூத்திருந்த செம்பருத்திக்கருகில்
வெட்கம் கலந்த கண்ணீரோடுஅன்று அவளை பார்த்தேன்..
அம்மாவின் புடவையை கட்டிப்பார்த்து ஜான்சிராணி என்றவள்
அப்பாவின் வேட்டியில் முண்டாசுக்கட்டிக்கொண்டு பாரதி என்றவள்
அந்த மண்டபத்தில் வெட்கத்தை பூட்டிக்கொண்டு நின்றாள்..
முதல் முறையாக என் கண்களிலிருந்து விழுகிறது கண்ணீர்
அந்த கண்ணீருக்கு இப்போது அக்கா என்று பெயர்..

❐

மழை வழுக்கி விழுந்தது வாசலில் வானம்
தரையெங்கும் சூரியனும் நிலவும் நட்சத்திரங்களும்..
வானத்தில் கால்வைத்து பூமியை அண்ணார்ந்து பார்த்து
வேர்களில் தடுக்கி விழுகிறார்கள் தேவர்கள்..
நிலத்தில் கூடுகட்டும் பறவைகளுடன் அந்தரத்தில் தொங்கும்
வௌவால் மனிதர்களின் உரையாடலுக்கு
திரைக்கதையமைக்கிறான் இளம் இயக்குனன் ஒருவன்..
இனிமேல் பூமியை வானம் எனவும் வானத்தை பூமியெனவும்
சொல்லிக் கொள்ளலாமா என்று வருங்கால குழப்பத்திற்கு
விதைவிதைக்கிறான் சமூக அக்கறையில் பேசிக்கொண்டிருப்பவன்..
சாலையில் செல்லும் விமானங்களில்
படிக்கட்டு பயணம் செய்கிறான் இளைஞன் ஒருவன்..
ஒரு பிடி மேகம் அள்ளிக்கொண்டவனுக்கு
அபராதம் விதித்த நீதிபதியின் வீட்டு வாசலில்
சங்கிலியை மீறி குறைக்க ஆரம்பித்தது அந்த பூனை..

● சா.கா.பாரதி ராஜா

# நெடுஞ்சாலை



சாரை சாரையாய்
ஊர்ந்து செல்கின்றன
சக்கரம் கட்டிய எறும்புகள்!

மஞ்சள் மஞ்சளாக
இரவில் பூக்கின்றன
மின் விளக்குப் பூக்கள்!

சண்டை போட்ட வண்டிகள்
எரிபொருள் குருதி வழிய
கவிழ்ந்து வானைப் பார்க்கின்றன
வாய் பிளந்து!

மனிதனைப் போலவே வண்டிகளும்
முன்னே மஞ்சளென சிரித்து
பின்னே எச்சரிக்கின்றன

மறித்த வழிப்பறிக் கூட்டம்
பிடுங்கிக் கொடுத்த இரசீது
பறந்து போனது
குண்டும் குழியுமான சாலையில்!

காக்கிச் சட்டை கால்கள்
விறைத்து நின்றது
சிகப்பு ஹாரன் சத்தத்திற்கு!

வெள்ளைத்தாளில்
எழுதப்பட்ட கருப்பு மையை
அழிக்கும்
வெள்ளை அழிப்பான் போல..
கருப்புச் சாலையில்
கொட்டிய செந்நிறத்தை

கொஞ்சம் கொஞ்சமாக அழித்தன
கருப்புச் சக்கர அழிப்பான்கள்!
உள்ளிருப்பவனுக்காக
அலறும் அவசர ஊர்தி
வெளியில் பயணிப்பவனுக்கும்
எச்சரிக்கை விடுத்தே பயணிக்கிறது

சன்னலின் ஓரம்
உறங்கும் எனக்கு
மழை தருவதற்கு முன்பே
பிடிக்கிறது வானம்
வானவில் குடையை!

இரசிக்க மறந்து உறங்கும்
என் தலையில் கொட்டி
கன்னத்திலும் கிள்ளுகின்றன
விழும் தூறல்கள்!

கடந்து செல்லும்
மனிதர்கள் மத்தியில்
அழுக்கோடு படுத்திருப்பவனிடம்
மனிதத்தைக் காட்டுகின்றன
அசோகர் நட்ட மரமும்
முன்னோரான குரங்கும்!

**● தங்கேஸ்**

சொற்கள் புரியாத எனது கவிதைகளெங்கும்
ஊர்ந்து செல்கின்றன நினைவுகள்
உன் மோதிர விரல்களில் சுருண்டு விடும்
மரவட்டையென
ஒரு தீண்டலில்

பிறிதொரு நாள் பின் மழையில்
வீதியெங்கும் உருண்டோடும்
பழுப்பு நிற நீரில் மிதந்து போகும்
யார் விட்ட கப்பலோ
என்னையும் ஏற்றிக் கொண்டு

வேரோடு பிடுங்கி எறிந்து விடும்
என் நேசத்திற்கு பயப்படும்
உனது அகங்காரம்
என்னை குகை மனிதனாக்கி விட்டு
எங்கு புதைந்திருக்கிறதோ
தலைமறைவு வாழ்க்கைக்கு



எத்தனை முறை அழித்தாலும்
தழைக்கும் என் துளசி செடி
மீண்டும் வளர்வதும்
செம்பருத்தி செடிகள்
இருகரம்சிறகு விரித்திருப்பதும்
அதன் இயல்பிற்கே அன்றி
வண்ணத்துப்பூச்சிகள்
அமர்ந்து செல்வதற்கல்ல



● கௌந்தி மு, சென்னை.

# யாதொன்றும் அறியா தாயாகி

இலையின் பசுமையை
அறிந்ததில்லை..
கிளையின் வலிமையை
உணர்ந்ததில்லை..
பூவின் அழகினை
ரசித்ததில்லை..
பழமதின்
சுவையினை ருசித்ததில்லை..
வடியும் பாலினை
கண்டதில்லை..
தனக்கான வாரிசு
விழுதிலிருந்தா விதையிலிருந்தா
என்பதையும்
காணப்போவதில்லை..
இருந்தும்
வயிற்றில் சுமக்கும் சிசுவைப்பற்றி
யாதொன்றும்
அறியா தாயைப்போல
சுமந்து நிற்கிறது
அம்மரத்தை
படர்ந்து விரிந்த அதன் வேர்..

**● கவிஞர் மீன் கொடி (பாண்டிய ராஜ்)**



வெளியே கனமான மழை
வெளுத்து வாங்கிக் கொண்டிருக்க
நான் எதைப் பற்றிப் பேசவேண்டும்
என்று என் மனதின் குழப்பத்தை
அசைபோட்டுக் கொண்டிருக்கிறேன்

மழை மழை என்று சப்தமிட்ட
என் பக்கத்து வீட்டுக் குழந்தையின்
உள்ளங்கையில் விளையாடுகிறது
தொடக்கத்தில் விழுந்த ஒரு துளி

விடு விடு விளையாடட்டும் என்று
மெல்லிய குரலில் சொல்லிய அப்பாவின்
வேண்டலைத் தாண்டி விழுந்தது
அம்மாவின் அதட்டல்

பாவம் ஒன்றும் புரியாத குழந்தை
கையில் பிடித்து வைத்திருந்த
ஒரு துளி மழையைக் கடலாக நினைத்து
மகிழ்ந்து கொண்டிருக்கிறது

திடீர் என்று அவள் தாய்
கையை ஓங்கித் தட்டிவிட்டு
கண்ணத்தில் அடித்த அடியில்
மறந்துபோனால் சிறுமி
மழையில் விளையாடுவதை

நான் சொல்ல முடியாமல்
தவியாய் தவிக்கிறேன்
இது குழந்தையின் உலகம்
என்பதை..
நான் மீண்டும் குழப்ப நிலையில்
யாருக்கானது இந்த உலகம்.

● சாந்த்க்கண்ணா, ஒஸ்லோ

# வண்டும் வாலகனும்

கழிவுருண்டையை
உந்தித்தள்ளியும், இழுத்தும்
உயரே ஏற்றிய இரு
வண்டுகளைப்பார்த்து
ஒரு வாலகன் கேட்டான்

உருவிலும் பெரிய
உருண்டையைச் சுமக்கிறீர்

மூடர்களே!
முடியாத செயலென மோட்டு
மூளைக்குப் புலராதா..?

“முடியுமென்று முழுதாய் நம்பி
கொண்ட கொள்கையிலே
குறியாகவுள்ளோம்

இத்தனை தூரம் காவிவிட்டோம்
இனி எத்தடை வரினும்
இடையில் விடோம்

இலகல்ல,,,எனினும் எமது
இலக்கிதென்றானபின் வரும்
வலியெல்லாம் நல்
வாழ்வுக்கான வழிப்படிகளே

நாளை எமதில்லமேகின்
இவ்வுருண்டை இருக்கக்
காண்பாய்”

சொல்லியபடியே செயலைத்
தொடர்ந்தது வண்டு



நீண்டெழுந்த நினைவலைகள்
மீண்டும் மாண்டழிந்த
கனவுசொல்ல
யாரை நோவதென்றறியாமல்
வினாக்களே விடையாகக்
கிடைக்கின்ற கேள்விகளோடு
வாலகன் வானம் நோக்க
தரையும் நனைந்தது
தாரை,தாரையாக
விழியோரம் வழிந்த நீரால்.

❒

● கல்லூரன்



மரித்துப் போன இலை
நான் ஒரு மரித்துப் போன இலை
உன்னை நோக்கிப் பறந்திருப்பேன்
ஒரு துள்ளும் மேகமாக இருந்திருந்தால்.
எல்லாத் தோழர்களும் வந்து சேரட்டும்
பின்பு உன்னை நான் கேட்பேன்
'அன்பை அன்புக்காக வைத்திருந்தாயா' என்று.
நிமிடங்கள் கட்டிகளாகி
பாரங்களாகி
என்னை சங்கிலியிட்டு விட்டன.
நான் தலை குனிந்து கொள்கிறேன்
என்னை உனது பிணத்தில்
எரியும் நெருப்பாக்கி வை
இறந்துபோன நினைவுகளை மீண்டும்
இப்பிரபஞ்சம் நோக்கி செலுத்திப் பார்
காய்ந்து சருகாகிப் போன இந்த இலை
ஒரு புதிய ஜனத்தை உயிர்ப்பிக்கக் கூடும்.
அவிந்து போன அடுப்பிலிருந்து
நெருப்புத் தெறிப்புக்களும் ஒளிரக் கூடும்
ஒரு மனித நேயத்துடன்
அதுவும் இந்தப் பாடலுடன்.
ஓ என் உயிர்க்காற்றே
உறை பனிக்காலம் வந்தால்
அவர்களைக் கேளுங்கள்
வசந்தம் இன்னும் தூரத்திலா உள்ளது?

**(நன்றி : கோபால்நாதன்)**

● இனியவன் காளிதாஸ்



# அவனும், அவளும்

நான் அந்த வீட்டிற்கு புதிதாய் குடிபோன அன்றே கவனித்தேன் என் எதிர் வீட்டில் குடியிருந்த அவர்கள் இருவரையும்..

அவர்கள் ஆத்மார்த்தமான தம்பதிகளாய் எனக்குத் தெரிந்தார்கள்.

அட இவ்வளவு ஒற்றுமையாய் இருக்க முடியுமா? என யாரும் பொறாமைப்படக்கூடும் அவர்களைப் பார்த்தால், அவ்வளவு அந்நியோன்யம் அவர்கள் இருவருக்குள்ளும். பெரும்பாலும் அவர்கள் எங்கு சென்றாலும் ஒன்றாகவே கைகோர்த்தபடி சென்று வந்தார்கள். அவர்களில் ஒருவரை விட்டு மற்றொருவரை நான் பார்த்ததே இல்லை.

அவர்கள் இருவருக்கும் தனித்தனியே உணவு உண்ண இரண்டு தட்டுகள் இருந்தாலும் பெரும்பாலும் ஒரு தட்டில் இருக்கும் உணவை உண்ணும் பழக்கத்தையே கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்துப் பழகிய சிலநாட்களிலேயே அறிந்து கொண்டேன் அவர்களுக்கு அவர்களைத் தவிர புற உலகைப் பற்றிய கவலை ஒருநாளும் இருந்ததேயில்லை என்று. வீதியில் பலர் இருந்தாலும், அவர்கள் ஒருவருக்கொருவர் ஓடிப்பிடித்து விளையாடுவது கொஞ்சுவது, கெஞ்சுவது என யாரைப்பற்றியும் கவலையில்லாமலே இருப்பார்கள்.

இப்படியாய் நகர்ந்து கொண்டிருந்த நாட்களில் என் அலுவல் பணியாக நான் இரு நாட்கள் வெளியூர் சென்று வீடு திரும்பினேன். நிலவொளி வீசிக்கொண்டிருந்த அந்த முன்னிரவுப் பொழுதில் நான் இதுவரையில் காணாத காட்சியை முதன்முறையாய்க் கண்டேன். அவள் மட்டும் தனியாகப் படுத்திருந்தாள் எதிர் வீட்டில் இலைகளுதிர்த்திருந்த ஒரு மரத்தினடியில். அவள் கண்களில் ஏதோ ஒரு வலியும், விரக்தியும் வேதனையும் இருந்ததை என்னால் உணர

முடிந்தது.

என்னாச்சு இப்படி தனியா இருக்காளே..

இருவருக்குள்ளும் ஏதேனும் பிரச்சினையோ

என எண்ணிக் கொண்டிருந்த வேளையில்

அப்பா என அழைத்தவாறே ஓடி வந்தான் என் மகன் மகிழ்.

உங்களுக்குத் தெரியுமாப்பா??? என்றான்.

தம்பி ஒரு நிமிடம் என்ற நான்..எதிர்வீட்டைக் காட்டி

“ஆமா எதிர்வீட்டுல தனியா படுத்திருக்காளே “ என்றேன்.

அதத்தான்பா..சொல்ல வந்தேன்.இங்க வாங்க என்று என்னை அழைத்துக்கொண்டு அவள் படுத்திருந்த இடத்திற்கு அழைத்துச் சென்றான். அவள் படுத்திருந்த இடம் சற்றே மேடாகவும்,சற்று முன்னைக்கெல்லாம் குழிதோண்டி பின் மூடியது போலும் இருந்தது. அவளை நெருங்க,நெருங்கத்தான் நான் கவனித்தேன்.அவள் கண்களில் தாரை,தாரையாய் நீர் வடிந்து கொண்டிருந்தது. அதைக் கண்டதும் ஏதோ ஒரு இனம்புரியா சோகம் என்னைக் கவ்வத் தொடங்கியிருந்தது.

அவளைக் கண்ட நான்..

“சிட்டு.. சிட்டு.. சிட்டு உனக்கு என்னாச்சு “ ( சிட்டு என்பதுதான் அவளின் பெயர்) என்று கம்மிய குரலில் கேட்டேன்.

என்னை சற்றே தலை உயர்த்திப் பார்த்த சிட்டு, பின் சலனமேயில்லாமல் அதே இடத்தில் படுத்துக்கொண்டாள். கிட்டத்தட்ட உறைந்துபோய் சிட்டுவையே பார்த்துக் கொண்டிருந்த என்னை “ அப்பா” எனும் மகிழின் குரல் என்னை நிஜ உலகுக்குக் கொண்டு வந்தது.

“நீங்க ஊருக்குப் போன அன்னைக்கு அவன் ஒரு செத்துப்போன எலிய சாப்டானாம்ப்பா, அந்த எலிக்கு யாரோ எலிமருந்து வச்சு கொன்னுருக்காங்க அத சாப்படதால.. அவனும்..அவனும்..

“டாமி”யும் கொஞ்ச நேரத்தில சுருண்டு விழுந்து இறந்துட்டான் பா” (டாமி என்பது அவனின் பெயர்)

அதுல இருந்து

“சிட்டு” சாப்பிடவே இல்லபா..

“டாமி கூடவே படுத்துட்டிருந்துச்சு. டாமிய இதோ இப்ப சிட்டு படுத்துட்டிருக்காளே.. அதே இடத்துல தான் புதைச்சாங்க பா.. டாமி இறந்தது கூடசிட்டுவுக்குத் தெரியலபா. இறந்துபோன டாமியோட உடல சிட்டு எடுக்கவே விடல.. டாமி பக்கத்துல யார் வந்தாலும் அவங்கள கடிக்கப் பார்த்துச்சு. கடைசியா சிட்டுவ கட்டி வச்சிட்டு தான் டாமியோட உடம்ப இந்த இடத்துல புதைச்சாங்க அப்ப இருந்து சிட்டு ரொம்ப சத்தமா கத்திக்கிட்டே இருந்துச்சு.. சதா அங்கயும்,இங்கயும் ஓடிக்கிட்டே இருந்துச்சு.. அமைதியாவே இல்லபா.. ஒரு நாள் முழுக்க கத்திட்டு இங்க வந்து படுத்தவ தான் அதுக்குப் பின்னாடி கத்தவும் இல்ல,சாப்பிடவும் இல்ல.”

“இதுவரைக்கும் ஒரு வாய் சாப்பாடு கூட சாப்பிடல பா..”

கிட்டத்தட்ட அழும் குரலில் சொல்லி முடித்தான் மகிழ்.

எனக்கு என் அடிநெஞ்சை யாரோ பிடித்து அழுத்துவதுபோல இருந்தது.

ஏதோ என்னோடே பயணப்பட்டு என் உணர்வுகளையெல்லாம் பகிர்ந்து கொண்ட என் பால்ய கால நண்பனை இழந்தது போலிருந்தது.

சிட்டு என மீண்டும் அழைத்தேன் நான்..

சற்றும் சலனமில்லை அவளிடம்.

சிட்டுவுக்கும், டாமிக்கும் மீன் குழம்பு என்றால் மிகவும் பிடிக்கும் என என் நினைவுக்கு வந்தது. நல்லவேளையாய் அன்று வீட்டில் மீன்குழம்பு வீட்டுக்குள் ஓடிச்சென்று சோற்றோடு மீன்குழம்பைப் பிசைத்தெடுத்து சிட்டுவின் தட்டில் போட்டு வைத்து சிட்டுவின் வாய்க்கருகில் தட்டினை நகர்த்தி வைத்தேன். எழுந்து கொண்ட சிட்டு டாமியின் தலை புதைக்கப்பட்ட அந்த இடம் நோக்கி தட்டினை நகர்த்திப் பின் படுத்துக் கொண்டது அன்று இரவு முழுவதும் எனக்கு உறக்கம் வரவேயில்லை.

சிட்டுவும், டாமியும் எப்படியிருந்தார்கள்..

மற்ற எல்லோரையும் பொருத்தவரையில்.. அவர்கள் இருவரும் வெறும் இரு நாய்க குட்டிகளாகத் தெரிந்திருப்பார்கள். ஆனால் என் கண்களுக்கு உண்மையில் அவர்கள் ஆத்மார்த்தமான தம்பதிகளாக அல்லவா தெரிந்தார்கள்.

பிரிவு என்பது எவ்வளவு கொடுமை.. டாமியைப் பிரிந்து சிட்டு இனி எப்படி வாழப்போகிறது?? என்ற கேள்விகளோடு கழிந்தது அந்த இரவு.

நீண்ட இரவின் முடிவில் தொடங்கிய அடுத்த நாள் அதிகாலையில் சிட்டு என்ன செய்கிறாள் எனப் பார்க்கச் சென்றேன். இடம்மாறாமல் நேற்றிரவு படுத்த இடத்திலேயே படுத்திருந்தாள் சிட்டு கண்கள் வெறித்தபடி. அருகிலிருந்த தட்டில் உணவுப் பருக்கைகள் கீழே கொட்டப்பட்டுக் கிடந்தன. சிட்டுவின் வாயிலும் சில பருக்கைகள் ஈக்கள் மொய்த்தபடி இருந்தது. அப்போது தான் புரிந்துகொண்டேன். தங்கள் இறுதி உணவை இருவரும் பகிர்ந்துண்டிருக்கிறார்கள் என்று.

கண்களில் வழிந்த நீரைத் துடைத்தவாறு கடப்பாரையையும் மண்வெட்டியையும் எடுத்து வந்து டாமியின் குழியைத் தோண்டத் தொடங்கினேன். அதற்குள் விழித்துக்கொண்ட பக்கத்து வீட்டுக்காரர் அய்யோ சிட்டு வும் போயிருச்சா என்றவாறே என்னருகில் வந்தார்.

“தம்பி எதுக்கு டாமியோட குழி யத் தோண்டறீங்க..

சிட்டுவுக்கு தனியா ஒரு குழி தோண்டலாம்.” என்றார்

கண்களில் நீர்கோர்த்தபடி..

“இல்லணே, வாழ்நாள் முழுக்க ஒண்ணாவே இருந்து, ஒருத்தர் போன உடனே நான் உயிர் வாழமாட்டேன் னு உசுர விட்ட இந்த ரெண்டு பேருக்கும் ரெண்டு குழிகள் வேண்டியதில்ல, ஒரே ஒரு குழி மட்டுமே போதுமானதாய் இருக்கும் அண்ணே.” என்றவாறு டாமியின் உடலோடு,சிட்டுவின் உடலையும் உள்ளே புதைத்து மண் கொண்டு நிரப்பத் தொடங்கினேன்.

கண்ணீரோடு ஆமோதித்தார் பக்கத்து வீட்டுக்காரர். வழிந்த கண்ணீர்த்துளிகளில் சிரித்தபடியே தெரிந்தார்கள் டாமியும்,சிட்டுவும். அப்போது வலிகளோடே இருட்டியிருந்த வானம் மெதுவாய் புலரத் தொடங்கியிருந்தது.

● கார்த்திகா



கண்ணீரில் கரையும் காயங்கள்
இயல்பாக வடிகிற துளிகளின் ரணங்களை
உதிர்ப்பவரன்றி ஒரிவருமில்லை அறிந்திருக்க..

அவ்வப்போது
செவிகொடுப்போரும்
அலுத்துப் போகிறார்கள் ஆறுதல் இல்லாமல்..

சில ஆறுதல்கள்
மாறுதல் தருவதுண்டு..

சிலதோ இன்னும்
சிறிது எண்ணெய் ஊற்றிப் போவதுண்டு..

சில வலிகளுக்கு இசை கேட்கலாம்,
சில வலிகளுக்கு
புத்தகம் தேடலாம்..
சில வலிகளுக்கு
சன்னல் கம்பிகளில் முகம் புதைக்கலாம்..

சில வலிகளுக்கு
எழுதுகோல் பிடிக்கலாம்..

எதுவாயினும் என்ன,
காயங்களின் வலிகளை கவிதைகளால்
மொழிபெயர்ப்பதென்பது எல்லோராலும் இயலாது
தானே..
அது கண்ணீரால் மட்டுமே கைகூடும்
அதிசயங்களுள் ஒன்று..

விட்டுவிடுங்களேன் அவர்களை அப்படியே
கரைத்துவிடட்டும்
காயங்கள் அனைத்தையும் கண்ணீரில்..

● இலட்சுமண பிரகாசம்



# கவிஞர் நாணற்காடன் அவர்களுடன் ஓர் நேர்காணல்

*கவிதை, சிறுகதை, மொழிபெயர்ப்பு என இலக்கியத்தின் பல தளங்களில் தொடர்ந்து இயங்கி வருபவர் கவிஞர் நாணற்காடன். கூப்பிடு தொலைவில், பிரியும் நேரத்தில், சாக்பீஸ் சாம்பலில், நூறு நாரைகளாய் நின் நிலமெங்கும் ஆகிய கவிதைத் தொகுப்புகளும், அப்பாவின் விசில் சத்தம் என்ற சிறுகதைத் தொகுப்பும், கோமலி, கர்வாச் சௌத் ஆகிய இந்தியிலிருந்து தமிழ் மொழிபெயர்ப்புச் சிறுகதைகள், ஆகியவை வெளியாகியுள்ளன. காலையில் மொழிபெயர்ப்பு பணியில் இருந்தாலும் நேர்காணலுக்கு நேரம் அளித்தார். மதியம் இரண்டு மணிக்கு இராசிபுரத்தில் அவருடைய இல்லத்தில் தொடங்கிய நேர்காணல் மாலை நான்கு மணிவரை முதற்கட்டமாக நடைபெற்றது. பின்னர் இருவரும் உணவை முடித்துக் கொண்டு மாலை ஐந்து மணிக்கு மீண்டும் நேர்காணல் இறுதி பகுதிக்கான கேள்விகள் தொடர்ந்தன. நேர்காணல் மாலை 6.30 மணிக்கு முடிந்தது.*

**நாணற்காடன் என்ற புனைப்பெயருக்குக் காரணம் ஏதேனும் உண்டா?**

*எனது புனைப்பெயரை முன் வைத்து பெயர் காரணம் என்கிற சிறுகதை எழுதி இருக்கிறேன். என்னுடைய இயற்பெயர் சரவணன். சரவணன் என்பது சமஸ்கிருதப் பெயர். அதன் தமிழாக்கச் சொல் தான் நாணற்காடன். சமஸ்கிருதத்தில் சர் என்றால் நாணல் என்று பொருள். வன் என்றால் வனம் அதாவது காடு என்று பொருள்.அதனால் நாணல் காடு என்பது தான் சரவனம் என்பதன் தமிழாக்கம். சரவணன் என்ற சொல் சமஸ்கிருதம் என்பதும், அதற்கேற்ற தமிழ்ச்சொல் நாணற்காடன் என்பதும் தேவநேயப் பாவாணரின் சொல்லாய்வுக் கட்டுரை ஒன்றில் கண்டேன். அந்த நொடியில் நாணற்காடன் ஆனேன். எனது முதல் கவிதைத் தொகுப்பு 2003 ல் இரா. சரவணன் என்ற எனது இயற்பெயரில் தான் வெளியானது. அதன் பிறகு நாணற்காடன் என்ற புனைப்பெயருக்கு மாறினேன். அந்தப் பெயரில் முதல் பதிவு, கல்கி இதழில் பார்வை என்ற கவிதையோடு பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு சரவணன் என்ற சொல்லில் நான் இல்லை.*

**கவிதையிலிருந்து உங்களது இலக்கிய பயணத்தைத் தொடங்கினீர்கள். முதல் கவிதைத் தொகுப்பு அதன் அனுபவங்கள் குறித்து..**

*முதல் கவிதைத் தொகுப்பான கூப்பிடு தொலைவில் 2003 பிப்ரவரி 16 ந்தேதி அ.வெண்ணிலா, மு.முருகேஷ், பொன்.குமார், பழ.புகழேந்தி, மு.குணசேகரன், கவி.குமார் என பல படைப்பாளிகளின் முன்னிலையில் வெளியிடப்பட்டது. பழநிபாரதி, யுகபாரதி, அ.வெண்ணிலா ஆகியோரின் அணிந்துரையும், மருத்துவர் சசிக்குமார் அவர்களின் ஓவியத்துடனும் வெளிவந்தது. இந்த நூலை வெளியிடும் முன்புவரை எந்த இதழிலும் நான் எழுதியது இல்லை. காதல் கவிதை நூலான இந்த நூலை ஆன்ந்த விகடன் கற்றதும் பெற்றதும் பகுதியில் எழுத்தாளர் சுஜாதா அவர்கள் அறிமுகப்படுத்தி சிற்றுரை எழுதியிருந்தார். பரவலாக அந்த நூலுக்கு பல்வேறு படைப்பாளிகளும், பல சிற்றிதழ்களில் அறிமுக, விமர்சன உரையும் வெளிவந்தன. அதுவே சிற்றிதழ்களில் தொடர்ந்து எழுதுவதற்குக் காரணமாக அமைந்தது.*

**தமிழ் மொழியில் எழுதிவந்த நீங்கள் நேரடியாக இந்தியிலிருந்து தமிழ் மொழிபெயர்ப்பாளராக எவ்வாறு மாறினீர்கள்?**

*அடிப்படையில் ஹிந்தி இலக்கியம் படித்திருப்பதால் 2004 லிருந்து பல ஹிந்தி கவிஞர்களோடு கடிதத்தொடர்பும், ஹிந்தி சிற்றிதழ்களின் தொடர்பும் இருந்துவந்தன. 2004 லுக்கு மேல் ஹைக்கூ குறித்த அறிமுகம் பொன்.குமார் அண்ணன் வழியாக கிடைத்தது. தொடர்ந்து ஹைக்கூ கவிதைகளும் எழுதி வந்தேன். அந்த சமயத்தில் இந்தி ஹைக்கூ கவிதைகள் குறித்தான அறிமுகங்களும் ஏற்பட்டன. தமிழ் அளவிற்கு ஹிந்தியில் ஹைக்கூகள் சிறப்பானதாக இல்லை. தமிழ் ஹைக்கூக்களை ஹிந்தியில் மொழிபெயர்ப்பு செய்யும் ஆவல் ஏற்பட்டது. அந்த ஆவல் ஹிந்தியிலிருந்து தமிழ் பொழிபெயர்ப்புச் செயல்பாட்டுக்குள் கொணர்ந்தது. மயூரா ரத்தினசாமி, அவைநாயகன் ஆகியோரின் தூண்டுதல் முக்கிய காரணமாக இருந்ததும், மலைகள்.காம் சிபிச்செல்வன அவர்களின் ஊக்கமும் ஹிந்தியிலிருந்து சிறுகதைகள் மொழிபெயர்க்க காரணமாக அமைந்தது.*

*தொடர்ந்து எனது மொழிமாற்றச் சிறுகதைகள் மலைகள்.காம்- இல் வெளிவந்தன. அவற்றின் தொகுப்பு 'கோமலி' நூலாக வெளிவந்தது. சுப்ரபாரதிமணியன் அவர்களின் உதவியையும் மறக்க இயலாது. இப்படியாகத்தான் மொழிபெயர்ப்புச் செயல்பாடு சாத்தியமானது. தொடர்ந்தும் இயங்கி வருகிறேன்.*

**தமிழ் இலக்கியச் சூழலில் மொழிபெயர்ப்பிற்கு ஒரு களம் உருவாகியிருக்கிறது. அதில் பெரும்பாலும்**

**ஆங்கிலம் மற்றும் பிற அயல்நாட்டு மொழிகளில் இருந்து பெயர்க்கப்படும் நூல்களுக்கு சந்தை உள்ளது. இருப்பினும், மலையாளம் தவர்த்த பிற இந்திய மொழிபெயர்ப்பு நூல்களுக்கு தமிழகத்தில் போதிய வரவேற்பு அல்லது சந்தை இல்லாத சூழல் நிலவுகிறதா?**

மொழிபெயர்ப்பு என்றாலே ஆங்கிலத்திலிருந்தோ அல்லது வேற்று நாட்டு மொழிகளிலிருந்தோ வருகிற படைப்புகளாகவே வாசக மனங்களில் பதிந்திருக்கிறது. இந்திய நாட்டில் அதிகாரப்பூர்வமான இந்திய மொழிகளிலிருந்து மொழிபெயர்ப்பது குறித்து தமிழ்ச்சூழலில் பெரிய அளவில் முன்னெடுப்புகள் இல்லை. சாகித்ய அகாடமி அவ்வகையில் ஈடுபட்டு வந்தாலும், மற்ற இலக்கியச் செயல்பாடுகளும், மொழிபெயர்ப்பாளர்களும் பெரிய அளவில் உருவாகவில்லை. மலையாளத்திலிருந்து தமிழுக்கு பல நூல்களும், பல மொழிபெயர்ப்பாளர்களும் உருவாகி இருக்கிறார்கள். ஆயினும், கன்னடம், தெலுங்கு, மராட்டி போன்ற மொழிகளிலிருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்புப் பணி செய்பவர்கள் அரிதாகவே இருக்கிறார்கள். ஹிந்தி மொழிபெயர்ப்பாளர்களும் மிகக் குறைவே. அவ்வாறான மற்ற இந்திய மொழிகளிலிருந்து படைப்புகள் வரும்போது கட்டாயமாக மொழிபெயர்ப்புக்கான சந்தை சூழல் நன்றாகவே அமையும்.

**உங்களது மொழிபெயர்ப்பு பணியில் நீங்கள் எதர்கொள்கிற சவால்கள் என்னென்ன? நவீன தொழில்நுட்பங்களோடு மொழிபெயர்ப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. அது மொழிபெயர்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனவா? தொழில் முறை மொழிபெயர்ப்பாளர்களுக்கு சாதகமான ஒன்றா அல்லது பாதகமா?**

மொழிபெயர்ப்பு என்பதும் ஒரு படைப்பு தான். அதற்கு மொழிமாற்றம் செய்யும் தொழில்நுட்பக் கருவிகள் ஓரிரு சதவிகிதம் தான் பயன்படுமே ஒழிய முழுமையாக அதைக்கொண்டே மொழிமாற்றம் செய்துவிட முடியாது. அப்படிச் செய்தால் தமிழில் கொணரும்போது மூல மொழியின் படைப்பு கண்டிப்பாக சிதைந்த வடிவமாகவே அமையும். எனவே தொழில் நுட்பக்கருவிகள் உதவிக்கு வேண்டுமானால் வைத்துக்கொள்ளலாம். அதையே முழுமையாக நம்பக் கூடாது.

மொழிபெயர்ப்பு சிக்கலான பணி என்பதைவிட காலத்தைப் பிடுங்கிக்கொள்ளும் பணி. இந்தியில் வாசிக்கிற எல்லா படைப்புகளையும் தமிழாக்கம் செய்துவிட முடியாது. பல நல்ல படைப்புகளை மொழிமாற்றம் செய்ய இயலாமல் கைவிட்ட அனுபங்களும் உண்டு. காரணம் ஹிந்தி மொழியில் வெவ்வேறு மாநில மொழிகளின் சொற்களும் புழக்கத்தில் இருக்கும். ஹரியாண்வி மொழிச் சொல் ஹிந்தியில் எழுதப்பட்டிருக்கும்போது அந்தச் சொல்லை எந்த ஹிந்தி அகராதியிலும் காணக்கிடைக்காது. ஒரு சொல்லுக்குப் பொருள் தெரியாவிட்டால் அந்தப் படைப்பையே நிராகரிக்க நேரிடும்.

**மொழிபெயர்ப்பாளர் மூலமொழியிலிருந்து மொழிபெயர்த்தலில் பதிப்பு, பதிப்பு உரிமை சார்ந்த பிரச்சனைகள் வெளியுலகிற்கு அதிகம் தெரிவதில்லை. சில படைப்புகளை பிறமொழியிலிருந்து இங்கு கொண்டுவருவதிலும் உள்ள பிரச்சனைகள் குறித்து..**

மொழிபெயர்ப்புத் துறையில் பதிப்பு சார்ந்து ஒரு படைப்பு, அந்த படைப்பாளி இவர்களோடு நேரடியான தொடர்பு அல்லது அந்த நூலை வெளியிட்ட பதிப்பகத்துடன் மொழிபெயர்ப்பாளர்களுக்கு நேரடியான தொடர்பு மிக அவசியமான ஒன்று. அவ்வாறு அந்தத் தொடர்பு ஏற்படாத பட்சத்தில் ஒரு நல்ல படைப்பை மொழிபெயர்ப்பு செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. நல்ல படைப்பு என்று தெரிந்தும் பதிப்பகத்தாரோடு தொடர்பு கொள்ள இயலாத சூழ்நிலையில் அதை மொழிபெயர்ப்பதில், வெளியிடுவதில் பல சிக்கல்கள் இருக்கின்றன. சில

மொழிபெயர்ப்புகளை பாதியிலேயே நிறுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது.

பதிப்பகங்கள் மொழிபெயர்ப்பு செய்யவும், அதற்கான சூழலை உருவாக்கிக் கொள்கின்றனவா? அல்லது பெரிய பதிப்பகங்கள் மட்டுமே ஹிந்தியில் உள்ள படைப்பை கொண்டுவர எண்ணுகிற போது தமிழ்ப் பதிப்பகங்கள் ஹிந்தி பதிப்பகங்களோடு எந்த வகையில், எவ்வளவு நெருக்கமான தொடர்பில் உள்ளன என்பன குறித்தெல்லாம் உரையாட வேண்டியுள்ளது. மொழிபெயர்ப்பாளர்கள் நல்ல களம், தளம் ஏற்படுத்திக் கொள்வதில் சிக்கல்கள் சந்திக்க நேரிடுகிறது.

மொழிபெயர்ப்புத் துறை நன்றாக வளர வேண்டும் என்றால் பதிப்பகங்களின் பங்களிப்பு முக்கியமானது. இதற்கென தனி உரையாடல்கள் தமிழ்ச் சூழலில் அதிகமாகத் தேவைப்படுவதாக கருதுகிறேன். இவற்றை ஹிந்தி-தமிழ் மொழிபெயர்ப்பு அனுபவத்தை அடிப்படையாக வைத்து மட்டுமே சொல்கிறேன். மற்ற மொழிகளுக்கு எவ்வகைச் சூழல் உள்ளது என்பது குறித்து நானறியேன்.

**சில நாட்களுக்கு முன்பு முகநூலில் சிறார்களுக்கான கதைகளை எழுதிவந்தீர்கள். அக்கதைகளுக்குப் பிற எழுத்தாளர்களிடமிருந்தும் பெரும் வரவேற்பு இருந்தது இல்லையா?**

ஆமாம். 40 நாட்களில் 38 சிறார் கதைகள் எழுதப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றன. பெரும்பாலான கதைகள் குழந்தைகளிடம், சிறார், சிறுமிகளிடம் போய்ச் சேர்ந்தன. வாசித்த பெரியோர்களும், பெற்றோர்களும் தம்மை குழந்தையாகவும் அல்லது தமது குழந்தமையை மீட்டெடுத்துக்கொண்டதாகவும் கூறினர். அந்தக் கதைகள் எழுதப்பட்ட வடிவம் தமிழுக்குப் புதிது என்று கருதுகிறேன். அதுவே பெரும் வரவேற்புக்குக் காரணமாக அமைந்தது. தொடர்ந்தும் எழுதுவேன்.

**தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் தொடர்பு, அதில் உங்களுக்கு ஏற்பட்ட முக்கிய அனுபவங்கள்..**

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தைத் தொடங்கியவர் பேராசான் ஜீவா அவர்கள். சேலத்திலிருந்து நாமக்கல் மாவட்டமாகப் பிரிந்த பிறகு பெருமன்றத்தின் நாமக்கல் மாவட்டக் குழுவை நான் தொடங்கினேன் என்பதில் எப்போதும் எனக்குப் பெருமிதம் உண்டு. பல்வேறு படைப்பாளிகளோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளவும், பலரை எனது இராசிபுரம் மண்ணுக்கு அழைத்து வந்தும் இந்த மண்ணில் இலக்கியச் செயல்பாடு என்பதை உருவாக்குவதற்கும் பெருமன்றம் எல்லா வகைமையிலும் களம் அமைத்துக்கொடுத்தது. கலியமூர்த்தி எனும் சக உயிரியை பெருமன்றம் தான் எனக்குக் கொடுத்தது.

**மாணவர்களை கவிதைகள் எழுதவைத்து "மழைநடந்த பாதை" என்ற தொகுப்பை கொண்டுவந்தீர்கள். பலருடைய கவிதைகள் சிறப்பாக இருந்தன. மாணவர்களை பங்கேற்கச் செய்ய வேண்டும் என்ற அதற்கான உந்துதல்கள்..?**

அடுத்த தலைமுறை படைப்பாளிகளை இனங்காணும் விதமாக மாணவியர்-மாணவர்களை ஒருங்கிணைத்து அவர்களின் கவிதைகளைத் தொகுப்பாக்கினோம்.

**பெருந்தொற்று காலம் அரங்க இலக்கிய கூட்டங்களை பாதித்தாலும், இணைய வழி கூட்டங்கள் நடைபெறுகின்றன. இந்த மாற்றம் நீங்கள் பங்கேற்ற இணைய வழி கூட்டத்தின் அனுபவங்கள்?**

இணைய வழி இலக்கிய அரங்குகள் பெரும் அளவில் சிறப்பாகவே நடந்து வருகின்றன. இவை காலத்தின் தேவை என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. ஊரடங்கு காலம் தொடங்கிய இரண்டாம் நாளே முதன்முறையாக தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் இணைய வழி ஒருங்கிணைவைத்

தொடங்கி வைத்தது. இது குறித்த செய்தி பத்திரிக்கைகளிலும் வந்திருக்கின்றன. இன்று ஊரடங்கு தொடர்ந்து கொண்டிருக்கும் நிலையில் எல்லாப் பகுதிகளிலும், எல்லா இலக்கிய அமைப்புகளும் இந்த இணைய வழி ஒருங்கிணைவைச் சிறப்பாக நடத்தி வருகின்றன.

நேரடி அரங்குகளுக்காக் காத்திருக்கும் நாம் ஊரடங்குக்குப் பின் இதே போல் இணைய வழி ஒருங்கிணைவிலேயே முடங்கிவிடக்கூடாது.

**நூல் பிரதிகள் அச்சு கூடத்தில் தயாராகிக் கொண்டிருந்தாலும் தற்போது "அமேசான் கிண்டில்" போன்ற இணைய வழியாக தங்களது நூல்களை பலரும் பதிப்பிக்கின்றனர். இது படைப்பாளருக்கு விற்பனை ரீதியில் சாதகம்தானா? அல்லது அச்சகம் மூலம் ஏற்படும் செலவுகள், பொருளாதார நெருக்கடிகள் அவற்றை நோக்கி படைப்பாளியை தள்ளுகின்றனவா?**

புத்தகத்தை விரித்து வைத்து வாசிக்கும் அனுபவத்தை கிண்டில் கொடுக்காது. ஆனாலும், கிண்டிலில் நூல் வெளியிடுவது என்பதை இன்னொரு வாய்ப்பாக பற்றிக்கொள்ள வேண்டிய தேவையும் இருக்கிறது. ஒரு நூலை இணைய வழியில் பதிப்பிப்பதன் மூலம் குறுகிய காலத்தில் அது நிறைய வாசகர்களைச் சென்றடைகிறது. டிஜிடல் கால மாற்றம் இலக்கிய, பதிப்புச் சூழலுக்கும் பொருந்தும். முகநூலை படைப்புத் தளமாக பயன்படுத்திக்கொண்டது போல, கிண்டிலையும் பதிப்புத் தளமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது.

பதிப்பகங்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாவது நடக்கவே செய்யும். ஊரடங்கு காலத்தில் தான் பல படைப்பாளிகள் கிண்டிலை நோக்கி நகர்ந்தார்கள். பொதுவாகவே ஊரடங்கின் நெருக்கடி பதிப்பகங்களையும் விட்டுவைக்காது.

**முகநூல் போன்ற சமூக ஊடகங்களில் எழுதப்படும் கவிதைகள்,கட்டுரைகள் இலக்கிய தரத்தை கொண்டவைகளாக இருக்கின்றனவா? அவைகளை வாசிப்பவர்கள் சரியான இலக்கியத்தை தேடி அவர்களால் வாசிக்க முடிகிறதா?**

முகநூல் வழியாக இலக்கியமும், படைப்புகளும் வெகுஜனங்களின் பார்வைக்குப் போயிருக்கின்றன. எது தரமான படைப்பு என்பது வாசகனைப் பொறுத்தது. வாசகனின் வாசிப்பனுபவம் படைப்பின் தரத்தை முடிவு செய்கிறது. தேடலுடைய கண்கள் தேன் கூட்டைக் கண்டடையும். எழுதப்படும் யாவும் வைரமுமன்று; குப்பையுமன்று.

**இலக்கிய அமைப்புகள் விருதுகளை வழங்குகின்றன. அவைகள் மீதான சர்ச்சைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றனவே?**

விருதுகளும், சர்ச்சைகளும் இணைபிரியாதவை. விருது என்பது ஒருவித அங்கீகாரம். அவ்வளவு தான். என்னைப் பொறுத்தவரை விருதுக்கும், படைப்புக்கும் தொடர்பில்லை. விருதோ, அங்கீகாரமோ, சிறு கையொலியோ கூட கிடைக்காத படைப்பாளிகளும் இருந்தார்கள்; இருக்கிறார்கள். இலக்கியம் பற்றிய எந்தத் தரவுகளும் தெரியாத யாரோ ஒரு மனிதனோ, மனிதியோ எங்கோ ஒரு மூலையில் நமது படைப்பைப் பற்றி யாரிடமோ பேசிக்கொண்டிருப்பார்கள். அது நமக்குத் தெரியாது. ஆனால், அது தான் பெரும் விருது.

**குழந்தைகளுக்கான சிறார் இலக்கியங்கள் இந்தியாவில் தேக்க நிலையிலேயே காணப்படுகின்றனவே?**

ஹிந்தி இலக்கியத்தில் பெரும்பாலான படைப்பாளிகள் சிறார் இலக்கியம் படைத்தவர்களே. ஹிந்தி இதழ்களும் சிறார் இலக்கியத்திற்கென்று தனித்த பக்கங்களை ஒதுக்குகின்றன. பால் சாஹித்ய எனும் சிறார் இலக்கியம் ஹிந்தி இலக்கியத்தில் முக்கியச் செயல்பாடாகவே இருந்து வருகிறது. தமிழ்ச்சூழல் அப்படியானதாக இல்லை.

சிறார் இலக்கியம் படைப்பவர்கள் தனிக்குழுவாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். உண்மையில் எந்த ஒரு படைப்பாளியும் சிறார் இலக்கியத்திற்கென தனது பங்களிப்பைச் செய்வது கடமை.

**தனியார் பள்ளிகள் ஹிந்தி திணிப்பை செய்வதாக குற்றச்சாட்டு உள்ளது. இதில் ஹிந்தி ஆசிரியரான உங்களுடைய நிலைப்பாடு?**

பிற மொழி கற்றல் என்பது அவரவர் காலம், சூழல் மற்றும் தேவையைப் பொறுத்தது. தனியார் பள்ளிகள் பெரும்பாலானவை ஆங்கில வழிப் பள்ளிகளே. அங்கு படிக்கும் மாணவர்கள் தமிழ் வாசிப்பில் பின் தங்கியே இருக்கிறார்கள். தமிழ் வாசிக்க இயலாத ஒரு மாணவனால் ஹிந்தியும் வாசிக்க முடியாது என்பதே உண்மை. தமிழ் வாசிக்கத் திணறும் ஒரு மாணவனிடம் ஹிந்தியைக் கற்பிக்க முடியாது. தாய்மொழி அறிவை வளர்த்துக்கொள்ளும் போது ஹிந்தி மட்டுமன்று. பல மொழிகளும் கற்பது எளிதாகும். இல்லாவிடில் அரைகுறையான ஹிந்தி தான் மாணவர்கள் கற்றுக்கொள்ள முடியும். நாளடைவில் அவர்கள் ஹிந்தியை மறந்தும் விடுகிறார்கள். இதை அனுபவத்தின் வழியாகச் சொல்கிறேன்.

**சமீபத்தில் நீங்கள் மொழிபெயர்த்த "கர்வாச்செளத்" நூலில் இடம்பெற்ற சிறுகதைகள், அதன் பாதிப்புகள் உங்களுக்கு ஏற்படுத்திய தாக்கம்?**

ஹிந்தி பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளின் தமிழாக்கம் கர்வாச்செளத். இந்தத் தொகுப்பில் தோழர் ரஜினி திலக் அவர்களின் இரண்டு சிறுகதைகள் இடம்பிடித்துள்ளன. அவர் களச் செயல்பாட்டாளராகவும் இருந்தவர். அவர் இறந்துவிட்டார். அவரை தில்லியில் சந்தித்திருக்கிறேன். அவரின் மரணம் எனக்குள் எழுப்பிய கேள்விகளே கர்வாச்செளத் நூலை விரைந்து மொழிபெயர்ப்புச் செய்யக் காரணமாக இருந்தது.




**மீண்டும் கவிதைக்கு திரும்புவதற்கான முயற்சி..**

நான் எழுதுகிறேன். எழுதுவேன். அது கவிதையா, ஹைக்கூவா, சிறுகதையா, மொழிபெயர்ப்பா என்றெல்லாம் பிரித்துப் பார்ப்பது இல்லை. சூழலும், மனநிலையும் பொறுத்து ஏதோவொன்றை எழுதிக்கொண்டிருக்கிறேன்.

**இணைய தளத்தில் இலக்கிய சர்ச்சை என்ற பெயரில் சமீப காலங்களில் தனிமனித தாக்குதல்கள் வருகின்றனவே?**

பேரன்பையும், மனித நேயத்தையும் பேணிக் காப்பதே எழுத்துகளின் பணி என்று எண்ணுகிறேன். சக மனிதர்கள் மேல் அன்பைப் பொழிய வக்கற்ற எழுத்துகளை எழுதி என்ன பயன்? இலக்கியம் குறித்தோ, படைப்புகள் குறித்தோ எழுகிற விமர்சன, விவாத எழுத்துகளைத் தாண்டி நிகழ்கிற தாக்குதல் எழுத்துகளின் மேல் நம்பிக்கை இல்லை.




**சமீபத்தில் நீங்கள் வாசித்த முக்கியமான நூல்?**

நாம் அனைவரும் பெண்ணியவாதிகளாக இருக்க வேண்டும் என்கிற 'சிமாமந்தா எங்கோசி அடிச்சி' எனும் நைஜீரிய பெண் எழுத்தாளரின் நூல். தமிழில் பிரேம் மொழிபெயர்ப்பில் அணங்கு பதிப்பகம் வழியாக வந்துள்ளது.

**உங்களுடைய தற்போதைய படைப்பாக்கம் குறித்து..**

கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் வறட்சியின் பாடல்கள் எனும் கவிதைத் தொகுப்பை ஹிந்தியில் மொழிபெயர்ப்பு செய்திருக்கிறேன். விரைவில் வெளிவர இருக்கிறது. எனது சிறார் கதைகளின் தொகுப்பு மும்மொழிகளில், வௌவால்கள் பறக்கும் வீதி எனும் மும்மொழி ஹைக்கூ தொகுப்பு, மு.முருகேஷ் அவர்களின் மும்மொழி ஹைக்கூ தொகுப்பு (எனது ஹிந்தியாக்கத்துடன்), 2017 ல் யுவபுரஸ்கார் விருது பெற்ற அருணாச்சல பிரதேசத்தின் எழுத்தாளர் தாரோ சிந்திக் அவர்களின் கவிதைத் தொகுப்பின் தமிழாக்கம், சாவித்திரிபாய் பூலே-வின் கவிதைகளின் தமிழாக்கம் மற்றும் அம்மாவின் அன்பு தோசை வடிவிலானது எனும் கவிதைத் தொகுப்பு ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாக வெளிவர இருக்கின்றன.

● சங்கர சுப்பிரமணியன்

# என் கவிதையும் காலமும்!

*மரங்கள் பசுமையாக இருக்கின்றன*
*பச்சிளம் இலைகள் பசுமையாக்கிடும்*
*இலைகள் இருக்கும்வரை மரம் பசுமை*
*இலைகள் உதிர தெரிவதோ வெறுமை*

*இலைகளைப் போலவே கவிதைகளும்*
*என்னுள் பசுமையாய் இருக்கின்றனவே*
*நான் வழங்க வழங்க அவையும் பசுமை*
*மரத்தின் பசுமைபோல் வளமாயிருக்கும்*

*மரத்தின் இலைகளில் பசுமை மாறிடும்*
*பசுமை மாறிட பழுப்பாயும் தெரிந்திடும்*
*மாறிய பழுப்பும் மிகையானதன் பலனால்*
*உலர்ந்து காய்ந்து சருகாய் உதிர்ந்திடும்*

*உதிர்ந்த சருகும் மண்ணில் உரமாகிடும்*
*மரத்தின் இலைகளை மரம் காப்பதில்லை*
*என்னுள் எழும் எண்ணிலா கவிதைகளை*
*நான் எனக்கென அவற்றை சேர்ப்பதில்லை*

*ஏனெனக் கேட்போர்க்கு நான் சொல்வேன்*
*எதைக்கொண்டு வந்தேன் நான்வரும்போது*
*எனதென்று மட்டும் அனையாளமிட்டாலும்*
*எத்தனை காலம் அவ்வடையாளம் நிற்கும்*

*தேங்கியநீரை புதுநீர் அடித்துச் செல்லும்*
*இன்னொரு சிறப்புவரும் எனதங்கே மங்கும்*
*இலைகள் மண்ணில் உதிர்ந்து விழுந்திடும்*
*இயற்கையில் எதுவுமிங்கு நிரந்தரமாமோ?*

# வேருடன் வேரறுப்பர்!

*புவிஈர்ப்பு விசையால் எல்லாம் கீழ்வரா*
*புகைமூட்டம் இங்கே மேலெழும் பாரீர்*
*ஒங்வொன்றும் ஒருவினை ஆற்றிடுகையில்*
*மற்றொன்று நின்று எதிர்வினை ஆற்றும்*

*பாரினில் இன்று பலர் அடக்கிய சிலரும்*
*பலமிழந்தொரு நாள் சிலரால் அடங்குவர்*
*பலனும் திறனும் பரம்பரை சொத்தன்றாம்*
*பாரினில் என்றென்றுமே ஒரேநிலை இரா*

*உலகையேகட்டி ஆண்டிட்ட மன்னரையும்*
*உலகமும் ஒருநாள் ஒதுக்கியே தள்ளிடும்*
*உந்து விசையினால் ஓடிடும் எவ்வாகனமும்*
*மந்தமாய்மாறி மரமாய் மண்ணில் கிடக்கும்*

*விழுந்து நிலத்தில் கிடந்திடும் விதைகளும்*
*ஒருநாள் பூமி பிளந்து பேரெழுச்சி காணும்*
*வெஞ்சினத்தோடு வேரறுக்கும் அநீதியை*
*அஞ்சிடா பண்பதனை அகிலம் உணர்த்தும்*

*சீர்மிகு மறவர் செந்தணல் நிகர் வீரமும்*
*பாரினில் ஒருநாள் பலர்வியக்க பலன்தரும்*
*ஆருடமல்ல நிச்சயமாய் இங்கது நடக்கும்*
*வேறுடன் அடிமைத்தனம் எனும் வேரறுப்பர்!*

சிறுகதை

● ப.தனஞ்ஜெயன்



# நெய்தல்

கண்பார்வையை கூர்மைபடுத்தி ஒவ்வொரு நூலாக கோர்த்துக்கொண்டிருந்தார் கதிர்வேல்,அந்த கிராமத்தில் வேறு யாரும் இவருக்கு துணையாக நெசவு நெய்தல் தொழிலை செய்யவில்லை.தன் வீட்டில் இடது புறமாக தான் கட்டியிருந்த மாட்டு கொட்டகையில் தறியை அமைத்திருந்தார். அதில் சிமெண்ட் பூச்சு எதுவும் இல்லை.சிறிய அளவில் ஆன பள்ளமும் மேற்புறம் மாட்டு கொட்டகையின் கழிகளில் இருந்து தொங்கி, தாங்கி கொண்டிருந்தது தறியை மேற்கூரையின் கழிகள்.அந்த தறியை சுற்றிலும் சாணியால் மொழுகி சுத்தமாக வைத்திருந்தார்.அதிலிருந்து தறிக்கு எந்த வித இடையூறும் இல்லாமல் பதினைந்து அடி தள்ளி இரண்டு பசுமாடுகளை கட்டி வைத்திருந்தார்.அடிக்கடி மாடு இடும் சாணத்தை எடுத்துவிடுவாள் கதிர்வேலின் மனைவி மடுகரையம்மா.

மடுகரையில் கதிர்வேலின் வீட்டிற்கு அவள் வந்ததால் அந்தப்பெயரே நிலைத்துவிட்டது அவளுக்கு,அவள் பெயர் ரஞ்சிதம்.

கதிர்வேலை கிராமத்தில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் தினை என்று அழைத்தார்கள்.

அந்த அளவிற்கு வறுமை, தினையை வாங்கி காயவைத்து அந்த மாவுப்பொருட்களில் உணவை உட்கொண்டார்கள் அவர்கள் குடும்பத்தினர்.

தன்னை நம்பியிருந்த தம்பியை அவர் எந்த சூழலிலும் விட வில்லை, தான் தறிநெய்த நேரம் போக தன்னுடைய இரண்டு ஏக்கர் நிலத்தில் கடுமையாக உழைப்பார்.கரும்பு பயிருட்டு வந்தார்.அது அவருடைய தறி தொழிலுக்கு ஏதுவாக இருந்தது.

குடும்பத்தில் வறுமை அதிகமாகிவிடவே கதர்வாரியத்தில் சிறிய தொகையோடு சேர்த்து மானியக்கடனுக்கு விண்ணபித்திருந்தார்.வாரத்தில் ஒரு நாள்மட்டும் விற்பனைக்காக தான் நெய்த கைத்தறி துணிகளை பாண்டெக்ஸ் கைத்தறி நிறுவனத்திடம் கொடுத்து பணம் பெற்று வறுவது வழக்கம்.அவர்களிடம் ரசீது வாங்கிகொண்டு வைத்திருந்தார்.இவர் நாள் முழுவதும் தறி அடித்தும் நூலுக்கும் போக சொற்ப பணமே கிடைத்தது,இருந்தாலும் இவரால் இந்தத்தொழிலை விடவேமுடியவில்லை.வயிற்றுக்கு சோறுபோடும் விவசாயமும்,மானத்தை மறைத்துகாத்த தறித்தொழிலும் என்றுமே மேம்படவில்லை.துரதிருஷ்டவசமாக அவைஇரண்டும் தனியார் வசம் சென்று மீண்டும் வளத்தோடு சேர்ந்து மனித இனத்தின் அழிவையும் வளர்த்துகொண்டிருக்கிறது இன்றைய அரசாங்கம்.கதர் ஆடை அதிக அளவில் இன்று இல்லை.பாரம்பரிய நெல்மணிகளை குறித்து குரல்கொடுத்துவந்த விவசாயத்தின் கடைசிக்குரலாய் வாழ்ந்த நம்மாழ்வாரும் இறந்துவிட்ட பிறகு,இதையெல்லாம் யார் கையில் எடுப்பார்கள் என்று கதிர்வேல் வசிக்கும் ஏம்பலம் கிராமத்தில் உள்ள மனிதர்களுக்கு எந்த அக்கறையும் இல்லை.கதிர்வேல் வீட்டுப்பக்கம் யாரவது வந்தால் அவர் தறிநெய்யும் அழகை பார்த்துவிட்டு எந்த சலனமும் இல்லாமல் நகர்ந்துவிடுவார்கள்.

தனது உறவினர் சிலர் புதுவை பகுதிக்கு உட்பட்ட மடுகரையை அடுத்து உள்ள சிறுவந்தாட்டில் கைத்தறிப்பட்டு மற்றும் நெசவுத்தொழிலில் ஈடுபட்டிருந்ததால்,அவர் அவங்கு சென்று சில நாட்கள் தங்கி அந்தத்தொழிலை செம்மையாக கற்றுக்கொண்டதாக அடிக்கடி சொல்வார்.

இவர்விண்ணப்பித்திருந்த கடன் தொகை ஐந்தாயிரத்திற்கான சோதனையை மேற்கொள்ள மூன்று ஆபிசர்கள் ஒரு அரசாங்க ஜீப்பில் வந்திறங்கி அவருடைய தறிக்கூடத்தை பார்வை இட்டார்கள்.ஒருவர் மூக்கு கண்ணாடி அணிந்து கையில் ஒரு பைலோடும்,தன் கண்ணாடி மூக்கின் பாதியில் தொங்கி கொண்டிஇருந்தது,இவர் கண்ணாடியை மூக்கிற்க்கு போட்டிருந்தாரா அல்லது கண்ணுக்கு போட்டிருந்தாரா என்கிற அளவிற்கு கண்ணாடியை விட்டு வெளியே இருந்தது கண்கள்.மற்றொருவர் தான் அணிந்திருந்த சட்டைபட்டன்கள் கிழிந்துவிடும் அளவிற்கு பெரிய தொந்தி,அவர்கள் இருவரும் மாட்டுகொட்கையில் குனிந்து பார்வையிட்ட பிறகு,கதிர்வேல் நீங்க இப்படி மாட்டு கொட்டகையில் தறி வைத்து இருந்தால் கடன் கிடைக்காது என்றார்கள் வந்திருந்த இருவரும்.

உடனே கதிர்வேல் கொஞ்சம் பெரிய மனசு வைச்சு கடனை கொடுங்க,எப்படியாது அடைச்சுவிடுகிறேன் ஐயா என்று கெஞ்சினார்,ஒரு ஏழையால் இதைத்தான் செய்யமுடியும். அதற்குள் ரஞ்சிதம் அவர்களுக்கு டீ போட்டு எடுத்துவந்தாள்,ஆனால் அவர்கள் அதைக்குடிக்க மறுத்துவிட்டார்கள்.அவரோடு வந்திருந்த ஜீப் ஓட்டுனர் ஜீப்பில் இருந்து தண்ணீர் பாட்டிலை எடுத்து வந்து நீட்டினான்.அதைவாங்கி இருவரும் குடித்துக்கொண்டே,யுகதிர்வேல் கொஞ்சம் செலவு ஆகும்டே என்றனர்.

“அடுத்த முறை துணியை எடுத்துக்கொண்டு நகரத்திற்கு வரும்பொழுது ஆபிஸ் வாங்க” என்று சொல்லிவிட்டு கதர்வாரியம் என்று பெயரிட்டிருந்த அந்த பழைய ஜீப் அதிகமான கருப்பு நிற புகையை வெளியில் தள்ளிக்கொண்டே கிளம்பியது.அந்தவாரம் இரண்டு செட் கூடுதலான மடிப்புகளை நெய்து முடிக்க இரவு பகல் பாராது உழைத்தார்.

தான் விற்பனை செய்யும் இடத்தில் துணியைக்கொடுத்துவிட்டு கிடைத்த ஐநூறு ரூபாய்

லாபத்தோடு அரசு அலுவலகத்தை அடைந்து,அதிகாரிகளிடம் கொடுத்து கடனுக்கான ஏற்பாடுகளை செய்தார்.எப்படியோ மேலும் ஒரு ஐநூறு செலவு செய்து கடன் தொகையை பெற்றுவிட்டார்.

தன்னுடன் பிறந்த தம்பி முத்தையனின் உயர்கல்விக்காக அந்தப்பணத்தை கொஞ்சம் கொடுத்து உதவினார்.மீதம் உள்ளதில் நூலும் வாங்கிசெலவாகிவிட்டது.

முத்தையனும் ஆங்கில விரிவுரையாளராக அரசுப்பணியில் சேரும் வரை கதிர்வேல் உதவி வந்தார்.முத்தையனைக்கு திருமணம் நடந்து முடிந்தபிறகு அண்ணனை விட்டு தனிக்குடித்தனம் சென்றுவிட்டார் முத்தைய வாத்தியார்.

அப்பொழுதும் மனம் தளராத கதிர்வேலின் தறிசப்தம் உரக்க கேட்டுக்கொண்டே இருந்தது.தன்னுடைய இருமகன் மற்றும் ஒரு மகளுக்கும் திருமணம் முடித்தார்.அனைத்தும் தறி நெய்தும் இரண்டு ஏக்கர் விவசாயத்தில் உழைத்தும் முடித்ததுதான்.அடிக்கடி அவரின் மகள் மலர்கொடி அப்பாவை பார்த்துவிட்டு செல்வது வழக்கமாய் இருந்தது.இரண்டு பிள்ளைகளும் திருமணத்திற்கு பிறகு சொத்துகளை பிரித்துக்கொண்டு தனித்தனி குடும்பமாக சென்றுவிட்டார்கள்.

நிலத்திலும் வேலை இல்லாமல் போகவே,தன்னுடைய தறியை குடும்பமாக நினைத்து அதன் சப்தத்தில் காலம் கழித்தார் கதிர்வேல்.பெரும்பாலான நேரங்களில் கோவனத்தோடுதான் தறியில் அமர்ந்திருப்பார்.விற்பனைக்கு செல்லும் போது மட்டும் வெள்ளைநிற வேட்டியும் சட்டையும் அணிவது வழக்கம்.ரஞ்சிதத்திற்கு உடல் நிலை சரியில்லாத போதும் இவரே அவளுக்கு பால் காய்ச்சிதருவது தன்னால் ஆன சமையலை செய்து கொடுப்பார்.ரஞ்சிதம் தறிக்கு உதவிய நேரம் போக, விவசாய வேலைக்கு சென்று ஏதும் மிஞ்சவில்லை.அனைத்தும் தறிநெய்யும் நூல் வாங்கவும்,சாப்பிட்டிற்குமே செலவாகிவிட்டது.இப்படியே வாழ்ந்து பழக்கமாகிப்போன ரஞ்சிதம் ஒரு சிலவருடங்களில் கதிர்வேலை விட்டு பிரிந்து உடல்நிலை சரியில்லாமல் இறந்துபோனாள்.

அப்பொழு அவளுக்கு எழுபது வயதும்,கதிர்வேலுக்கு என்பத்தி ஒரு வயதும் ஆகியிருந்தது.

அவள் இறந்து ஒரிரு நாட்களிலேயே மீண்டும் தறிசப்தம் கேட்டது,எந்த சொந்தமும் உறவுகளும் திரும்பி பார்க்கவில்லை.எவ்வளவோ வாழ்வில் நடந்தாலும் தன் தம்பியின் மேலும் மகன்கள் மேலும் கோபம் கொள்ளாமல் தன் தறியின் சப்தத்தோடும் தாளத்தோடும் பேசிக்கொண்டே அவர் வேலையை செய்தார்.

வயது முதிர்வின் காரணமாக மாடுகளை கவனிக்க முடியாது போனதால்,தன் மகன்கள் வசம் தலா ஆளுக்கு ஒரு பசுவை பிரித்துகொடுத்தார்.மாடுகள் அந்தக் கொட்டகையை விட்டு சென்றபின் இடத்தை சுத்தப்படுத்தி அங்கே கட்டில் ஒன்றை போட்டு படுத்துக்கொண்டு,ஓரமாக விறகு அடுப்பினை எரிய வைத்து தனியாக உணவினை தயாரித்து பழக்கபடுத்திகொண்டார்.

தனிமை அவருக்கு மிகவும் பிடித்துபோனது.துன்பம் என்பது நிறைய பேர் வாழ்வில் இறுதிவரை பயணித்து சிரித்துகொண்டே இருக்கும்,அதைப்பார்த்து மனிதன் அழுதுகொண்டே இறப்பான். எப்பொழுதுமே வயிற்றுக்கு முன் எந்த உறவும் நிலையாக கைகோர்த்து நிற்பதில்லை.தறி சப்தம் கேட்டுக்கொண்டிருக்கும்போதே அவர் இறந்தும் போனார்.அப்பொழுது அவரை சுற்றி அவரின் மகன்கள்,மகள் மற்றும் ஆசையாக வளர்த்த தம்பி முத்தையன் உட்பட எந்த விதமான சலனமும் இல்லாமல் அமர்ந்திருந்தனர்.ஆனால் அவர்கள் ஆழ்மனதில் அவர் அடித்த தறியின் சப்தம் அவர்கள் அனைவர் வாழ்விலும் கேட்டுக்கொண்டே இருந்தது.

# நரம்பில்லா நஞ்சு

● சசிகலா திருமால்

நரம்பில்லா நாக்குதானே என்றெண்ணி
தன்னிலை மறந்து நஞ்சு தடவி
சற்றே நீண்டாலும்..
உத்தமமற்ற வார்த்தைகளை
உமிழ்நீர் என்றெண்ணி
உமிழ்ந்துவிட்டாலும்..
வெந்துத் தணியா வேதனையில்
உழல்வதென்னவோ மனம் தானே..

சில நேரங்களில்
அர்த்தமற்ற அநாவசியமான வார்த்தைகளை
அபத்தமாய் உளறிக்கொட்டி
அவதிப்படுகிறது...
தன் வாயால் கெடும் நுணலென..



● சந்திரா மனோகரன்



# அவளும், மூன்று பேரும்

*அவளைப் பிடிக்கவில்லை*
*அவளைப் பிடிக்கவில்லை*
*அவளைப் பிடிக்கவில்லை!*

கடுகளவு கூட அசையாமல் அதே மனநிலையில் இருந்தான், சூரியன்.
*நான் பெண்களை வெறுக்கிறேன்*
*நான் பெண்களை வெறுக்கிறேன்*
*நான் பெண்களை வெறுக்கிறேன்!*

சூரியன் பல்லைக்கடித்துக்கொண்டே சொன்னான். அவன் விழிகளில் நெருப்பு வீச்சு.

"போதும் நிறுத்துடா.!.. தத்துவம் பேசிட்டு.. " என்றான்ஆனந்தன், அவன் உயிர்த் தோழன்

பாறை போன்ற சூரியனின் மனவெளியில் வாள் சண்டையின்எதிரொலி.

"என்ன இருந்தாலும் காஞ்சனாகிட்டே அப்படி ஈனத்தனமா.நடந்திருக்கக்கூடாதுடா.."

"என்னடா நீ ! அவ மாறிட்டாடா.. மாறிட்டாடா..!"

"அப்படி ராத்திரி என்னடா நடந்துச்சு...காலைலே இங்கே வந்துட்டே" என்றான் ஆனந்தன்.

வெளியே ஷேர் ஆட்டோ உறுமும் ஒலி.

"சுகுணா வந்துட்டா.." ஜாடை காட்டினான் ஆனந்தன்., சன்னலில் எட்டிப்பார்த்தவாறு.

உள்ளே நுழைந்ததும்

"அடடே... வாங்க! எங்கே காஞ்சனா வரலியா" என்றாள் சுகுணா

காய்கறி அடங்கிய பையை மேசைமீது உட்கார வைத்தாள்.

"பேசிட்டு இருங்க.. காஃபி போட்டு எடுத்திட்டு வர்றேன்"

அவள் சமையலறைக்குள் நுழைந்தாள். இருவருக்கும் ஆழ்ந்த நட்புணர்வு. அந்தரங்கப் பகிர்வும் உண்டு.

"பக்கத்து போர்சன்லேபேச்சலர்ஸ் புதுசா குடிவந்திருக்காங்க..மூணு பசங்க!..அடிக்கடி ஏதாவது உதவிங்கிற பேர்லே இவளைப் பார்க்க வர்றாங்க..இதெ உலகத்திலே இருக்கற அத்தனை அழகையும் இவ உடம்புலே கடவுள் உட்காரவைச்சுட்டார்னு நெனைக்கிறேன்.. அதுலே அவனுக மயங்கிட்டானுக போலிருக்கு!"

ஆனந்தன் இடிஇடியென சிரித்தான்,துணைக்கு சுகுணாவும் பெரிதாக ஒலியெழுப்பினாள்..

"முதல்லே காஃபி சாப்பிடுங்கோ.." அவளாலும்சிரிப்பை அடக்க முடியவில்லை.

"லூஸ்ஸாடா நீ! நேர்ல பார்த்தியா?"

"டிங்டிங்..டிங் டிங்.."

மணி ஒன்பது காட்டியது.

"உன்னிடத்தில் சரணடைந்து விட்டேன். நீதான் வழி காட்டவேண்டும்" என்பதுபோல் இருந்தது அவன் பார்வை.

" இப்ப காஞ்சனாஎங்கே இருக்கா?" சுகுணா கேட்டாள்.

" அவ வீட்லே இருக்கா.. சொல்லிட்டு வந்தியா,இல்லியா"

"அப்புறம் சொல்லாமே.. இத டிபன்பாக்ஸ்,, மதியம் வழக்கம்போல லஞ்ச்.."

ஆனந்தன்சுகுணாவைப் பார்த்தான்.

சுகுணா சூரியனிடம் சொன்னாள்.. "இப்ப நீங்க ஆபிஸ் போங்க.. நாங்க ரெண்டு

பேருமேலீவுதான்.. ஹாஸ்பிடல் போகணும்னு லீவு போட்டோம்.. அப்படியே அங்கே போய் பல்ஸ் பாக்கறோம்.அதாவது உங்க வீட்லே!.. நீங்க ஆபிஸ் விட்டதும் வந்துட்டுப் போங்க"

"ஆமாம்பா.. சுகுணா சொல்றது சரிதான்.. அப்படியே செய்வோம்"

சூரியன் புறப்பட்டுப் போனான்.

காலை பதினோரு மணி.

ஆனந்தனும் சுகுணாவும் புறப்பட்டார்கள்.நான்கு கிலோமீட்டர் இருக்கும். டூ வீலர் வசதியாகஇருந்தது.

" ஏங்க... பழமுதிர்லே நிறுத்துங்க.. கொஞ்சம்ஆப்பிளும், கொய்யாவும் வாங்கிட்டு வறேன்"

கடையில் நிறையக் கூட்டம். வெளியே வாகன நெரிசல். ஆனந்தன் வண்டியை சற்று தள்ளியே நிறுத்தினான்.

இருவரும் இடித்துக்கொண்டு படியேறியபோது

கேஷ் கௌண்டரில் காஞ்சனா! கூடவே ஓர் இளைஞன், கையில் பழப்பையுடன்.

" அங்கே பார்த்தீங்களா.."

ஆனந்தனும் சுகுணாவும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். நல்லவேளை, அவர்கள் உள்ளே நுழைகிற இவர்களைப் பார்க்கவில்லை. இருவரும் பைக்கில் ஏறி சிட்டாய்ப் பறந்துவிட்டனர்.

ஏன்ன செய்யலாம்?"

* நீ போய் வாங்கிட்டு வா.. அவங்க வீட்டுக்கே போவோம்.. பக்கத்திலே விசாரிப்போம்"

இருவரும் சற்று நேரத்தில் ரெசிடென்சி அபார்ட்மென்டுக்கு வந்தார்கள்.

செக்யூரிட்டி நோட்டில் கையெழுத்துப் போட்டு விட்டு, லிஃப்ட்டில்ஏறி மூன்றாவது தளத்திற்கு வந்தார்கள்..

எதிர்பார்த்தபடி சூரியன் வீடு பூட்டியிருந்தது. இருந்தாலும் அழைப்பு மணியை, ஆனந்தன் ஒரு அழுத்து அழுத்தினான்.

"அட.. ஏங்க.." - சுகுணா ச்ஞ்ஞ் கொட்டினாள்.

மணியொலி கேட்டதும் பக்கத்து போர்ஷனிலிருந்துஒரு பையன் கதவைத் திறந்தான்.

" நீங்க காஞ்சனா அக்காவைப் பார்க்கணுமா"

"ஆமாம்பா.. எங்கே போனாங்கன்னு தெரியுமா?"

"அதற்குள் உள்ளேயிருந்து இன்னொரு இளைஞனும் தலையைக் காட்டினான்.

"ஆயுள்.. அவங்கஹாஸ்பிடல் போயிருக்காங்க"

" அப்படியா.. என்னாச்சு"

" கீழ் போர்சன்லே... ஒரு பாட்டிக்கு முடியலே... பக்கத்துலே நியூ கேர் ஹாஸ்பிடலுக்குப்

போயிருக்காங்க.. ரகு கூடப்போயிருக்கான்.."

" ரகு யாரு?"- சுகுணா கேட்டாள்

" அவனும் ரூம் மேட் தான்.."

இன்னொருவன்சுகுணாவையே குறுகுறுவென்று பார்த்தான். அவள் உதட்டைக்கடித்துக்கொண்டு தரையைப் பார்த்தாள். அவன்தான் பூபதி!

"அங்கிள்... நான் பென்னி.. இவன் பூபதி.. அவன் ரகு மூணு பேரும் இங்கே தங்கிட்டு நீட் கிளாஸ்க்குப் போய்ட்டிருக்கோம்.. காஞ்சனா அக்கா எங்களுக்கு நிறைய ஹெல்ப் பண்றாங்க" என்றான் பென்னி.

"வாங்க அங்கிள் உள்ளே வந்து உட்காருங்க..."

பூபதி இருக்கையை தள்ளிப்போட்டான்.

"பூபதி! கீழே போய் சூடா வடையும் டீயும் வாங்கிட்டு வாடா"

என்றான் பென்னி.

"தம்பி.. இருக்கட்டும்.. கொஞ்ச நேரம் இருந்து பார்த்திட்டுப் போறோம்"

பூபதி அதற்குள் போய்விட்டான்.கீழே வண்டி உறுமும் ஒலி.

"வந்துட்டாங்க... அவங்கதான்" என்றான் பென்னி.

அவர்கள் படிக்கட்டில் வர வர, பேச்சொலியும் தொடர்ந்து வந்தது.

கடைசிப் படியில் கால் வைத்ததும் அண்ணாந்து பார்த்தவள் அதிர்ந்து போனாள்.ஆனந்தனும் சுகுணாவும் கதவருகே, இரு ஷோகேஸ் பொம்மைகளைப் போல் நின்றிருந்தனர். அடுத்த நொடியில் காஞ்சனாவின் முகம் மாறிற்று.

" அக்கா.. அப்புறமா வர்றேன்" என்றவாறு ரகு அவன் அறைக்குள் ஓடிப்போனான்.

அதற்குள் காஞ்சனா சுதாரித்துக்கொண்டவளாய்," வாட் யெ பிளசண்ட் சர்ப்ரைஸ்!

என்ன இந்நேரத்திலே.. வாங்க, " உள்ளே வாங்க"

என்றாள் சிரித்துக்கொண்டே இருவரும்ஓசையின்றி உள்ளே நுழைந்து சோபாவில் அமர்ந்தார்கள்.

அப்போது, பூபதி டீயும் வடையும் வாங்கிக்கொண்டு வந்து டீபாய்மீது வைத்துவிட்டு, ஓரக்கண்ணால் சுகுணாவைப் பார்த்தான்.

" ஆன்ட்டி!..நான் வர்றேன்" என்று நகர்ந்தபூபதியிடம்

" அட இருப்பா.." என்றவாறு அவனிடம் ஒரு நூறு ரூபாய்த் தாளைக்கொடுத்து "இதுக்குக் காசைக்கொடுத்துட்டு, நீங்க மூணு பேரும் போயி டீ சாப்பிடுங்க.. நாங்க பேசிட்டிருக்கோம் *என்றாள் காஞ்சனா.

"அப்புறம்.. காஞ்சனா! குடும்ப வாழ்க்கையெல்லாம் எப்படிப் போய்ட்டிருக்கு?" என்றாள்

சுகுணா.

“ போய்ட்டிருக்கு சுகு” என்றாள் சாந்தமாக.

“ சூரியன் என்ன சொல்றான் ‘ அவளை ஓரக்கண்ணால் பார்த்தவாறே கேட்டான் ஆனந்தன்.

காஞ்சனா உதட்டைப் பிதுக்கினாள்.

“ உனக்கு எப்படிப் பொழுது போகுது?

“ என்ன பண்றது.. எம்.ஏ., எம். பில் முடிச்சிட்டு சும்மாவா இருக்கறது..”

“ அப்புறம்..டுயிசன் எடுக்கறியா..”

“ இல்லே சுகு.. அதெல்லாம் அவருக்குப் பிடிக்கமாட்டேங்குது.. அதனாலே”

“ பக்கத்து போர்ஷன் பசங்களுக்கு ஏதாவது சொல்லிக்கொடுத்துட்டு.. மூணு பேரு இருக்கறாங்கே.. எல்லாமே நீட் எக்ஸாமுக்குப் படிக்கிறாஂக”

“ சுகுணா ஆனந்தனைப் பார்த்தாள்.

“ பார்த்துக்க சுகு..பேச்சலர்ஸ்!”

“ அட.. நீங்க வேற.. எல்லாமே இன்னொசென்ட் பாய்ஸ்.. ஒரு வெறியோட படிச்சிட்டிருக்காங்க”

“நீங்க ரொம்ப அழகாயிருக்கீங்கன்னு சூரியன் அடிக்கடி சொல்லிட்டேயிருப்பான்! -- ஆனந்தன் மெல்லப் புன்னகைத்தான்.

“ ஷ் ஷ்.. சும்மா இருக்கமாட்டீங்களா..” சுகுணா தன கணவனைப் பார்த்துக் கண்ணடித்தாள்.

காஞ்சனா நெற்றியைச் சுருக்கியவாறு “ என்ன சுகு.. அவர் ஏதாவது கம்பிளைன்ட் பண்ணினாரா?” என்று மென்மையாகக் கேட்டாள்

இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

அப்போது --- பூபதிஉள்ளே வந்து, “ஆன்டி.. மீதிக் காசு” என்றவாறு டீபாய் மீது வைத்துவிட்டு, சுகுணாவை..வெடுக்கென்று பார்த்தான்.

அது.. மின்னல் “வகத்தில். நடந்தது.

“என்ன இந்தப் பையன்... இப்படிப் பாக்கறான்”

மேனியில் வழிந்த புடவையை சற்று இழுத்துக் கொண்டாள். இதுவும் மின்னல் வேகத்தில்தான்!

“பூபதி!ஒரு ஹெல்ப் பண்ணமுடியுமா..”

“ சொல்லுங்க ஆம்ட்டி”

“இங்கே வா” என்றவாறே அவனை பெட்ரூமுக்குள் அழைத்துப்போனாள். பீரோவைத் திறக்கும்”க்ரீச்“ ஒலி.

அவனிடத்தில் பணமும் ஒரு கட்டைப்பையும் கொடுத்து அனுப்பிவிட்டு ஹாலுக்கு வந்தாள்.

சுகுணாவும் ஆனந்தனும் அவளது அசாதாரண நடவடிக்கையையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

“அப்புறம் சுகு... சொல்லு,, அவர் ஏதாச்சும்..” என்றவாறு அவர்களுக்கெதிரே அமர்ந்தாள். வாசல் கதவு திறந்திருந்தது. எட்டிப்பார்த்துவிட்டு சுகுணா பேசினாள்.

“ காஞ்சனா! சொல்றேன்னுதப்பா நெனைச்சுக்காதே.. பசங்க இங்கே வர்றது அவருக்குப் பிடிக்கலே போலிருக்கு”

சில நொடிகள் அவள் மௌனமாக இருந்தாள். ஆனந்தனும் எதுவும் பேசவில்லை. அடுத்த ஐந்தாவது நிமிடத்தில் பூபதி சரவணபவன் -சாப்பாடு வாங்கிக்கொண்டு வந்து நின்றான்.

“பூபதி! வச்சிட்டுப் போ..கெஸ்ட் வந்திருக்காங்க.. நாங்க சாப்பிட்டுட்டு பேசிட்டிருப்போம்.. ஏதாவது சந்தேகம் கேட்கணும்னா அஞ்சு மணிக்கு மேலே வாங்க..”

“ஓகே.. ஆம்ட்டி”

பூபதி, சுகுணாவையும் ஆனந்தனையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போனான்.

“ வாங்க... சாப்பிட்டுட்டு அப்புறமாப் பேசலாம்”

ஆனந்தன் சுகுணாவை தர்மசங்கடமாய்ப் பார்த்தான்.

“சார்.. வாங்க! வாஷ் பேசின் அங்கே இருக்கு.. இது லஞ்சு டைம் தானே.. வாங்க ப்ளீஸ்”

ஆயிற்று. லஞ்சு முடித்துவிட்டு ஹாய்யாக சோபாவில் தாபரித்தனர்.

“நேத்து நைட் கொஞ்சம் காரசாரமானவிவாதம்”

என்றாள் காஞ்சனா.

“நீ என்ன சொன்னே?”

“ஆம்பளைகளுக்கு பொம்பளைக மேலே சந்தேகம் வந்துட்டா...அது போகவே போகாது!”

“அப்படியில்லே.. ஒரு பொசஸிவ்னெஸ்தான்...வேறொண்ணுமில்லே” என்றான் ஆனந்தன்.

“நான் தன்மையாத்தான் சொன்னேன்.. பக்கத்துலே பசங்களுக்குக் காது கேட்டா அது நல்லாயிருக்காது.. இல்லையா..

அதனாலே உங்களுக்குப் பிடிக்கலேன்னா வேற வீடு பார்த்துட்டுப் போயிறலாம்னு சொன்னேன்”

“அதுக்கு அவன் என்ன சொன்னான்?”என்றான் ஆனந்தன்.

“பதில் எதுவும் சொல்லாமே என்னையே உத்துப் பார்த்திட்டிருந்தார்.. வேறே பக்கம் போனா மட்டும் நீ

திருந்திருவியா ன்னார்.. இதுக்கு சம்மட்டியே எடுத்து என் தலைலே ஒரு போடு போட்டுரலாம்.. சொல்லு சுகுஇந்த நிலைமையிலே நீ இருந்தா என்ன செய்வே?”

இருவருமே சற்றுநேரம் யோசிக்கிறமாதிரி தோற்றமளித்தார்கள்.

“அவன் வந்தா உறுதியாச் சொல்லிட்டு, வேற வீட்டுக்குப் போறதுதான் நல்லது.” என்றான் ஆனந்தன்.

“அந்த பூபதி பாக்கிற பார்வையே சரியில்லேன்னு தோணுது, காஞ்சனா.”

“ஐயோ..அப்படிப்பட்ட பசங்க இல்லே சுகு.. என்ன இப்படி ஜட்ஜ் பண்றே..”

“அவனே உன் பெட்ரூம் வரைக்கும் கூட்டிட்டு போறே.. இது கொஞ்சம் ஓவர்தான் காஞ்சனா!”

அவள் தலையில் அடித்துக்கொண்டாள்.

“சரி.. விடுங்க..அவர் வரட்டும்.. வேறே வீட்டுக்குப் போயிடறோம்”என்றாள் காஞ்சனா. ஏன் இவர்கள் இப்படிப் புரிந்துகொள்கிறார்கள் என்பது இவளுக்குப் புரியவில்லை. அவள் குரல்வளையை அமுக்கிறமாதிரி உணர்ந்தாள்.

அன்று இரவு. சூரியன் சற்று தாமதமாக வந்தான். அதன் காரணம்தான் தெரியுமே.ஆனந்தன் புத்தி சொல்லி அனுப்பியிருந்தான்

அவனும் முகத்தைக் காட்டாமல் நடந்துகொண்டான். ஆபீஸ் முடிந்ததும்ஆனந்தன் வீட்டுக்குச் சென்று வந்தது

காஞ்சனாவுக்குத் தெரியாது.

இரவு உணவுத் தட்டுக்களின் உரசல்.படுக்கையறையில் உரையாடல் தொடங்கியது. அவள் செருமினாள். போனவாரம்தான் அவன் மூன்று நைட்டி வாங்கிக்கொடுத்திருந்தான். கத்திரிப்பூப்-

போட்டஇரவாடையில் அவள் ஜொலித்தாள். மழையில் நனைந்த இலைபோல் தளதளவென்றிருந்தாள்.

“ இங்கே வா.. பக்கத்திலே வந்து உக்காரு.. என்னமோ சொல்லவந்தே..”

காஞ்சனா சிணுங்கினாள். அவன் பிடரிமீது மாலைபோல் சரிந்தாள். வெதுவெதுப்பான மூச்சுக்காற்று அவன் செவிமடல்களோரம் பரவிற்று.

“ நமக்குள்ள என்ன நடந்தாலும் அது நமக்குள்ளதாங்க இருக்கணும்.. நீங்க ரெண்டுபேரும் ஐகச் சிறந்த நண்பர்களாக இருக்கலாங்க.. இதையெல்லாம் போய் அவங்க கிட்டேச் சொல்லியிருக்கக்கூடாது..அவங்க திடீர்னு இங்கே வந்ததும் அப்படியே ஆடிப்போயிட்டேன், தெரியுமா..”

அவன் பதில் ஏதும் சொல்லாமல் இறுக அணைத்துக்கொண்டான்.

“ ஒரு பொசஸிவ்னெஸ்தான் காஞ்சனா! எனக்கு ஒரே டென்ஷன் உண்டாக்கிட்டான் அந்த செக்யூரிட்டி..!”

“செக்யூரிட்டியா... அவன் என்ன பண்ணினான்?”

“அவன்தான் உன்னை அந்தப் பசங்களோட..”

அவள் அவனை மேற்கொண்டு பேச விடாமல் வாயை மூடினாள்.

“ போதுங்க.. இனிமேல் இங்கிருக்க வேண்டாம்.. வேற வீடு பார்த்துட்டு போயிரலாம்..”

அவன் எதுவும் பேசவில்லை.

“.. எனக்கு ஆபிஸ் லே ஆடிட் இருக்கு.. பத்து நாளைக்கு ரொம்ப பிஸி..”

" அதை நான் பார்த்துக்கறேன்.. அப்பவே முடிவு பண்ணிட்டேன்.. காலைலே ப்ரோக்கர் வர்றான்.. நம்ம பையன்தான், சேகர்

..உங்களுக்கும் தெரியுமே.. உங்க ஆபிஸ் பக்கமே பாக்கச்ச்சொல்லியிருக்கேன்.. லஞ்சுக்குக்கூட நீங்க வீட்டுக்கு வந்துட்டு போயிரலாம்.. ரெண்டு நாள்லே சொல்றேனிருக்கான்.."

"என்ன.. எள்ளுங்கறதுக்குள்ள எண்ணையாயிருக்கே.."

"ஆமாங்க.. சந்தேகம்ங்கற முள்ளை முளையிலேயே கிள்ளிடறது நல்லதுதானே.. பாலை எடுத்துக் குடிங்க ஆறிரும்."

சூரியன் பாலை உறிஞ்சிக்கொண்டே"அதுக்கில்ல, காஞ்சனா.. பசங்க மனசுலே சலனம் ஏற்படறதுக்கு நாம் காரணமா இருந்துரக்கூடாது

பாரு!"

அவள் பதிலேதும் சொல்லாமல் அவன் மடிமீது சரிந்தாள்.

எப்படியோ நாலைந்து நாட்கள் ஓடிவிட்டன..

வீடு பார்த்து முடிவு செய்தாயிற்று. அட்வான்ஸ் கொடுத்தாயிற்று. சூரியன் ஆபிஸ் பக்கமே. ஆனந்தனும் இருக்கிறான்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை. சாமான்களை ஏற்றிச் செல்ல வேன் வந்தாயிற்று. மூன்று பேரும்தான் வாலண்டியர்ஸ். பென்னி, ரகு, பூபதி!

அவர்களாகவே வந்து பீரோ, கட்டில், சோபா, டீபாய்,, பிரிட்ஜ், கிச்சன் சாமான்கள் என்று எல்லாவற்றையும் வண்டியில் ஏற்றினார்கள்.

' அங்குள்.. நாங்களும் வேன்லியே வர்றோம்.. அங்கே எல்லாம் இறக்கி செட் பண்ணிட்டு வந்தர்றோம்"

அவன் எதுவும் சொல்லாமல், காஞ்சனாவைப் பார்த்தான். அவள் தலையாட்டினாள்..

புதிய அப்பார்ட்மெண்ட். முதல் தளம். வேலை மடமடவென்று ஆயிற்று.

" அக்கா.. நாங்க புறப்படறோம்..!" -- மூவரும் ஒரே குரலில்.

" பூபதி! இதை மூணு பேரும் வச்சுக்குங்க" - அவன் கரத்தில் மூன்று ஐந்நூறு ரூபாய் நோட்டுகளைத் திணித்தாள்

அவன் மறுத்து, ம் வேண்டாக்கா..யு என்று பின்வாங்கினான். சூரியன் ம் வாங்கிக்கங்க..ழ் என்று சைகை காட்டினான்.

அவன் உதடுகளிலிருந்து ம் ஆம்ட்டி ம் என்ற சொல் இப்பொழுது வரவில்லை!

" நல்லாப் படிங்க.. ஏதாவது சந்தேகம் வந்தா கோச்சிங் சென்டரிலே கேட்டு கிளியர் பண்ணிக்குங்க"என்றாள் காஞ்சனா. மூவர் முகங்களிலும் துயரம் தொங்கிக்கொண்டிருந்தது..

சூரியன் வேன் டிரைவருக்குப் பணம் கொடுக்கக் கீழே போனான்.

மூவரும் காஞ்சனாவையே ஒரு நிமிடம் இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.. பார்வையில் ஒரு. வெறுமை

அவள் விழிகளில் நீர் பனித்தது.

அடுத்த நொடி, அவர்கள் மௌனமாகவேகடந்து சென்றார்கள்.

அன்று மாலை ஆனந்தனும் சுகுணாவும் வந்தார்கள்..

வீடு பூரா அறையறையாக பூனைபோல்புகுந்து பார்த்தார்கள்.

“அதுக்குள்ளா எல்லாமே வச்சு செட் பண்ணிட்டீங்க...

பரவாயில்லையே!”என்றாள் சுகு.

“அட, நீ வேற..அந்தப் பசங்க வந்து எல்லாம் பண்ணிக்கொடுத்துட்டுப் போறாங்க..” என்றாள் காஞ்சனா.

“இங்கே வேற வந்துட்டாங்களா!”என்றாள் வெறுப்புடன் சுகுணா.

காஞ்சனாவுக்கு “ஜிவ்” வென்று ஏறியது. முகத்தைத் திருப்பிக்கொண்டே கிட்சன் பக்கம் போனாள்.

சூரியன் புரிந்துகொண்டான்.

“ ஏப்பா.. நிக்கிற... உட்காரு... காஃபி வருது..”

காஃபி குடித்துக்கொண்டே அளவளாவிக்கொண்டிருந்தார்கள்.

“சரி.. இனி பிரச்னையில்லே.. ஜாலியா இருங்க!” என்று கண் சிமிட்டினாள் சுகுணா.

“என்ன ஜாலி..உங்களைவிடவா..” லிவ் - ன் -லைஃப்”லே நீங்கதாம் வாழ்க்கையே அனுபவிக்கிறீங்க!”என்று காஞ்சனா சொன்னதும், சுகுணாவுக்கு முகமெல்லாம் கருமேகத்தைப் போல் மாறியது.

ஒரு நிமிடம் மயான அமைதி. காஞ்சனா உள்ளூர திருப்திப்பட்டுக் கொண்டாள். முள்ளால் கிளறிவிட்டது போல் இருந்தது அவர்களுக்கு

“சூரியன்! நாங்க கெளம்பறோம்..அப்புறமா வர்றோம்”

“காஞ்சனா..பை..”

ஏறக்குறைய இருபது நாட்களுக்கு மேலாகிவிட்டது.

ஆனந்தனும் சுகுணாவும் இந்தப்பக்கம் வரவேயில்லை.

“என்னங்க..உங்க பிரண்ட்க்கு என்னாச்சு.. போன் பண்ணிப்பார்த்தீங்களா”

“பலதடவை பண்ணிப்பார்த்தேன்.. எந்த ரெஸ்பான்ஸும் இல்லே..நேரா ஆஃபீஸ்க்கே போய்க் கேட்டேன்..அவன் பூனாவுக்கு ட்ரான்ஸ்~பர் வாங்கிட்டு போய்ட்டானாம்!”

காஞ்சனா நெட்டுயிர்ப்புடன் அவனைப் பார்த்தாள்..!

● ரகுநாத் வ

# மழையும் நானும்

ஒரே
துளி
தாயாகவும்
பிள்ளையாகவும்
சுழல
மழையும்
நானும்
ஒன்றாய்
திரளுகிறோம்..

நான்
எண்ணங்களை
தேக்குவதிலும்
மழை
தேக்கிய
ஆற்றை
கானலாக்குவதிலும்..

கணம்
ஒன்றுதான்,
அது
மேகமென
பெருத்து
திரிகிறது.
நான்
மனமென
வீங்கி
கிடக்கிறேன்..

சில
சமயங்களில்
மேகமும்
நானும்
அலைபாய்கிறோம்
உள்ளிருந்தே
பெய்துவிட..

இருப்பினும்
நான்
சிந்தனையால்
களைகிறேன்
மேகமோ
சிந்திவிடாமல்
களைகிறது..

அது
காற்றை
கடித்து
கொண்டு
பல
உருவம்
பெறுகிறது,
நானோ
காற்றைக்
குடித்து
கொண்டு..

கடலில்
தோன்றுகிறது
மழை
எனக்கோ
கவலையில்
வளர்கிறது
மனம்..

மழையும்
நானும்
ஒன்றாய்
திரளுகிறோம்
ஆனால்
ஓரிடத்தில்
மட்டுமே
சிதறுவதில்லை..

● கலா புவன்



பத்து மாதம் அன்னையவள் பத்திரமாய் சுமந்து உன்னை நித்திலத்தில் பெற்றெடுத்தாள்
இமை மூடயிலவில்லை - எங்கள்
இமை மூடயிலவில்லை
சிறகெங்கே தெரியவில்லை - எங்கள்
சிறகெங்கே தெரியவில்லை உலகே
எம் தீலிபனின் உயிரின் விலை உனக்கு தெரியவில்லை
எமக்கு இன்னும் நீதியில்லை -உலகே
உன்னிடம் நீதியில்லை

வான் முகட்டு மேகங்களே நெடுந்தூர பெரும் காடே
சீறியெழும் பேரலையே சிறுத்தை குளித்த பெருநதியே
கூவி எழுப்பும் குயிலினமே கூரை முகட்டு சேவல்களே
பாடிப் பறக்கும் இறக்கைகளே ஓடி வந்து சொல்லிடுவீர்
எம் தீலிபன் சென்ற தடம் எங்கே என்று ஓடி வந்து சொல்லிடுவீர்

ஈரவயலெல்லாம் இங்கே உழுது விதைச்சதனால்
நீள விழிகளெல்லாம் தேங்கி எரிகிறது
வீரம் விளைந்த திசை தெறித்து சிவந்திருக்கும்
ஊரின் வாசல் இங்கு ஊமையாய் தூங்குகிறது திலீபா
எங்கே சென்றீர் மௌனமாய் அழைத்த மரணித் வீரரிடம் சென்றீரோ?

நல்லைக் கந்தனின் கோயில் மணி கேட்கையில் கோடி வரம் கேட்டு விட்டோம்
பாயும் சுருண்டிங்கு பதறிப்போய் கிடக்கிறது
நோயில் கிடக்கவில்லை நீ நொடிப்பொழுதும் ஆறவில்லை
வேர் இங்கு படர்ந்திருக்கு எங்கள் பூவிதழைக் காணவில்லை
திலீபா எங்கே நீர் சென்றீரோ?

பெருநெருஞ்சி முட்புதரே நீ
கொஞ்சி முத்தமிட வெஞ்சமர் பாதங்களை
எங்கு நீர் செல்லவிட்டீர் - இமை மூட இயலவில்லை
மௌனமாய் அழைக்கும் மரணித்த வீரர்களிடம் சென்றாயோ?

தீலீபா எவ்வளவு தைரியம் இருந்தால் மகாத்மாவிற்கே சவால் விடுவீர்கள்
பாரதமே! மகாத்மாக்கள் உங்கள் தேசத்தில் மட்டுமல்ல
எங்கள் தேசத்திலும் மலர்வார்கள்

மெல்லெழுவீர் மெல்லெழுவீர்
ஓர் சொல் தருவீர் சொல் தருவீர்

● ஜே.வஹாப்தீன்

# போலி முகம் நீண்ட நாள் நிலைக்குமா?

நாற்றமெடுக்கும் மனசு
சேற்றுவாசம் வீசினால்
எத்தனை நாள் மூடி மறைக்கும்
ஆற்று வாழை?

காற்று
காட்டிக் கொடுப்பதற்கென்றே
படைக்கப்பட்டது.
அது மூக்கின் தபால்காரன்.
முத்திரையிடப்பட்ட
சேற்று வாசத்தை
மூக்கில் சேர்த்துவிட்டு
மணி ஒலித்தபடி ஓடிற்று.

ஆறு
அது உருவாக்கிய
வாய்க்காலெல்லாம்
வயலுக்குப் பாலூட்டும் தாய்மார்தான்.
அதன் பெயர் சொல்லிக்கொண்டு
நீயும் ஓடாமல்
தேங்கி நிற்கிறாய்
எப்படி ஆறாக முடியும்?

ஆற்று வாழைகள் அழகு ஒப்பனைகள்
அதனை எல்லோருமா நம்புகிறார்கள்.

சேற்று வாசம் குடித்துச் சுளிக்கும்
குரட்டைகளால் நீ மயங்குவதால்
எப்படி ஆறாக முடியும்?
முதலில் ஓரிடத்தில் நில்லாது
ஓடு
ஆற்று வாழைகள் கலைய.

காற்று நல்ல சேதி சொல்லும்
அந்தச் சேதியை
மூக்குவழி ஏற்றுக்கொள்ளும்.

ஓடிக்கொண்டே இரு
உன் பெயர் ஆறாகும்
களைத்தால் வா
குளிர்ந்த நிழலில்
குளிர்பானம் அருந்த.

● பெ. விஜயலட்சுமி

# துளிப்பாக்கள்

மின்னதிர்வை ஏற்படுத்துகிறது
மின்கட்டண உயர்வு
குடிசையில்

❒

கொட்டும் அருவி
சலனமின்றிக் கிடக்கிறது
வரவேற்பு அறையில் ஓவியம்

❒

அனைத்தும் திருடுபோனது
அப்படியே கிடக்கிறது
புத்தகங்கள்

❒

உரசி உரசி
பேசிச் சென்றன
எதிரெதிரே எறும்புகள்

❒

இறந்தவன் மீண்டும்
உலகைப் பார்கிறான்
கண்தானம்

❒

வானமே குனிந்து
தலை வணங்குகிறது
நாற்று நடும் வயல்

❒

முதலில் நடிகை
கடைசியில் நாட்டுக்குழைத்தவர்கள்
ஒதுக்குகிறது செய்தித்தாள்

❒

உயிர் பெறுகிறது
குழந்தைகளிடம்
மாறுவேடம்

❒

மலை உச்சி
மேலெழும்புகிறது
அரிக்கும் மனம்

● ஆதிலட்சுமி.சிவகுமார்



# விருது

தூரத்தே கடல் இரைந்துகொண்டிருந்தது. காற்று உடலில் பட்டபோது, கைகளில் உரோமங்கள் சிலிர்த்தன. உடல் ஒருமுறை நடுங்கித் தணிந்தது. வழக்கமாக இந்நேரம் சுவர்க்கரையோடு இருக்கும் மரக்கட்டிலில் அவர் நீட்டிநிமிர்ந்து படுத்திருப்பார்.

" நித்திரையிலை கூட வளையாத மனுசன்....." நினைத்தபோது மனதுக்குள் என்னவோ செய்தது.

தலையை நிமிர்த்திப் பார்த்தாள்.

நாலுமுழவேட்டியும் வெள்ளை மேற்சட்டையும் அணிந்த அவர் முழுப்படத்தில் சுவரில் தெரிந்தார். அதே கம்பீரம். முகத்தில் கொஞ்சங்கூட சிரிப்பில்லாத, ஆனால் கனிவான தோற்றம்.

“ இனி இதுதான் நிசம்....” என நினைத்துக்கொண்டபோது... மனதை எதுவோ பிறாண்டியது.

காலையில் எழுந்து குளித்துவிட்டு, தன்னுடைய தாயின் படத்திற்கு விளக்கேற்றி, நெற்றியில் ஒற்றைக்குறியிட்டபின், நாலுமுழ வேட்டியையும், அரைக்கைச் சட்டையையும் அணிந்துகொள்வர்.

சுக்கும் மிளகும் தூக்கலாய்த்தெரியும் கையால் இடித்தகோப்பியில் சிறிது சீனிபோட்டு, அவள் கொடுக்கும் பால்கோப்பியை குடித்துவிட்டு கிளம்புவார். எங்கே போகிறார், என்ன செய்கிறார் என இவள் கேட்டதுமில்லை, அவர் வாய்திறந்து சொன்னதுமில்லை. ஆனால் அவர் நிறைய செய்வதாக பலரும் பேசிக்கொள்வதை தன்செவிகளிற் கேட்டிருக்கிறாள்.

ஒருநாள் அவளின் தங்கையின் மகன் பத்துமன் ஓடிவந்தான்.

“ எண.... குஞ்சம்மா........ பெரியையாவை அவர் கூப்பிட்டு சந்திச்சவராம்......ஊரெல்லாம் பெரியையாவைப் பற்றித்தான் கதை......” என்றவன்

“ இஞ்ச பாரணை.... பேப்பரிலை படமும் வந்திருக்கு.......” அவன் காட்டியபிறகு, அவரையும் இவரையும் மாறிமாறிப் பார்த்தபோது... மனதுக்குள் ஒருவித உணர்வு பிறந்தது.

செய்தித்தாளையும் கொண்டு பத்துமன் ஓடிப்போய்விட்டான். இனி ஊரமுழுக்க அவன் கொண்டு திரிவான். அவள் எழுந்து அடுப்படிக்குள் போனாள். அவர் பொழுது சாய்ந்தபிறகுதான் வழக்கமாக வீட்டுக்கு வருவார். வரும்போது சிலவேளைகளில் துணிப்பைக்குள் காய்கறிகள் வாங்கிவருவார். சிலவேளைகளில் ஏதாவது புத்தகங்களைக் கொண்டும் வருவார். அவளுக்கென்று தனிப்பட்ட விருப்பங்கள் இல்லை. அவர் கொண்டுவரும் காய்கறிகளை அவள் சமைப்பாள்.

இரவில் மட்டும், அதுவும் ஒருநேரச் சோறுதான் அவரது சாப்பாடு. நல்ல சிவப்புப் பச்சைஅரிசியை அவியவிட்டு, குறித்த பதத்தில் சோறாக்கினால் அவருக்கு சரி. அதற்குத் தோதாக விளைமீனில் ஒரு குழம்பு. இல்லையென்றால் வாழைமீன் பொரியல். ஒரு மரக்கறி. அவ்வளவுதான். சந்தைக்கு மீன் கொண்டுபோகிற செபமாலை ஒவ்வொருநாளும் வாசலில் கொண்டுவந்து மீன் தந்துவிட்டுப் போவான். உண்மையில் அவர் நல்லவர். கலகலப்பானவர். அவளை ஒரு குழந்தையாகத் தாங்கோ தாங்கென்று தாங்கியவர். மகனை முள்ளிவாய்க்காலில் தொலைத்தபிறகு அதன்பிறகான சிலகாலமாகத்தான் உச்சந்தலையில் அடிவாங்கியவர்போல அமைதியாகிவிட்டார்.

“ எனக்கு மட்டும் கவலை இல்லையே என்ன.... பாவம் மனுசன் பிள்ளை தான் அவற்ற உயிர்.... அதுபோனாப்பிறகு.... மனுசன் பிணம் மாதிரி திரியுது... நாங்கள் மட்டுமே பிள்ளையை துலைச்சம்.... எத்தினையாயிரம் தாய்தேப்பன்....பெஞ்சாதி பிள்ளையள் கலங்கிக் கிடக்குதுகள்.... “

அவர் வீட்டில் இல்லாவிட்டாலும் இவள் வீடே கதியென்றிருப்பாள். சிலவேளைகளில் யாராவது அக்கம் பக்கத்துப் பெண்கள் வருவதுண்டு. அதிலும் சிலர் முதுமையால் வீடுகளுக்குள் முடங்கிப்போயிருக்கிறார்கள்.

“ என்னெண்டணை தனிய இருக்கப் போறாய்..... எங்களோடை வாவன்.... எங்கடை பிள்ளை குட்டியளோடை பொழுதும் போகும்..... எங்களுக்கும் உன்னைத் தனிய விட்டிட்டமே எண்ட குற்றவுணர்வு இருக்காது..... “ என்று பத்துமன் கேட்டதற்கு அவள் மறுத்துவிட்டாள். அவன் எப்பவாவது ஒருநாள்வந்து, கொஞ்சநேரம் இருந்துவிட்டு போகிறான். இப்போது செபமாலையிடமும் மீன் வேண்டாமென்று சொல்லிவிட்டாள். இரண்டு ஆட்டுக்குட்டிகள் நிற்கின்றன. அவற்றையும்

யாருக்காவது விற்றுவிடச் சொல்லி பத்துமனிடம் தான் சொல்லியிருக்கிறாள். அவளுக்கென்னவோ அவர் எப்பவென்றாலும் வந்துவிடுவார் என்ற எண்ணமே மனதில் நிறைந்துகிடந்தது. இரவுகளிலும் அவர் மரக்கட்டிலில் படுத்துக்கிடப்பதாகவே நினைப்பிருக்கும். அதிகாலையில் மேசையின் முன்னாலிருந்து அவர் ஏதோ எழுதிக்கொண்டிருப்பதாக மனம் சொல்லும்.

" முள்ளிவாய்க்கால் பிரச்சனை மட்டும் வரேல்லை எண்டால் மனுசன் இன்னும் ஒரு இருவத்தைஞ்சு வரியம் இருந்திருக்கும்.... " என மனதில் கணக்குப் போட்டாள்.

" முள்ளிவாய்க்காலுக்குப் பிறகு தானே சனங்களுக்கு இப்பிடி ஒரு நிலமை வந்தது..... இல்லாட்டி சனத்தைப் பிடிக்க ஏலுமே.... எவ்வளவு றாங்கியோடை தலைநிமிர்ந்து நிண்ட சனங்கள்......"

முள்ளிவாய்க்கால் முடிவோடு அவர் சுக்குநூறாகிப்போனார் என்பதை அவள் உணர்ந்திருந்தாள்.

வீடில்லாமல்..... செலவுக்குப் பணமில்லாமல்.... மதிக்க மனுசரில்லாமல்.....

" ச்சா... ஒருநாளும் நல்லாயிருந்து கெட்டுப்போக கூடாது.... அந்த வலியை எந்த மனுசராலையும் தாங்கேலாது..... " அவள் மனது அவளிடமே சொன்னது.

" எத்தினை சனத்தோடை பழகி.... எவ்வளவு பேரை முன்னேற்றிவிட்ட மனுசன் ..... கடைசியிலை பஸ்சுக்கு காசில்லாம எத்தினைநாள் நடந்து திரிஞ்சது..... என்ன கஸ்டம் எண்டாலும் ஆரிட்டையும் வாய்விடாத மனுசன்...... அதாலை தான் இவளவு கஸ்டம்..... "

" அப்பிடியிருந்தும் ஒருக்கால் பத்துமனின்ரை ரெலிபோனிலை ஆரிட்டையோ உதவி கேட்டவராம்..... நல்லாயிருக்கேக்கை பின்னால முன்னாலை திரிஞ்ச சிலபேர்..... கஸ்டமெண்டு வந்தவுடன .... உண்ணி கழண்டமாதிரி போட்டாங்கள்.... ஆனா மனுசன் ஒருதரையும் மனம் நோகேல்லை........"

" ஏதோ கொஞ்சநாளைக்கு முன்னம்தான் ஒரு சின்னவேலைக்குப் போகத் தொடங்கின மனுசன்.... ".

அவள்மனம் எதைஎதையெல்லாமோ நினைத்துக் கொண்டிருந்தது. மனதில் எந்த உணர்வுமில்லாத உணர்வே இருந்தது.

" சனிக்கிழமை கடற்கரைக்குப் போன மனுசன் .... கொஞ்சம் கள்ளடிச்சுப் போட்டு.... மீனோடை வந்தது.... மத்தியானத்துக்கு பிறகு பத்துமனும் கடைசிப் பொம்பிளப் பிள்ளையை கொண்டு வந்தவன்.... எல்லாருமா ஒண்டா இருந்து சாப்பிட்டது..... விடிய மனுசன் எழும்பேல்லை..... என்ன கோதாரி விதியோ..... ஆருக்குத் தெரியும்...... எல்லாம் கண்ணிமைக்கிற பொழுதிலை நடந்து முடிஞ்சுது........."

அவளின் கண்களில் நீர் துளிர்த்தது. மர்களினூடே வளைந்து வளைந்து செல்லும் கிறவல்தெருவில் யாரோ ஒருபெண் குழந்தையை சுமந்தபடி போய்க்கொண்டிருந்தாள். அவர் இல்லாதபோதும் அவர் இருந்தநாட்கள்போல பொழுது பட்டபிறகுதான் அவள் சோறாக்குவாள். ஏதோ கடமைக்கு ஒரு குழம்போ கறியோ வைத்துக்கொள்கிறாள். பின்பக்க வேலியோடு மரியதாசனின் குடும்பத்தின் வீடு. மரியதாசன் பிரதேச்சபையில் வேலை. காலையில் போனால் இரவாகிவிடும் வீட்டுக்குவர.

அவனுடைய மனைவி பிள்ளைகளோடு வீட்டிலிருப்பவள். எப்போதாவது விறகு முறிக்கும்போதோ.... இல்லாவிட்டால் வேலிப்பக்கம் போகும்போதோ கண்டால், " சுகமா

இருக்கிறியளோ.... " என்பாள். அவ்வளவுதான் கதை. அதற்குமேல் இவளும் எதிர்பார்ப்பதில்லை.

அவர் இருக்கும்போதும் அப்படித்தான். வேலையில்லாத நாளிலும் அவர் எங்கேயும் போகமாட்டார். ஏதோ அடுக்கிவைத்திருக்கும் புத்தகங்களைப் படித்துக்கொண்டிருப்பார். அல்லாதுவிடில் கட்டிலில் படுத்துக்கிடப்பார். அவளும் எங்கேயும் போகமாட்டாள். சந்தைக்குப் போகிற வழியில், சின்னப் பள்ளிக்கூடத்திற்கு கிட்டவாகப் பிள்ளையார் கோயில் இருக்கிறது. ஆனால் அவருக்கு கோயிலைப் பிடிக்காது.

" உவங்களுக்கு வேறை வேலையில்லை.... சனத்துக்கு விளங்காத மொழியிலை கடவுளுக்கு பூசை செய்யிறாங்கள்.... அந்தக் காலத்தில் தமிழ்மொழியிலை என்ன வடிவா தேவாரங்கள் பாடிவைச்சிருக்கினம்........ அதைவிட்டுப்போட்டு.... ஆற்றயோ சுலோகங்களை சொல்லுகினம்..... எங்கட தாய்மொழியிலை எப்ப பூசை செய்யினமோ அப்ப போகலாம் ....." என்பார் அவர்.

" ம்... கடல்வத்திக் கருவாடு திண்ட கணக்குத்தான்..... " என அவள் தனக்குள் நினைத்துக் கொள்வாள். அவரிடம் சொல்லமாட்டாள்.

திருவிழாக் காலங்களில் ஒலிபெருக்கிகளில் கேட்கும் பக்திப்பாடல்கள் அவளுக்குப் பிடிக்கும். கணீரென்ற குரலில் சீர்காழி பாடுவதை எவராலும் எக்காலத்திலும் அடித்துச் செல்ல முடியாது என அவள் நினைப்பாள். கலியாணம் கட்டுவதற்கு முன் அப்புவுடன் வற்றாப்பளை திருவிழாவுக்கு பலமுறை போயருக்கிறாள். உள்ளூரிலும் பொன். சுந்தரலிங்கத்தாரின் காந்தர்வக்குரல் இவளுக்கு நன்றாகப் பிடிக்கும்.

" என்ர மனுசனுக்கு சினிமாப்பாட்டும் பிடிக்காது, கோயில்பாட்டும் பிடிக்காது..... எப்ப பாத்தாலும் இயக்கப் பாட்டுத்தான்.... மனுசன் என்னவோ.... அதிலையே ஊறிப்போச்சு...."

இப்போதெல்லாம் என்னவோ பழையநினைவுகளைத் தான் மனது அசைபோட்டுப் பார்க்கிறது. அவரைத் திருமணம் செய்தபோது அவர் சங்கக்கடையில் முகாமையாளராக இருந்தார். பிறகு அந்தவேலை பிடிக்காமல் யாழ்ப்பாணம் போய், பத்திரிகையில் வேலை செய்தார். அதிலும் ஒழுங்கான வேலை இல்லை.

பேசாமல் வந்து, கூலிவேலைக்குப் போனார். கூலிவேலையிலும் அவரால் நின்றுபிடிக்க இயலவில்லை. சிலமாதங்கள் வேலைவெட்டி ஏதுமில்லாமல் வீட்டில் நின்றார். பிறகு தான்... பசுபதி வாத்தியார் மூலமாக.... மீண்டும் பத்திரிகையில் வேலை கிடைத்தது. எங்கே என்ன வேலைக்குப் போனாலும், கலகக்காரனாகவே இவர் இருந்தார். சுயாதீனமாகவும் இவரால் வேலைசெய்ய முடியவில்லை.

" பெரியையாவுக்கு நல்ல மூளையணை.... இவற்றை திறமைக்கு என்னமாதிரி வாழலாம்... ஒருதரோடையும் ஒத்துப்போறாரில்லையணை....." என்று பலதடைவை பத்துமனும் கவலையோடு சொல்லியிருக்கிறான்.

என்ன நடந்தாலும் அவருக்குப் புத்திசொல்ல அவள் நினைப்பதில்லை.

காலம் ஏதோ திரும்பியது.

ஒரு புகைப்பட நிறுவனத்தில் வேலை கிடைத்தது. அரச பணியாளர்கள் ஓய்வுபெற்று வீட்டிலிருக்கின்ற வயதில், இவர் வேலைகிடைத்து புறப்பட்டுப் போனார்.

“ கடவுள் எல்லாவாசலையும் பூட்டமாட்டார் எண்டது உண்மைதான்.... ஏதோ ஒருவாசல் இந்த மனுசனுக்காகத் திறந்திட்டுது.....”

எல்லாவற்றையும் அவள் இயல்பாகவே ஏற்றுக்கொண்டாள். காலையில் எழும்புவது, குளிப்பது, எட்டுமணிக்கு வீட்டிலிருந்து கிளம்புவது என அவர் சிலமாதங்கள் ஒழுங்காக இருந்தார். இப்போது சில தடைவைகள் அவரது மனதில் நெகிழ்வுத்தன்மை உருவாகியிருக்க வேண்டும். வேலையால் வரும்போது பழங்களோ அல்லது தின்பண்டங்களோ வாங்கிவந்து அவளிடம் தருகிறார். அவளுக்கு இப்போதெல்லாம் பெரிதாக தின்பண்டங்களில் நாட்டமில்லை என்றாலும், அவரின் அன்பும் அரவணைப்பும் அவற்றிலே குழைந்திருக்கும் என்பதால் உண்டுவிடுகிறாள். இன்னும் சிலவேளைகளில் இருநூறோ முந்நூறோ அவள் கையில் தருகிறார்.

“ இதைவிட வேற என்னவேணும் ராசா எனக்கு.... “ என்று நினைத்துக்கொள்கிறாள் அவள். அந்த நினைப்பே பேரானந்தத்தை தந்துவிடுகிறது அவளுக்கு.

இந்தப் பேரானந்தங்களின் மீதும், பெருமகிழ்வுகளின் மீதும் தான் அன்றைய அதிகாலை பேரிடியைத் திணித்தது. இப்போது அடைபட்ட காற்றைப் போல அவள். பெருமூச்சோடு தொலைவில் தெரியும் பனங்கூடலைப் பார்த்தாள். எல்லாமே தலைவிரிகோலமாய் நிற்பதான தோற்றம் தெரிந்தது. ஞாயிற்றுக்கிழமை. அவளைப் பொறுத்தவரைக்கும் அவரில்லாத எல்லாநாளும் அவளுக்கு ஒரளநாள் தான்.

“ நாப்பது வருசம் எல்லாத்திலையும் ஒண்டா இருந்தவளை தனியாவிட்டுட்டு, பொசுக்கெண்டு போய்விட எப்பிடி முடிந்தது இந்த மனுசனால்.... “ என நினைத்து நினைத்து வருந்திக்கொண்டாள்.

அவர் இல்லாமல்போன மறுநாள் பின்னேரம் செபமாலை வந்திருந்தான்.

“ அம்மா... ஒருநாள் அவசரத்துக்கு ஐயாவிட்டை ஆயிரம் ரூவா வேண்டினான்....” என்று நீட்டிய காசை அவள் மறுத்துவிட்டாள்.

“ நீயும் அவருக்கு ஒரு புள்ள தான் செபமாலை.... உந்தக்காசை நீயே வைச்சிரு.... “ என்று அவள் சொன்னபோது, அவன் தேம்பி அழுத காட்சி அடிக்கடி அவளை வருத்தும்.

அவள் நினைத்தது சரிதான் என்பதுபோல பத்துமன் வந்திருந்தான். வழமையாக வரும் அவளது சின்னமகள் வரவில்லை. அவரின் படத்தின் முன்னால் போய் நின்றபடி, “ பெரியையாவின்ர செருக்கைப் பாரனணை.... இப்பவும் ஆருக்கும் மசியாத இந்தச் சிரிப்புத்தான் அவற்றை வசீகரம்..... “ என்றான்.

“ எண... குஞ்சம்மா... எங்கட கிராம முன்னேற்ற தமிழ்ச்சங்க கூட்டமெல்லே காலமை நடந்தது.... பெரியையாவை கௌரவிச்சு.... ஆண்டுவிழாவிலை விருது குடுக்கப் போகினமாம் எண்டு அதிலை தீர்மானம் எடுத்திருக்கினம்...... “

அவள் சடாரென்று அவரது படத்தை உற்றுப் பார்த்தாள்.

“ ஒரு மனுசனை உயிரோடை இருக்கேக்குள்ளை தான் ஊர் கொண்டாடவேணும்.... அதை அவர் எனக்குச் செய்திட்டார்.... அந்த மனநிறைவோட தான் நான் விடைபெற்றருக்கிறன்..... நீ மட்டும் உந்த விருதுகள் எண்ட பேரிலை நடக்கிற விளம்பரக் கூத்துகளிலை போயிடாதை...... “ என்று சொல்வது போலவிருந்தது அவரின் சிரிப்பு.

● அத்தாவுல்லா



# தோலின் நிறம்...

என்ன நினைத்திருப்பாய்
என் பிரிய சகோதரனே..

என்னவெல்லாம் நினைத்தாயோ
எப்படி எல்லாம் துடித்தாயோ..

நிறத்தால் மட்டுமா ஏற்பட்டது
இந்தக் கொடுமை..
கறுப்பு என்ன அவ்வளவு
களங்கப்பட்ட நிறமா..
வெண்மை என்ன
சுவனத்திற்கான வண்ணமா..

வெறும் தோலின் நிறமா
ஒருவனை உயர்த்தி
வைக்கப் போகிறது..
ஒருவன் நிறமா
அவன் தகுதியை
நிர்ணயம் செய்கிறது..

உன் கழுத்தில்
அழுத்திய கால்கள்
எங்கள் நெஞ்சில் கொட்டிய
நெருப்புத் துண்டுகள்..

எவ்வளவு
பொறுமைக்காரன் நீ..

“விடுங்கள்..
என்னைக் கொஞ்சம்..
நான் சுவாசிக்கக் கொஞ்சம்
காற்று தாருங்கள்..

உன் கதறல் கவிதை
இந்த உலகத்தைக் கலங்க வைத்தது..
ஆனால் இந்தக் காதகர்கள்
காதுகளில் ஏறாமல்
காற்றோடு காற்றாகக்
கரைந்து விட்டதே நண்பனே..

என்ன நினைத்திருப்பாய்..
எப்படி எல்லாம் துடித்திருப்பாய்..

ஆகாயம்
அளவின்றிக் கொடுத்த
அருட்கொடையின் அளவை
ஒரு முரட்டு மூடனின்
ஈனச் செயல் தடுத்து விட்டதே..

நீ சொர்க்கத்துக் காற்றை
சுவாசிக்க வேண்டும் என்றுதான்
இந்த சூழ்ச்சியைச் செய்தானா
அந்தச் சண்டாளன்...

அவன் அணிந்த ஆடை என்ன
உயிர் பறிக்கும் எந்திரமா..
காவலுக்கானதா
கொலைக்கானதா..

கறுப்பு நிறம்
என்பது என்ன
அவ்வளவு இழிவானதா..

வெள்ளைக் கருப்பையை
உன்னைக் கொன்ற
அந்த வெள்ளையனின்
அன்னை கூட
சுமந்திருக்க வில்லையே..

இருட்டுக்கு பதில்
வெளிச்சத்தில்தான்
இருப்பேன் என்று
எந்தத் தாயின் சிசுவும்
அடம்பிடிக்க வில்லையே..

கறுப்புக்குள்தானே
மானுட உலகமே
மயங்கிக் கிடக்கறது...

இரவென்னும் கறுப்பு
இல்லையென்றால்
உலகில் எவர் வாழ்விலும்
விடியல் எனும் வெள்ளையே
இல்லையே..
இவன் மட்டும் எப்படி மறந்தான்..

சிவப்பு அணுக்களோடு
இருவர் உடலிலும்
வெள்ளை அணுக்கள்தானே
ஓடுகிறது இரத்தமாய்..

ஆபத்துக்கு உதவி என்றால்
கருப்பன் இரத்தத்தையும்தானே
ஏற்கிறது இந்த உலகம் பந்தமாய்..

இருவர் விழிகளிலும்
கருப்பும் வெள்ளையும் தானே
கலந்து கிடக்கிறது...

அதன் வழிதானே
காணும் காட்சிகள்

விரிந்து கிடக்கிறது...

தெரிந்துமா அந்த பாதகன்
இடர் செய்தான்..
இரக்கமற்ற
ஒரு வதை செய்தான்..

அவன் மனிதன் என்றால்
ஒட்டு மொத்த உலகத்தின் அழுகையே
அவன் மனதைக் கரைக்கும்..
அதுவும் அவனுக்கு
சாப விமோசனம்தான்..
.இல்லையேல்
அவன்தாயின் கருவறையே
அவன் மறுபடி பிறந்தால் வதைக்கும்..

போய்வா நண்பனே..
கறுப்பென்றும் சிவப்பென்றும்
பாரபட்சம் காட்டாத
சொர்க்கத்தின் கதவுகள்
உனக்காகத் திறக்கட்டும்..
போய் வா...

❒

# அந்தாதிக் கவிதை..

எண்ணாத எண்ணமெல்லாம்
எண்ண வைக்கிறாய்
எண்ணுகிற போதினிலே
வண்ணம் வைக்கிறாய்
கண்மூடும்பொழுதில் உன்
கன்னம் வைக்கிறாய்
கண்விழித்துப் பார்க்கையிலே
சின்னம் வைக்கிறாய்..

சிந்தாதச் சிரிப்பெல்லாம்
சிந்தி நகைக்கிறாய்
முந்தானை சுகத்துக்குள்
என்னைப் புதைக்கிறாய்
அந்தாதி பாவனையில்
கவிதை புனைகிறாய்
அந்தி நிற வானமென
அழகில் நனைகிறாய்...

துள்ளி வரும் ஆசைகளைத்
துரத்தி வருகிறாய்
துவண்டு விழும் வேளையிலும்
தூக்கி விடுகிறாய்
அள்ள வரும் பாவனையில்
அஞ்சி நடிக்கிறாய்
அணையாமல் அகத்துக்குள்
நின்று எரிக்கிறாய்..

பூஞ்சோலைப் புகும்புள்போல்
பாடி மகிழ்கிறாய்
புரிந்தசுக தென்றலெனப்
பாடி வருகிறாய்
ஊஞ்சலைப்போல் மனதுக்குள்
ஆடி வருகிறாய்
உற்சாகம் தேவசுகம்
கோடி தருகிறாய்..

அன்றாடம் புலருகிறக்
காலை யல்லவா
அழகொளிரும் பூமலரும்
சோலை அல்லவா
நின்றாடும் மனதுக்குள்
நேசம் அல்லவா
நேசயிறை நாயகனின்
பாசம் அல்லவா...

● ரத்னராஜு



# பேச்சியாயி

ஊரில் இருந்து என் சின்னக்கா பெயரில் தந்தி..

"ஸ்டார்ட் இம்மீடியட் பேச்சாயி இஸ் சீரியஸ்"

எனக்கு என்ன செய்வது? ஒன்றும் புரியவில்லை. உடனே கிளம்பிவிட்டேன். எப்படியும் தாம்பரத்தில் காலை பத்து மணிக்குள் பஸ் ஏறிவிட்டால் மாலை நான்கு மணிக் கெல்லாம்கும்பகோணம் சேர்ந்திடலாம். அங்கிருந்து முக்கால் மணி நேரத்தில் கபிஸ்தலத்தை அடைந்திடலாம். அதிகபட்சம் ஐந்து மணிக்கெல்லாம் வீட்டுக்குப் போய்விடலாம். தாம்பரத்தில் சரியாக ஒன்பதே முக்காலுக் கெல்லாம் திருவள்ளுவர் சூப்பர் டிலக்ஸில் ஏறிவிட்டேன். டிரைவர் சீட் பின் உள்ள வரிசையில் ஒரு இருக்கையில் அமர்ந்தேன். அந்தப் பக்கம்தான் வெயில் மதியத்துக்கு மேல் வரும். அதிக சூடு இருக்காது.எப்படியும் ஆறு மணி நேரம் அதில்தான் பயணம்.

பேச்சியாயி! யார் இது?

கிராமத்தில் எங்கள் தெருவில் கடைசி வீடு. ரொம்பச் சின்னது. இட்லி மற்றும் ஆப்பம் சுட்டு

விற்கும் பூங்காவணம் வீடுதான் அது. பூங்காவணம் எல்லா வற்றையும் சுட்டு, சட்னி குருமா செய்து ஒரு கூடையில் எடுத்துக் கொண்டு வடக்கே உள்ள குக்கிராமங்களில்போய் விற்று வருவாள். அவள் மகள்தான் பேச்சாயி, புருஷனிடம் வாழப் பிடிக்காமல் அம்மாவோடு வந்து விட்டாள். புருஷன் செம்ம குடிகாரன். வீட்டில் இட்லி, ஆப்பம் வியாபாரத்தை அவள் பார்த்துக் கொள்வாள். காலை எட்டு மணிக்கெல்லாம் பேச்சாயியின் இட்லி கடை வியாபாரம் முடிந்துவிடும். அதன்பின் தன் வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டால் பிறகு எங்கள் வீடுதான். என் அம்மா ஒன்பது பெற்றவள். ஐந்து தான் தங்கினோம். அம்மாவுக்கு சர்க்கரை நீர் வியாதி. அதனால் பேச்சாயிதான் வந்து வீட்டுவேலை செய்து கொடுக்கும்.

“அக்கா, துணியெல்லாம் எடுத்துப் போட்டாச்சா”

என்று கேட்டபடியே 501 பாரில் ஒரு கட்டியை நூல் கொண்டு நறுக்கி, நனைத்த துணியில் தேய்க்கத் தொடங்கிடும்.

“பேச்சாயி, வெற்றிலை போடமலேயே வேலையில் இறங்கிட்டியே?”

என அம்மா வெற்றிலைப் பெட்டியை நகரத்துவார்.

“கொஞ்ச துணிதானே முடிச்சிடறேன்”

வீட்டில் நான், அப்பா, அம்மா, பெரியண்ணன், சிண்ணன்ணன், சின்னக்கா ஆறு பேர்தான். பெரியண்ணன் எஃப் ஏ வரை படித்துள்ளார். சின்ணண்ணன் ஏழாம் வகுப்பிலும், சின்னக்கா ஒன்பதாம் வகுப்பிலும் படிக்கிறார்கள். எனக்கு நாலு வயதுதான். இன்னும் முடி கூட இறக்கவில்லை. ஒவ்வொரு வருடமும் ஏதாவது காரணமாய் தள்ளிப் போகிறது. பெரியக்காவுக்கு கல்யணம் ஆகிவிட்டது. பெரியத்தானுக்கு விமானப்படையில் வேலை; தாம்பரத்தில் இருக்கிறார்கள். துணியைக் காயப் போட்டபின் பேச்சாயி வெற்றிலை போட்டுக் கொண்டு தன் வீட்டுக்குப் போய் விடும். எங்க வீட்டில் புகையிலை கிடையாது. அதனால் தன் வீட்டில் போய் அதைப் போட்டுக் கொள்ளும்.

“நானும் வரேன்” னு

நான் அடம்பிடித்தால்,

“இப்ப வேணாம், சாயங்காலம் கடைக்கு போறப்ப வா” ன்னு சொல்லிட்டு போகும்.

நெல்லை ஊறப் போட்டு, இரவில் வேகவைக்கும். நெல் புழுங்க வைக்கயில் வரும் வாசம் இன்னும் நாசியிலேயே நிற்கிறது. கொட்டி வைத்து விட்டு, மறுநாள் காலை வெயில் வந்ததும் தோட்டப்பாயில் கிண்டி விட்டு காய வைப்பது பேச்சாயி வேலை. கோழி, காக்கா, ஆடு, மாடு எல்லாம் திங்காம பார்த்து ஒட்டுறதுதான் என் வேலை.

ரொம்பவும் இல்லை. ஒரு கலம் நெல்தான் ஒரு தடவைக்கு போடுவார்கள். ஒரு ரெண்டு மணி நேரமானதும் நெல்லையெல்லாம் கூம்பாச்சியாக குமித்து வைக்கும். பின் மீண்டும் பரப்பிவிடும். அவ்வப் போது கிண்டிவிடும். சில சமயம் காலால், சில சமயம் குனிந்துகையால் கிண்டிவிடும். மூன்று மணியளவில் ஒரு கை நெல் எடுத்து கையில் வைத்து திருகிப் பார்க்கும். சற்று நேரத்தில் கொஞ்சம் நெல்லை தரையில் வைத்து குதிங்காலால் குதி விட்டுப்பார்க்கும். நெல் பதமா காய்ந்திருக்கா, அரிசி இடியாமல் வருமா என்ற லேப் டெஸ்ட் அதுதான்.

நான்கு மணிக் கெல்லாம் நொண்டி மூப்பனார் மிஷினில் அரைக்க கொண்டு போகையில்

நானும் ஒட்டிக் கொண்டு போவேன். மிஷினில் அரிசி முன் பக்கமும், உமி பின் பக்கமுமாக வந்து விழும். முன் பக்கம் விழும் அரிசியை ஒரு கையால் பிடித்து, பின் ஊதிக் கொண்டே இரண்டு கையிலும் மாறி மாறி கொட்டி உமி இல்லாமல் என்னிடம் தரும்.

“நல்லா மின்னு முழுங்கு. அரையுங் கொறையுமா முழுங்காத”

சூடு தாங்காமல் ஒரு பேப்பரில் கொட்டி ஆற வைத்து தின்பேன். வாயில இடப்பக்கமோ வலப்பக்கமோ குரங்கு மாதிரி குறட்டில் அடக்கிக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமா தள்ளித் தள்ளி மென்று முழுங்குவேன். அரிசி சூடாக இருந்தாலும் ஊற வைத்தது போல ஈரமாகஇருக்கும். ஆனந்தமா மென்று சாப்பிடுவேன்.

அரிசியை தனியாக கூடையிலும், உமியை சாக்கிலும் கட்டி கூடையில் வைத்து எடுத்து வரும். இது போல எப்பவும் ஒட்டு பில்லாக அது கூடவே போவேன்.

அதே மாதிரி கடைக்குப் போகும் போதும் போவேன். ஆனால் இப்போது பேச்சாயியின் இடுப்பில் ஆரோகணம். வழியெல்லாம் லொடலொடன்னு ஏதாவது பேசிக் கொண்டே போவேன். எல்லாத்துக்கும் “உம்” கொட்டிக் கொண்டே வரும். அப்பப்ப என் முகத்தை ஒட்டு மொத்தமா வழித்து வாயில் வைத்து முத்தம் கொடுத்து

“என் ராஞ்ஜா” ங்கும். தவறாம நார்த்தவில்லை, ஆரஞ்சுவில்லை மிட்டாய் வாங்கித் தரும்.

எங்கள் ஊர் திரௌபதியம்மன் கோயிலில் தீமிதி திருவிழா ரொம்பப் பிரசித்தம். முப்பதுநாள் மகாபாரதக் கதை சொல்லி கடைசியில் தீமிதி. பேச்சாயிக்கு மூன்றாண்டு வேண்டுதல். தீக்குழியில் பேச்சாயி இறங்கியதுதான் தாமதம் நான் எட்டு கட்டையில்

“பேச்சாயிஞ்பேச்சாயிஞ்”

என்று கத்தி ஆர்ப்பாட்டம். தீமிதித்ததும் தீக்குழியிலிருந்து நேரே ஓடி வந்து என்னை பேச்சாயி வாரிக்கொள்ளும்..

இதுபோல நினைக்க நினைக்கத் திகட்டாத சம்பவங்கள் எத்தனை யெத்தனையோ. என் அம்மா இறந்தபின் என் சின்னக்கவுக்கு துணையாக பகலெல்லாம் எங்க வீட்டிலேயே இருக்கும்.

எனக்கும் பேச்சாயிக்குமான பந்தம் எனக்கும் என் அம்மாவுக்கும் இடையிலானதை விட வலிமையானது. அதனுடைய பாசம் எதனோடும் ஒப்பிட முடியாத ஒன்று. பேச்சாயி மூலம் எனக்கும் வெற்றிலை போடும் பழக்கம் ஒட்டிக் கொண்டது.

“படிக்கிற பிள்ளை வெத்தல போடக் கூடாது. நாக்கு தடிச்சிடும்”

என்று எவ்வளவோ சொல்லியும் நான் கேட்கவில்லை. வெற்றிலைப் பெட்டியை ஒளிய வைத்தெல்லாம் பார்த்தது; நான் விடவில்லை.

இன்று அது கைச்சீவல், கும்பகோணம் வெற்றிலை, பன்னீர்ப் புகையிலை என்று மாறி சென்னையிலும் தொடர்கிறது. பேச்சாயி நினைவாக என்றென்றும் என்னோடிருக்கும்.

போன வாரம்தான் கும்பகோணம் வந்திருந்தேன். என் மனைவிக்கு இரண்டாவது ஆண் குழந்தை பிறந்துள்ளது. என் மாமனார் வீட்டில்தான் எல்லாம் கவனித்துக் கொள்கிறார்கள். பேச்சாயியை அழைத்து வந்து குழந்தையை காட்டி அனுப்பி வைத்தேன். வெற்றிலை, ஏஆர்ஆர்சீவல், மைதீன் புகையிலை எல்லாம் வேண்டுமளவு வாங்கிக் கொடுத்தேன். முராரியில் தூத் பேடா, மிக்சர்

வாங்கிக் கொடுத்தேன்.

"நான் எங்க இதெல்லாம் சாப்பிடப் போறன். எல்லாம் சுத்தியிருக்கற குடி படைங்கதான் சாப்பிடப்போவுது"

என்றவாறே பையில் வைத்துக் கொண்டது. எங்கள் வீடு பின் பாதி இடிந்து சிதிலமாகிக் கிடக்கிறது. முன் பாதியில் தான் பேச்சாயி வாசம். உத்தரத்தில் பார்த்தால் ஒவ்வொன்றிலும் ஒரு ஏனை புடவையால் கட்டி, ஒரு குழந்தை தூங்கிக் கொண்டிருக்கும். சுற்றிலும் உள்ள வீட்டுப் பெண்கள்,

"பேச்சாயம்மா, இந்தா" என்று குழந்தைகளைக் கொடுத்து விட்டு வயல் வேலைக்கோ வேறு நிமித்தமாகவோ போய்விடுவார்கள்.

தன் குழந்தையாகப் பாவித்து என்னை வளர்த்தது. இப்போது என்னைப் போல பாவித்து இந்த குழந்தைகளை வளர்க்கிறது. மதிய உணவுக்காக பேருந்து நிறுத்திய போது கூட சாப்பிடப் பிடிக்காமல் ஒரு காஃபி மட்டும் சாப்பிட்டு விட்டு வந்து சீட்டில் உட்கார்ந்து விட்டேன்.

பேச்சாயி என்னை முழுமையாக ஆக்கிரமித்து இருந்தது. அம்மா வென்று அழைக்க அனைத்துத் தகுதியும் உள்ளது. அதைவிட சிறுவயதிலிருந்து பேச்சாயி என நான் கூப்பிடுவதையே செவி கொள்ளாமல் சந்தோஷமாகக் கேட்கும். அம்மா வென்றுதான் கூப்பிடவில்லை

"வாங்க போங்க"

என்று மரியாதையாகவாவது கூப்பிடலாமில்லையோ? அதுவும் இல்லை. "போ" "வா"; என ஒருமையில் தான் கூப்பிடுவேன்.

எனக்கென்னமோ பேச்சாயிக்காகவே என்னைப் பெற்றதாய் விட்டுச் சென்றது போலத் தோன்றுகிறது.

சில தாவரங்கள் சம்மந்தமே இல்லாத இடங்களில் இப்படித்தான் முளைத்து வளர்கின்றன போலும். வேர் பிடிக்க மண் உள்ளதா, வேர் உறிஞ்ச நீர் எங்கிருக்கிறது, இது யாருக்கு நிழல் தரப்போகிறது, யாருக்கு காய்த்து கனிதரப் போகிறது என்ற கேள்விகளோடு வளர்வதைபார்த்திருக்கிறோம். பெரும்பாலும் கோவில் மண்டபத்தின் மேலே பார்த்திருக்கிறோம். எந்த இலக்குமின்றி வளர்ந்து நிற்கும். வண்டி அனைக்கரை வந்து விட்டது. அங்கு வந்ததும் மனம் பரபரக்க ஆரம்பித்து விடும். இன்னும் சுமார் இருபத்தைந்து கிலோ மீட்டர்கள்தான் கும்பகோணம். லேசாக தூக்கம் வந்தது. எல்லாரும் இறங்கும் ஏற்பாட்டில் நான் விழித்துக் கொண்டேன். கடைசி ஆளாகத்தான் இறங்கினேன். எதிரே திருவையாறு பேருந்து நின்றிருந்தது. எப்போ கிளம்பினாலும் சரியென்று அதில் ஏறி உட்கார்ந்து கொண்டேன்.

மனம் பலவித உணர்ச்சிகளில் குழம்பிக் கிடக்கிறது. இதைவிட பெரியது, ஊரில் இறங்கி நடந்து வீடுவரை செல்வது. எப்படியோ ஊர் வந்து சேர்ந்து விட்டேன். வேகவேகமாக நடந்து வீட்டுக்கும் வந்து விட்டேன்.

வீட்டின் வெளியே சின்னக்கா அக்கம் பக்கத்து வீட்டு ஜனங்கள் என நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

சின்னக்காவிடம் "எப்படியிருக்கு" என்றேன்.

"எனக்கென்னவோ அதன் காலம் முடிஞ்சிட்டதாகவே படுதுடா"

என அக்காவின் பதில்,

“நீ வர்ரதுக்காகவே இன்னும் இழுத்துக்கிட்டு இருக்கு”

வீட்டினுள் சென்றேன். பேச்சாயியை கிடத்தியிருந்தார்கள். சுவாசத்தில் சளி சேர்ந்து “சொர்..சொர்” என்று பெரிதாக சத்தம்வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. இதை சேட்டுமுகம் என்று சொல்வார்கள். சுவாசம் நிற்பதற்கான கடைசி போராட்டம். நான் கீழே தலை மாட்டில் உட்கார்ந்தேன். சின்னக்காவும் உட்கார்ந்து கொண்டு,

“பேச்சாயி, தம்பி வந்துட்டான் பாரு”

என்று கொஞ்சம் பெரிய குரலில் கூறியது.

நான் நன்றாக குனிந்து அதன் காதருகே போய்

“பேச்சாயி.. இதோ பார் நான் வந்திட்டேன். உன்னோட செல்ல ராஜா வந்திட்டேன்”.

தொடர்ந்து கத்திக்கொண்டே இருந்தேன். ஒருகட்டத்தில் தொண்டை அடைத்து எனக்கு குரல் கம்மியது. சின்னக்காவும் கூடவே

“பேச்சாயி.. பேச்சாயி..”

என கத்திக்கொண்டே இருந்தது. பேச்சாயி தலையை மடியில் எடுத்து வைத்துக் கொள்ளலா மென்றால் தயக்கமாகவும் இருந்தது. மீண்டும் பேச்சாயி காதில் சத்தமாக பேச ஆரம்பித்தேன்.

ஒருகணம் நிறுத்தி கவனிப்பது போல தோன்றியது. பின் இரண்டு சுவாசம் வாங்கியபின் நின்று விட்டது. தட்டிக் கொடுத்தெல்லாம் பார்த்து விட்டோம். அவ்வளவுதான் போலும். எல்லாரும்

“நீ வரனும், உன் குரல் கேட்கனும்னு இருந்திருக்கு. கேட்டதும் போயிடுச்சி” என்றார்கள்.

இந்த அறிவியல் வளர்ந்த நூற்றாண்டில் இதை எப்படி நம்புவது என்றுதான் தெரியவில்லை.

● **சங்கர்**

# இராவுணவு

இராவுணவு முடிந்து
மறுநாள் எங்கள்
பாவங்களோடு
அறையப்பட்டாய் சிலுவையில்
மூன்றாம் நாள்
உயிர்தெழுவேன் என்றாய்
இதோ இன்னும் இன்றும்
காத்துக்கொண்டிருக்கிறோம்
மிச்ச பாவங்களையும்
உன் தலையில் சுமத்த

❒

# வறுமை

பசிக்கு கத்தியபடியே
காலைசுற்றிய பூனையை
மடியில்கிடத்தி
அதன் பசித்த
வயிற்றை தடவிக்கொடுக்கிறேன்
மெல்ல மெல்ல
கண்களை திறந்தும் மூடியும்
கடைசியில் பசியோடவே
உறங்கிவிடுகிறது
என் மகளை போலவே

# மு.முபாரக் கவிதைகள்



ஒரு வேளை உணவிட்டதற்காக
ஐந்து வருடமாய் வெயிலிலும்
மழையிலும் காவல் காக்கிறது..
நாயொன்று,
ஓட்டுப்போட்ட மக்களை
மறந்த,
அரசியல்வாதியின் வீட்டு வாசலில்!

❒

அவசரமாய்
புறப்பட்டு வந்ததில்
இ பாஸ்
எடுக்கவில்லையென
எல்லையில்
திருப்பியனுப்பபட்ட
அவனுக்காக,
ஊரில் காத்திருக்கிறது..
“அம்மா”வின் பிணம்!

❒

சாலையோரத்தில்
தன் உடலை
சாட்டையால் அடித்து காயப்படுத்திக்கொண்டவன்,
சிந்திய ரத்தத்துளிகள் கருணையாக்கிக் கொள்கிறது
காசாக்கிக் கொள்கிறது
கண்ணீராக்கி
கொள்கிறது,
அவனைக் கடந்து வீடு செல்லும்
நான்
கவிதையாக்கிக் கொள்கிறேன்..
குருதி படிந்த என் வெள்ளைக்காகிதத்தில்!

அலைபேசி பழுதடைந்த நாளில்
பூந்தோட்டத்தில்
வண்ணத்துப்பூச்சி,
எத்தனை அழகு!

❒

பக்கமாய் விமானம் பறந்து
போகும் போதெல்லாம்
வீட்டுக்குள்ளிருந்து
வாசல் ஓடிவந்து ஆகாயம் பார்க்கும்
ஒவ்வொருவருக்குள்ளும்
ஒளிந்திருக்கிறது..குழந்தை மனது!

❒

மகனின் பெயர்
நாளிதழ்களில்
ஏதோ ஒரு மூலையில்
சிறிதாக வந்தாலே கொண்டாடும்
அம்மா,
மரணத்தில்
தலைப்பு செய்தியாகிய மகன்,

❒

நெரிசல் மிகுந்த சாலையில்
வாகனமொன்றில் அடிபட்டு
உயிருக்கு போராடிக்கொண்டிருந்த
நாய்க்குட்டி,
பார்த்தும் பார்க்காதது கடந்து
வீட்டுக்குள் நுழையும் போது
விரலை பிளேடால்
கிழித்துக் கொண்டு அழும்
மகளிடமிருந்து
உதிரும் ஒவ்வொருதுளி ரத்தமும்
அழ வைக்கிறது..

இப்போது
நாய்க்குட்டிக்கும் சேர்த்து!

❒

தவறி
விழுந்து விட்ட
குழந்தையை மீட்க,
நீச்சல் தெரியாமலே
குதித்து விட்ட
தாயினுடைய அன்பின்
ஆழம்
அதிகமாகத் தான் இருந்தது..
கிணற்றின் ஆழத்தை
விட!

❒

ஞாபக மறதி என அப்பாவின்
வார்த்தைகளால்
பதம் பார்க்கப்படும் அம்மா,,
இதுவரை மறந்ததில்லை
வளர்க்கும்
நூற்றுக்கணக்கான
ஆட்டுக்குட்டிகளின் பெயரை!

❒

யாரென்று தெரியவில்லை
எப்படியென்று
அறியவில்லை
எந்த ஊர் என
கேட்கவில்லை..
ஸிமிறி
என்ற ஒற்றை வார்த்தையில்
கடந்து கொண்டிருக்கிறோம்..
ஒவ்வொரு மரணத்தையும்!

**பா.சிவகுமார்**



*திடீரென உருவத்தில்*
*சிறிதான நிலா!*
*விண்வெளி ஆராய்ச்சியாளர்கள்*
*நீண்ட ஆராய்ச்சிக்குப் பின் விளக்கம்:*
*பூமி முழுவதும்*
*நுண்மியின் தாக்குதல்;*
*தற்காப்பிற்காக சமூக விலகலை*
*தவறாமல் கடைபிடிக்கிறது*
*நிலா!*

❒

*ஆசைகளை விலக்குவது எப்படி?*
*என்ற தலைப்பில்*
*புலனத்திலும் முகநூலிலும்*
*பதிவிட்டார் புத்தர்!*

*நொடிக்கொருதரம்*
*முகநூலுக்கும் புலனத்தையும்*
*திறந்து மூடி*
*மூடித் திறந்து*
*லைக்குகள் எண்ணிக்கையை*
*ஆசையுடன்*
*பார்த்துக் கொண்டிருந்தார்!*

❒

# காகம்

அன்னதானமிட்டு
பகிர்ந்துண்ணும் மனிதர்களுக்கெல்லாம்
காகங்களின் சாயல்!

ஒட்டுண்ணி, சாறுண்ணி
மனிதர்களை விட
அனைத்துண்ணி காகங்கள்
என்றும் ஒருபடி மேல்தான்!

கடவுளுக்கான படையலில்
கடவுள் படைப்பில்
காகத்திற்கே முதல் படையல்!

கூட்டமாக வந்து உணவருந்தி
பொதுவுடமை
தத்துவத்தைப் பறைசாற்றி
கரைந்து விட்டு பறக்கின்றன காகங்கள்!
ஒவ்வொரு கரைதலிலும்
நன்றி எனும் குறுஞ்செய்தி
ஒட்டியிருக்கிறது

உலகில் சம்பளம் வாங்காத
துப்புரவுப் பணியாளர்களை
நாம் பூச்சொரிந்து போற்றுவதில்லை

கரைகின்ற காலத்தில்
கரையும் காகங்களை
பெரும்பாலானோர்
கண்டு கொள்வதில்லை

ஒட்டாது வாழும் மனிதர்களுக்கு
கூடி வாழும் காகங்கள்
என்றும் அதிசயம் தான்!

# ஹைக்கூ கவிதைகள்

தேநீர் அருந்திட ஆசைதான்
கையில் காசில்லை
ஏடிஎம் வாசல் காவலாளி!

❐

கைகழுவி வாய்மூடித் தனித்திருக்கையில்
ஊர்வலமாகச் செல்கின்றன
ஆசைகள்!

❐

எழுதாத
காகிதத்தில்
எத்தனையோ..
கவிதைகள்!



● கீத்தா பரமானந்தன்



# போராட்டம்

பறவைகளின் பூபாளம், வண்டுகளின் ரீங்காரம், முகைவெடித்த மலர்களின் வாசனையெனயன்னல் ஊடே தவழ்ந்து வந்த இதற்கையின் சுவாசம், விடியலுக்குக் கட்டியம் கூறியது. விடியல் யாருக்காகவும் காத்திருப்பதில்லையே ஓய்வற்ற உழைப்பாளியான இயற்கையும், கடமை தவறாத தொழிலாழியாய் கதிரவனும் வந்து,உலகை எழுப்பி விடுவார்களே, நாம் ஒவ்வொரு முறை விழும்போதும், எழுவதற்கு இயற்கை தானே பாடத்தைக் கற்றுத்தருகிறது.

இல்லாவிட்டால் வீழ்ந்தே கிடப்போம்.காலம் தன் கடமையை சரியாகவே செய்கிறது.நாம் நம் மன ஓட்டதிற்குப் பொருத்தமாய், நேரம் ஓடுவதாயும், நேரமே போகவில்லை, எனவும் முட்டாள்களாய்ப் புலம்புகிறோம். இதோ நேரக் கணிப்பின் படி இத்தனை மன அழுத்தங்களையும் தூக்கிப்போட்டு விட்டு, ஒரு அமைதியான தேவதையைப் போல, தன் கடமையைச் செய்யப் புறப்பட்டு விட்டாளே நிலா.

அவள் முகத்தில் எந்தவித சலனமும் இல்லை, அவளைப் பார்க்கும் போது எனக்குத்தான் மனம் வெடித்து விடும்போல இருக்கிறது. எப்போதும் அன்றலர்ந்த ரோசாவாய் வளையவருவபவள் நிலா,கண்கள் நாவற்பழம்போல, ஒல்லியான உடல்வாகும், கூரான மெல்லிய மூக்கும், கரு நாகம்போல, அடர்த்தியான நீண்ட கூந்தலும், சிரிக்கும் போது முத்துக்களாய்க் கவர்ந்திழுக்கும் பல்வரிசையும், அவளைப் பார்ப்பவர்களை மீண்டும் திரும்பிப் பார்க்க வைக்கும் அழகிய மங்கை.

நிலா, எங்களுக்கு ஒரே மகள். நாங்கள் புலம்பெயர்ந்து ஜெர்மனிக்கு வந்தபின்பே நிலா பிறந்தாள்.செல்லப் பெண்ணாக வளையவந்தலும் பெற்றோரின் விருப்புகளினை ஏற்றே வளர்ந்து வந்தாள்.

துருதுருவென அலையும் கண்கள் எப்போதும் ஏதோ ஒரு தேடலில் இருக்கும். மெதுவாக ஒரு பாடலை முணுமுணுத்தபடியே தான் தன் காரியங்களைச் செய்வாள், படிக்கும் போது கூட அவள் அறையில் மெதுவாகப் பாடல் ஒலித்தபடியிருக்கும். அந்த நேரங்களில் ஏசியிருக்கிறேன், “ஒன்றில் பாட்டுக்கேள், இல்லாவிட்டால் படி” என்னும் போது அம்மா, எனக்கு பாட்டுக் கேட்டுக்கொண்டு படிக்கமுடியும் என்பாள். அப்படியே படித்து ஒரு வைத்தியராகியும் விட்டாள்.அமைதியான சுபாவத்திற்குள்ளும் தேடல் கொண்ட மனமும் கண்களும், இப்போது வெறுமை கொண்டு கிடப்பதற்கு நாமே காரணமாகி விட்டோமே, என எண்ணியெண்ணி, நானு தகப்பன் சிவமும், வாழ்க்கையைக் கழித்துக் கொண்டு இருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மறுப்புச் சொல்லாமல் இந்த நாட்டிலும் வளர்ந்தபெண் என்பதால் அவள் எதிர்காலத்தை நாம் குழிதோண்டிப் புதைத்துவிட்டோம்.

எங்கோ ஓரிடத்தில் இவள் மறுப்பைச் சொல்லியிருந்தால், தன் வாழ்வைக் காப்பாற்றி இருந்திருப்பாளோ? நாமும் கொஞ்சம் நிதானித்திருக்கலாமோ? இப்படி இதையே தினமும் பிரணவம் மந்திரம் போல மனதுள் சொல்லிக் கொண்டிருப்பதே வேலையாகி விட்டது, ஆனால் பலன் என்ன அவளுடன் படித்த பிள்ளைகளெல்லாம் சிட்டுக் குருவிகளாய் பறந்து திரியும் போது இவள் மட்டும் இறக்கை ஒடிந்த பறவை போலானாளே.

நிலாவிற்கு பொருளாதாரத்திலோ வசதியிலோ எதுவித பாதிப்பும் இருக்காது’ ஆனால்மனம், கீறல் விழுந்த கண்ணாடிதான்.கூரிய ஆணிகொண்டு கீறியவன் எந்தவித மன

உழைச்சலோ சஞ்சலமோ இன்றி உலாவருகிறான். பாழாய்ப் போன நம் சமுதாயமும் இதற்கு ஒருவகையில் காரணம். பெண்ணையே தப்பான கண்ணோட்டத்தில் இன்னும் எத்தனை காலத்திற்குத்தான் பார்க்கப் போகிறார்கள்?இந்த வசதியை ஆண்கள் பயன்படுத்தப் போகிறார்கள்?அதனால் தானே கிரியின் உல்லாசவாழ்வு இடையூறின்றித் தொடர்கிறது. அவன் ஆண் எதுவும் செய்யலாம் என்னும் திமிரான மனோபாவத்துடன் கொஞ்சமும் வெட்கமோ, பரிதாபமோ இன்றி நடக்கிறான்.

இந்தக் காலத்திலும் பெண்ணை ஒருத்தன் ஏமாற்றி விட்டானே, என்னும் கொதிப்பில்லாமல்,யுஎல்லாம் கொஞ்ச நாளில் மாறியிருக்கும் அதுக்குள்ள தங்கடை கையாலேயே கண்ணைக் குத்திப்போட்டினம்டே, என்று பேசுகிறார்களாம், ஊர்ச்சனம்.இந்தக் கேடுகெட்ட சமுதாயத்திற்காய்ப் பயந்து குழந்தையின் கால்களை மனதை முடக்கியிருக்கிறோம். முடக்குகிறோம். பாவங்கள் பிள்ளைகள் எல்லோருமே, மனச்சாட்சியே அற்ற மனிதருக்காய் பயந்து என்னத்தை சாதித்தோம்?என இப்போது குமுறுவதுதான் மிச்சம். நரம்பில்லாத நாக்கு எல்லாப் பக்கமும் சுழன்றபடிதான் தொடருமென எண்ணிய போது ஒரு நீண்ட பெருமூச்சு தானாகவே வெளியேறியது. நினைவலைகளும் நிற்காது படமாக ஓடியது.

கிரி பார்க்க அழகான தோற்றத்துடன் எப்போதும் சிரிக்கும் சுபாவமும் படித்து நல்ல தொழில், கொபனிக்கார், நல்ல வசதியெனப் பலரும் புகழ்ந்ததைக் கேட்டும், அவன் வீட்டுக்குப் போய் கலியாணப்பேச்சு பேசும்போது, அவன் வீட்டில் அவன் பல நிகழ்வுகளில் வெற்றியீட்டிய போது எடுத்த புகைப்படங்களையும், பார்த்து அவன் நல்ல பழக்கவழக்கம் உள்ளவனென எண்ணியே,நம் இனம் மொழி,பிள்ளைக்குத் தோதானவன் என நினைத்துப் பேசி திருமணத்தை முடித்தோம். முடிந்த பின்தானே மெல்ல மெல்லக் கிணற்றுக்குள் இருந்த பூதம் வெளியே வந்தது.

கிரிக்கு வேற்றுநாட்டுப் பெண்நண்பி சகவாசம் இருந்ததும்,அதைப் பெற்றோர் மறைத்து விட்டதும்,அது நட்போடு மட்டும் இருக்கவில்லை,அவர்களுக்கு ஒரு குழந்தை இருப்பதும் அந்தப்பெண் இவனைத் தற்காலப் பாணியில் ஒரு நண்பனாக மட்டுமே கருதி வாழ்வதும்,அவளுக்கு முன்னர் திருமணமாகி இப்போது அவள் தனித்திருப்பது, இவர்களுக்குப் புதுக்கதையே, அவள் கிரிக்கு திருமணம் முடிந்தபின்னும் கிரியோடு சுற்றுவதும், நிலாவின் தொழில்முறை அடிக்கடி விடுப்பெடுக்க முடியாததால், “சபர்ணா” என்கிற அந்தப் பெண்ணே அவனுடன் கூடப்போய் வருவதையும் அறிந்தபோது அவர்கள் நொருங்கிப் போய்விட்டார்கள்.

அவர்கள் அறியுமுன்னமே நிலா, இதைப்பற்றி அறிந்து அவனுடன் விவாதித்திருக்கிறாள். கிரி அவளை ஒரு பொருட்டாக எண்ணாமல், “நீ ஐரோப்பாவில் பிறந்து வளர்ந்தவள் தானே, இதைப்போய் பெரிதாகக் கதைக்கிறாய்” என அவளை மதிக்காது உதாசீனம்செய்து தொடர்ந்து ஒன்றாக வேறு இடங்களில் தங்கிவந்ததை அறிந்து, இருவருக்கும் இடையில் பிரச்சனைகள், தர்க்கங்கள் ஏற்பட்டு அறைக்கு வெளியே உரத்தகுரல்கள் கேட்டதைப் பற்றி நிலாவிடம், என்ன பிரச்சனை என்று பலமுறை விசாரித்தபோது நிலா சரியான பதில் சொல்லாமல் மழுப்பிவிட்டாள், ஆனால் ஒருமுறை கிரி நிலாவிற்குக் கன்னத்தில் அறைந்து அவள் கண்களும் முகமும் வீங்கிய பின்னரே அவள் எல்லாவற்றையும் கூறினாள்.

பதறித்துடித்த நாம் கிரியின் வீட்டுக்குழ் அலறியடித்துக் கொண்டு ஓடிப்போய் நடந்தவற்றைக் கூறித்திட்டியபோது, அவர்கள் மகனுக்கு வேற்றுநாட்டுப் பெண்சினேகிதி இருப்பதை அறிந்திருக்கிறோம். ஆனால் அவனுக்குக் குழந்தை இருப்பது எமக்குத் தெரியாது, கிரியின் சம்மதத்துடனே தான் திருமணம் பேசினோம். அவன் மறுக்கவும் இல்லை, இதைப்பற்றி எதும் பேசவும் இல்லை, நாமும் திருமணம் முடிந்தால் அதை மறந்து விடுவான் என்றுதானே நம்பியிருந்தோம். அந்தப் பெண்ணும் எந்தப்பிரச்சனையும் எடுக்கவில்லையே, எங்களையும் ஏமாற்றி முட்டாள்கள் ஆக்கிவிட்டானே,எனத் துடித்தார்கள். அவர்களும் அவமானத்தில் தலைகுனிந்து நின்றார்கள்.இவர்களால் அவர்களைத் திட்டிவிட்டு வரமுடிந்ததே தவிர வேறெதுவும் முடியவில்லை. முள்ளில் விழுந்த சேலையானைது இவர்கள் மகளின் வாழ்வல்லவா?

“பாவி,நல்ல தொழிலில் இருக்கிறாய் உனக்கு வேறு பெண்ணில் விருப்பமிருந்தால் தைரியமாக அவளை மணம் முடித்திருக்கலா,ஏன் அப்பாவிப்பெண் வாழ்க்கையில் மண்ணை அள்ளிப்போட்டாய்,“ என இவர்கள் அவனோடு சண்டை பிடித்தார்கள் “அவன் அவள் என்னைத் திருமணம் செய்யவிரும்பவில்லை. நானும் அதை விரும்பவில்லை,யுநாம் எப்போதும் நண்பர்களாகவே இருக்கிறோம், இருப்போம், குழந்தையை அவள் விரும்பியே பெற்றுக் கொண்டாள், அவளுக்கு ஒரு ஆசியக் குழந்தையைப் பெற்று வளர்க்க ஆசை, அதனால் அவளே அதை வளர்த்தும் கொள்வாள். உங்களுக்கு இதில் என்ன பிரச்சனை என்றான்“. எவ்வித உறுத்தலுமின்றி.

அவர்களுக்கு அவன் கழுத்தை நெரித்துக் கொல்லவேண்டுபோல ஆத்திரம் வந்தாலும், எதுவும் செய்ய முடியாது, தம் தலையில் தாமே கல்லைப் போட்டதுடன், மட்டுமல்லாமல் ம்ஒரு சிட்டுக் குருவியையும் அல்லவா வதைத்திருக்கிறோமென, தலையில் அடித்துக் கத்தினார்கள். அவர்களால் அன்று செய்ய முடிந்தது, நிலாவுடன் பேசி,அவள் சம்மதத்துடன் அவனை வீட்டைவிட்டு வெளியேற்றுவது மட்டுமே, அவனுக்கு நவீன நாகரிக வாழ்க்கமுறை சரியாக இருக்கலாம், ஆனால் நிலாவின் மனம் ஏற்றுக் கொள்ளமுடியாததாலேயே அவர்களுக்குள் பிரச்சனைகள் தோன்றியிருக்கிறது, வேண்டாம் அவளுக்கு இந்த நரகவாழ்வு. பொய்வாழ்க்கை வாழ்ந்து நித்தம் மனவேதனைப்படுவதிலும் தனியே நிம்மதியாய் இருக்கட்டும்.

ஒருமுறை நாம் முடிவெடுத்து ஒருதவறும் செய்யாதவளுக்கு மாறாதவலியை ஏற்படுத்திவிட்டோம். இனி அவளே தன் வாழ்வின் முடிவை எடுக்கட்டுமென விட்டுவிட்டோம். அவள் புழுவாக அவனை உதறிவிட்டாள். விடுதலையும் பெற்றுவிட்டாள். இப்போது ஒரு ஞானியைப் போல நடக்கிறாள் எதிலும் பற்றில்லை, தாமரையிலைத் தண்ணீராய் தொடர்கிறாள். அவர்களாலும் எதையும் பேசவோ கருத்துக் கூறவோ முடியாது, இடையில் ஒர்திரை விழுந்துவிட்டது. அது தவறு செய்துவிட்டோமெனும் குற்றஉணர்வால் வந்ததே, தவறைச்செய்த கிரி இப்போதும் நன்றாகவே சுற்றித்திரிகிறான்.

தவறேசெய்யாத நிலா தண்டனைக் குற்றவாளி போல, மவர்களின் பரிதாபப் பார்வையும், வாழ்க்கையைக் காப்பாற்றத் தெரியாதவள் என்கின்ற ஏளனமான பேச்சையும் கேட்டுக் கொண்டு இருக்கிறாள்.எல்லோரும் எல்லாம் பேசலாம் தேனக்கு வந்தால் தானே தெரியும் தலையிடியும் காச்சலும்மே. நிலா நல்ல மருத்துவர் என்று பெயர் எடுத்துவிட்டாள். அவள் தொழிலில் தன்னைத் தன் மனத்தின் வடுக்களைக் கரைத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால் அவளைப் பார்க்கும்போது, நமக்குப் பின் அவளுக்கு யார் மன ஆறுதலைத் தரப்போகிறார்கள் என நமக்குத்தான் மனம் அனலாய்க் கொதிக்கிறது.

“காலம் ஒரு அருமருந்து, “அது எந்தப் புண்ணையும் மாற்றிவிடும். அது நிலாவின் மனப்புண்ணும் ஓர்நாள் மாற்றும். அதுவரை பொறுத்திருப்போம். என எண்ணியே நாட்களைக் கழித்தாலும் வேதனைமாறாது தொடர்கிறது. நம் சமுதாயம் மருந்துபோட்டு ஒத்தடம் கொடுக்காவிட்டாலும், குத்தி ரணமாக்காது விட்டால் அதுவே போதும். என் குழந்தையும் மனம்விட்டுச் சிரிக்கும் ஓர்நாள் வரும். வரவேண்டும் இறைவா என மன்றாடியபடி, நிலா போவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தந்தை என்னைப்போல் வெளிப்படையாகக் கண்ணீர் வடிக்காவிட்டலும், உள்ளுக்குள் துடிக்கிறார்.நினைவின் வலியாய்,அவள் கன்னத்தில் கண்ணீர் கோடு வரைந்தது.



# ஆதவன்

ஆதவன், நோர்வேக்கு வந்துவாழும் ஈழத்தமிழர்களின் மூன்றாவது பரம்பரையைச்சார்ந்தவன். இங்கு அனேகமாகத் தமிழ்மொழியை மறந்து கொண்டிருக்கும் இளையவர்க்கத்தினர்களுக்கு எதிர்மறைவான ஒரெடுத்துக்காட்டாக வாழ்பவன் இவன். நன்றாகத் தமிழ்மொழியில் உரையாடுபவன். இதற்குக் காரணமானவர் தாயார்தான். இவனின் தம்பியும், தங்கையும்கூட தமிழில் எழுதவும் பேசவும் தெரிந்தவர்கள். தந்தையார்மட்டும் தமிழில்பேசுவதை நிறுத்திவிட்டார். வீட்டிற்கூட நொஸ்க் மொழியில்தான் உரையாடுவார்.

பணமீட்டுவதிலையே கண்ணும் கருத்துமாக இருக்கின்றாரேயொழிய தமது, மூன்று பிள்ளைகளுக்கும் தமிழைக் கற்றுக்கொடுக்க நினைக்கவில்லை.

தியாகு, பெரும்வர்த்தகர். இங்கு விற்பனைக்குவரும் வீடுகளை வாங்கித்திருத்தி நவீனமயப்படுத்தி, முகவர்கள்மூலம் விற்பாதைத் தொழிலாகக் கொண்டவர். இவரின் தந்தையார் செய்துவந்த இத்தொழிலைக் கையேற்ற தியாகு, தனது மூத்தமகனான ஆதவனுக்கும் இந்தத்தொழிலைக் கற்றுக்கொடுத்து, அதைமேலும் விருத்திசெய்யும்நோக்கில் அவனை வீட்டுக்கட்டுமானப்படிப்பை மேற்கொள்ளவைத்து, அதிற்பட்டமும்பெற உதவியவியவர்.

வேலைதேடிவந்த வெளிநாட்டவர்களில் கட்டுமானவேலைகள் தெரிந்தவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு உதவிகள்புரிந்து தங்குமிடவசதிகள் செய்துகொடுத்து, அன்போடுபேசிப்பழகித் தனது நிறுவனத்தில் வேலைபழகுபவர்கள் என்றுநியமன அத்தாட்சிப்பத்திரமும் கொடுத்து, அற்பசம்பளத்தோடு அவர்களிடம் பன்முகப்பட்ட பாரியவேலைகளைசசுமத்தி, திறம்படச்செய்யவைத்து பெரும்லாபத்தைச் சம்பாதித்துக்கொள்ளும் அவரின்பேராசை ஆதவனுக்கு நியாயமான செயலாகப்படவில்லை. அவன் தனக்குள் முணங்கிக்கொள்வான்.

அவனின், கற்கைத்திறனால் சீர்செய்துவிற்கப்படும் வீடுகளைப் பொறுப்பேற்று விற்பதற்கு வெகுவிருப்போடு தரகர்கள் முன்வந்தார்கள். தொழில் வேகமாகவே முன்னேறியசமையம் ஆதவனின் அழகாகன கட்டிளம் உடலில் ஆசைகொண்ட போலாந்து தேசத்து பேரிழம் அழகியான மாரீயா என்னும் தொழிலாளி ஆதவனோடு நெருங்கிப்பேசி நட்பைவளர்த்துக் கொள்ளுகின்றாள்.

பெரும் கோடீஸ்வரனான அவன், ஒரு முன்மாதியான மாறுபட்ட சிந்தனையுடையவன். தொழிலை வாங்குபவனாகமட்டும் இருக்காது தன்னையுமொரு தொழிலாளனாக்கி, அவர்களோடு இணைந்துபழகி சகலவேலைகளையும் செய்துவந்தான். ஓய்வுநேரங்களில் தொழிலாழர்களின் நலன்களை விசாரிப்பான். அவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிவான். தன்னால்முடிந்தவரை அவற்றைத் தீர்த்துவைப்பான்.

உணவுண்ணும்போதுகூட அவர்களோடு சேர்ந்தமர்ந்து, பங்கிட்டுப்பரிமாறி உண்பதை வழக்கமாக்கிக்கொண்டான். முழுமையாகச் சொல்லுமிடத்து ஆதவன் தொழிலாழளர்களை ஆதரித்து மனிதாபிமானத்தோடு செயற்படும் முதலாளியாவான். தந்தையாருக்கு எதிர்விரோதமான செயற்பாடுடைய இவனை யாவரும்விரும்பினர்.

ஒருநாள் மாரீயாவோடு பேசிக்கொண்டிருக்கும்போது, உனது சேக்ஸ்பாய்க்யு உடலைக்கட்டித் தழுவியே, முத்தங்கள்சொரிய மனந்துடிக்கின்றது. ஒரேயொருமுறை முத்தம்தரட்டுமா..யு என்று குறும்புத்தனமாகக் கேட்டவள், பலந்தமாக அதைச்செய்தேவிட்டாள்.

ஏழைப்பெண்ணான அவளின், சுவாசத்தின் உஸ்ணத்தால் ஆதவன் உருகிவிட்டான். வாலிபவயதில் ஏழ்மை வரவேகூடாது. ஆசைகளின் ஏக்கங்கள் தாங்கமுடியாத தண்டனையாகிவிடும். எதிர்காலமென்ற கற்பனைச்சிந்தனைகள் வெறும்சூனியங்களாகிப் போவதாற்றான் பாலியவயதுத் தற்கொலைகள் தொடர்கின்றன. இவளுக்கு என்னாலான் உதவிகளைச் செய்யவேண்டும். செய்வனென்ற சபதத்தைத் தனக்குள் அவனெடுத்துக்கொண்டான்.

வீடுகளைவாங்கவரும் தனவந்தர்களிற்சிலபேர் வரவேற்பறையின் சுவர்களில் சித்திரங்கள் வரைந்திருந்தால் வெகுநன்றாக இருக்குமெ ன்றதொரு அபிப்பிராயத்தை முன்வைப்பதால், தியாகு

தேடித்திரிந்து கொண்டுவந்து தமது நிறுவனத்தில் இணத்துக்கொண்ட ஓவியரானவள்தான் இந்த மாரீயா என்ற தங்கச்சிலை போன்றவள்.

அற்புதமான ஓவியங்களை அவள் வீடுகளுள் வரைந்தாள். தியாகு அவற்றையெல்லாம் பார்த்துத்தனக்குள் வியந்துகொள்வார். அவற்றை முகவர்களுக்குச் சுட்டிக்காட்டி, விலைமதிப்பைக் கூட்டியேவழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்வார்.

ஒருதடவை மாரீயா அந்த மாளிகைபோன்ற வீட்டுச்சுவரில் வரைந்திருந்த பாரியமிகவும் நேர்த்தியான ஓவியத்தைக் கண்டதும் பெரிதும்மகிழ்ந்த தியாகு, ஆதவனையழைத்து காண்பித்தார்.

வேகமாகப்பாய்ந்து ஓடியா குதிரையொன்றை மறிதேயடக்கும் ஆண்மைபீறிட்ட கட்டழகன் ஒருவனையே அந்தச்சுவரில் அவளன்று வரைந்திருந்திருந்தாள். வியப்புமேலீட்டால் மகிழ்தவர் ஜேவளுக்கு விலையுயர்ந்த பரிசொன்றை நீவங்கிக்கொடு.யு என்று, மாகனுக்கு உத்தரவுபோட்டுவிட்டு அங்கிருந்து தியாகர் அகன்றார்.

அவள்தீட்டிய அந்த ஓவியத்தில்தெரியும் இளைஞனின்முகம் ஆதவனுடையது என்பதை அறிந்துகொள்ள அவருக்கு அவகாசம் இருக்கவில்லை. வெளவேறு வீடுகளில் நடைபெறும் வேலைகளை அவதானிக்கும் நோக்கோடு தனது உதவியாளனை உரத்துக்கூப்பிட்டவாறு விரைந்தார்.

ஆதவனுக்குத் தந்தையார் செய்யும் பாவச்செயல்களைப் பிடிப்பதில்லை. தொளிலாழர்களிடம் அளவுக்குமீறியநேரம் வேலைகஇளாங்கிவிட்டு நாள்கூலியே கொடுப்பார். அவன் அந்த முறைமையைமாற்றி, மணித்தியாலம் இவ்வளவென்று தீர்மானித்துக் கொடுக்கவே, இதனாலேற்பட்ட தற்கவாதம் முற்றியதால் தந்தையும் மகனும் தங்களின் பேச்சுவார்த்தைகளைக் குறைத்துக்கொண்டனர்.

தொழிலாளர்களோடு இணைந்து ஆதவனும் வேலைசெய்வதையும், அவர்களோடு நண்பர்கள்போன்று பழகுவதையும் தந்தையார் கண்டித்தபோதும், அவனின்போக்கை மாற்றத்தெண்டித்தபோதும், அவன் தனது இரக்கமிகு நோகிக்கிலிருந்து விலகுவதாயில்லை.

ஊேன்ரையிளமையும் வடிவானதோற்றமும் கெட்டுப்போகின்றது. உனக்கென்ன பயித்தியமா பிடித்திருக்கு. வேலைக்காரர்களோடை சேர்ந்து வெயிலிலைநிண்டு கஸ்டப்படுகிறாய். உன்ரை அந்தஸ்த்தென்ன, குடும்பமானமென்ன சுயமதிப்பென்ன, நீ நடந்துகொள்ளுகின்ற விதமென்ன. எடநீயொருகோடீஸ்வரனடா.

எனக்குமட்டுமில்லை உன்னுடைய கொம்மாவுக்கும் உன்னைப் பிடிக்கவில்லை. அவசரியாகக் கவலைப்படுகிறா. உதெல்லாத்தையும் விட்டுத்தள்ளு. என்னைப்போலை கண்டிபாய் கௌரவமாய் வீரியமான முதலாளியாக நடந்துகொள்.யு என்று தந்தையார் கொட்டியவார்த்தைகளை ஆதவன் தூசாகவேயுதறிவிட்டு, தானுமொரு தொளிலாளியாகவேநின்று செயற்பட்டான்.

எந்தவிதமான விருந்துகளுக்கும் பெரும்கேளிக்கைகளுக்கும் போவதை இயன்றவரை தவிர்த்தான். ஆடம்பரமான உடைகளையும் அவன் அணிவதில்லை. விலையுயர்ந்த கார்களை தம்பியாரும் தங்கையும் வைத்திருந்தாலும், இவன்மட்டும் சாதாரணமான காரையே வைத்திருந்தான். இவனுக்கு நண்பர்களும் மிகக்குறைவு.

மாரீயா வலிந்துவந்து பேசுவாள். அவளின் பேச்சுக்களிலும் குறும்புகளிலும் நாட்டம்கொண்டவனாக அவன் நடந்துகொள்வதில்லை. ஒருநாள் அவள் தனது குடும்பத்தின்

நிலைவரம்குறித்து மனம்நொந்து கூறுவதை மிகவும் கவனத்தோடுகேட்டான்.

ஏேன்னுடைய அப்பாவும் ஒரு கட்டிடத்தொழிலாளிதான். தச்சுவேலையும் செய்வார். அவர் நல்லஉழைபாளி. ஆனாலும் மோசமான குடிப்பழக்கமுடையவர். நான்தான் குடும்பத்தில் மூத்தவள். இரண்டு தங்கச்சிகள் இருக்கினம். அம்மாவின்ஊர் இங்கிலாந்து. காதற்கலியாணம் செய்துகொண்டவர்கள். அம்மாகாட்டிய அக்கறையால் நங்கள் நன்றாகப்படித்தோம்.

நான் இப்போதுபேசுகிற இங்கிலீசுப்பாசையும், கட்டிடவரைவாளர் படிப்பும், ஓவியங்கீறும் திறைமையும் அம்மாவின் பணவுதவியால் பெற்றுக்கொண்டவைதான். அப்பா தனதும், நண்பர்களதும் ஒத்துளைப்பால் எங்களுக்கு நல்லதொருவீடு கட்டித்தந்துள்ளார். அவர் இப்போது உயிரோடில்லை.

அளவுக்குமீறிக்குடித்து, நோயாளியாகியதால் இறந்துபோனார். அம்மா தையற்காரி கடைகளின் ஓடர்களைப் பெற்றுவந்து, உடுப்புகளைத் தைத்துக்கொடுப்பார். அந்த உழைப்பாலேயே நாங்கள் உண்டு உயிர்வாழுகின்றோம். எனது படிப்பிற்குத்தகுந்த வேலையும் ஊதியமும் அங்கே கிடைக்கவில்லை. வேலைதேடி முயன்றேன் முடியாதுபோனது.

உள்நாட்டைவிட இங்கே அதிகமாக உழைக்கலாமென்று அறிந்ததாலைதான் உங்கேவாழுகின்ற அம்மாவின் உறவினரொருவரின் உதவியைப்பெற்று, தற்காலிகமான வீசாவில் வந்தனான். என்னுடைய வேதனைகளை மறப்பதற்காகவே வேடிக்கையாகப் பேசியும், தகுதியைமறந்து நட்போடு நடந்தும் கொள்ளுகின்றனான். உங்களின் மிகவுமுயர்ந்த பண்பும், தொழிலாளார்களோடு இணைந்து நீங்களும் கலந்துபேசி வேலைசெய்யும் அதிசயமும் என்னை வியக்கவைக்கின்றதுயு

அவள், தனது கதையைச்சொல்லி முடிக்கும்போது, கன்னத்தால் வழியும் கண்நீரைத்துரிதமோடு துடைத்துக்கொண்டாள். இரக்கம்மேலிட்ட உணர்ச்சியால், ஆதவன் அவளுக்குத்தான் என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் மெல்லிய புன்கையை வலிந்து வரவழைத்துக்கொண்டு, அவளது புண்பட்டமனத்தைத் தேற்றமுனைந்து, அந்தக்கருஞ்சுருள் மயிரடர்ந்த தலையைத்தடவித் தட்டிக்கொடுத்தான்.

தனது, தந்தையாரை நினைக்கும்போது மனத்தில் ஏதோபயவுணர்வு எழுந்து அவனை எச்சரித்தது. அகந்தையுடன் பிதுங்கிய அவரது கீழுதடும், ஏளனம்மிகுந்த சிவந்தகண்களும், எந்தக்கொடுமையஇயும் செய்யத்தயங்காத அவரின் விறைத்தமனமும், பெருத்த உடலும் கோபமும், பணத்திமிரும் அவனை மிரட்டியன.

கோடிக்கணக்கான சொத்துக்கு வாரிசானதான் அவற்றையெல்லாம் அனுபவிக்காததும், அலுவலகத்தையே தனது வீடாக்கித்தான் தங்கிவழ்வதும், தான் இந்த ஏழைப்பெண்ணோடு பேசிப்பழகுவதும், அவரறிந்தால் பெரும்பூகம்பத்தை உண்டாக்கும் என்பதை அவன் அறிவான்.

மனிதவாழ்கையில் புரையோடிக்கிடக்கும் முதலாளி தொழிலாளிப் பாகுபாட்டை வெளிச்சம்போட்டுக்காடிய தனது கல்லூரிப் பேராசியரை எண்ணும்போதெல்லாம் தன்னை உலுக்கியே உசார்படுத்தும் ஒரு அற்புதமான புனிதம் தனக்குள் தோன்றுவதை அவன் உணர்ந்து அதீதசக்திமிகுந்ததோர் உறுதிபெறுவான்.

மாரீயா அவனையே உற்றுநோக்கியவளாக அங்கே இருக்கவே, ேவேலைநேரம்முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள். நாங்கள்மட்டும் வேலைத் தலத்திலேத்திலே இருக்கிறோம். நாளைக்கும் நாங்கள் நிறையப்பேசுவோம். கடைத்தெருவுக்கு நாளைக்கு நாங்கள் போகவேண்டிய

அலுவலொன்று இருக்கிறது. அப்பா உனக்கு ஒருபரிசு வாங்கிக்கொடுக்கச் சொன்னவரல்லவா. அதைவாங்குவம்.யு என்று,

ஆதவன்கூறவும், களிப்பின்ஒலி அதிரவே, அவள் சிரித்தவாறு, அதை நீங்கள் தந்துவிட்டீர்களே.. விலைமதிப்பற்ற உங்களின் அன்பைவிட உயர்ந்ததரமானபரிசு கடைத்தெருவில் கிடைக்காது. எனினும் நாம் இருவரும் நாளைக்குப்போவம்யு என்று, குதூகலத்தோடு கூறியவள், பிறப்படவே மழைகொட்டத் தொடங்கியது. ஆதவன் அவளைத் தனது காரில் ஏற்றிக்கொண்டு கிழம்பினான்.

இத்தனை நிகழ்வுகளையும் அவதானித்துக் கொண்டிருந்த யாரோஒருவர் ஒன்றை யிரண்டாக்கிஅவனின் தந்தையாருக்குக் கூறவே, சினங்கொண்டுசீறிய அவர், தொலைபேசியில் பொலிசாரோடு பேசினார்.

மோரீயா என்னும் போலாந்து தேசத்தப் பெண் எனது தொழிலகத்தில் வேளையாளாக இருந்தவள். அவளின் வீசாக்காலம் முடிவடைந்துவிட்டதை அறிந்து கொண்டேன். அவளைப்பற்றிய மேலதிகத் தகவல்களைச் சொல்லவேண்டும். எனது முறைப்பாட்டை எழுதித்தருவதற்கு நான் வரலாமாயு என்றுவினாவவும். அவருக்கு அனுமதிகிடைக்கவே, பொலிஸ்நிலையத்தை நோக்கியவராக காரில்பறந்தார்.

அவரின் குற்றச்சாட்டுக்களைப் பதிவுசெய்த பொலிசார், அவள் தங்கிவாழ்ந்த இடத்தக்ச் சென்று, அவளையளைத்துப் பேசினார்கள். அவளின் வீசா முதலானவற்றைப் பார்வையிடனர். அவையாவும் காலாவதியாகிப் போனதை அறிந்துகொண்டதால், அவளின் ஊருக்கு அவளை அனுப்பிவைத்தனர்.

மாரீயா தனது ஊருக்குப்போன செய்தியறிந்த ஆதவன் மனச் சஞ்சலமுற்ற போதும், அலைபேசியில் அவளை அழைத்து, அகமகிழ முகம்பார்த்து உரையடினான்.

